# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகை

மலை –1 அருவி –5




விலை 50/-

# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகை

எழுத்தாளர்களே!

உங்கள் கைவண்ணத்தில் உருவான ஆக்கங்களிற்குக் களம் அமைத்துத் தர நாங்கள் தயாராக உள்ளோம்.

உங்கள் ஆக்கங்கள்

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நாவல்
- நூல் விமர்சனம்
- நகைச்சுவைத் துணுக்குகள்
- கலை இலக்கிய நிகழ்வு பற்றிய செய்திகள்...

எதுவாகவும் இருக்கலாம். ஆக்கத்துடன் உங்கள் புகைப்படம் ஒன்றையும் இணைத்து அனுப்பிவையுங்கள் .


விளம்பரம் செய்தால் வியாபாரம் பெருகும்!

விளம்பரதாரரின் நன்மை கருதி 2012 ஜனவரி முதல் தமிழருவி சஞ்சிகையின் விளம்பரக் கட்டணங்கள் பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பின் அட்டை | :- 10000/- |
| பின் உள் அட்டை | :- 6000/- |
| முன் உள் அட்டை | :- 6000/- |
| உள்முழுப்பக்கம் | :- 8000/- |
| உள் அரைப்பக்கம் | :- 4000/- |

இந்த அரியவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

விளம்பரக் கட்டணத்தை மணியோடர் மூலமாகவோ காசோலை மூலமாகவோ அனுப்பலாம். விளம்பரம் செய்ய வேண்டிய விடயமும் தெளிவான எழுத்தில் எழுதி அனுப்பப்பட வேண்டும்.


அனுப்ப வேண்டிய முகவரி,


த.கணேசமூர்த்தி
இயக்குனர், உதவி ஆசிரியர்
தமிழருவி,
சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு.
தொ.இல :- 077 7743055

> வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
> விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
> தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
> செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
> எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
> இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


இயக்குநர், உதவி ஆசிரியர் :

த. கணேசமூர்த்தி

பிரதம ஆசிரியர் :

ம. பா. மகாலிங்கசிவம்

கௌரவ ஆலோசகர் :

சிவத்தமிழ் வித்தகர்

சிவ. மகாலிங்கம்



முகவரி:

சிவகுல வீதி,

உரும்பிராய் மேற்கு,

உரும்பிராய்.

தொலைபேசி :

077 7743055

021 490 7619

அலுவலக முகவரி

தமிழருவி,

பலாலி வீதி,

டிப்போ அருகாமை,

உரும்பிராய்.

E.mail :

tkm.tamilaruvi@gmail.com

Skype : tkm.tamilaruvi


## ஆக்கங்கள் தேவை......

தமிழருவி சஞ்சிகையின் 5ஆவது இதழ் இப்போது உங்கள் கரங்களிலே தவழ்கிறது. குறித்த பிரதேசத்தின் குறித்த சில பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சஞ்சிகை இன்று ஓரளவிற்கேனும் பரந்து விரிந்து புதிய பிரதேச மாணவர்களின் ஆக்கங்களையும் பெறும் வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. விற்பனையும் அதிகரித்துள்ளது.

எமது சஞ்சிகையின் வாசகர்களிற் பெரும்பாலானவர்கள் மாணவர்களாகவே இருக்கின்ற நிலையில் தமது பாடத்துறைகளுடன் தொடர்புடைய மேலதிக விளக்கங்களாக இருக்கக்கூடிய விடயங்களையே அவர்கள் வாசிக்க விரும்புகின்றனர். இவ்விருப்பத்தை நேரிலும், கடிதம் மூலமும் எமக்குப் பலதடவை தெரிவித்தள்ளனர்.

இத்தகைய ஆக்கங்களை எழுதக்கூடியவர்கள் கல்வித் துறையிற் பணியாற்றும் அதிபர், ஆசிரியர் முதலியோரே. எனவே அதிபர்களும் ஆசிரியர்களும் உங்கள் பாடத்துறை சார்ந்த, மாணவரின் அறிவை வளப்படுத்தவும், பரீட்சைப் புள்ளிகளை அதிகரிக்கவும் பயன்படக்கூடிய விடயங்களைக் கட்டுரைகளாக எழுதி அனுப்பும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இக் கட்டுரைகள், உங்கள் அறிவும் அனுபவமும் உங்கள் பாடசாலைக்குள் மட்டும் பயன்படும் நிலையை மாற்றி ஏனைய பாடசாலை மாணவருக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இது மட்டுமல்ல, கலைத்துறையில் தொடர்ந்து ஈடுபடும் மாணவருக்குக் களம் அமைத்துக்கொடுக்கவே "மாதம் ஓர் எழுத்தாளர் அறிமுகம்" என்னும் பகுதி எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இப்பகுதியிலும் குறித்த சில பாடசாலைகளின் மாணவர்களையே திரும்பத் திரும்ப அறிமுகப்படுத்த வேண்டிய துரதிஷ்ட வசமான நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர் (குறிப்பாகத் தமிழாசிரியர்) போன்றோர் தமது பாடசாலையிலுள்ள திறமை வாய்ந்த மாணவரை அறிமுகப்படுத்துவதில் உற்சாகத்துடன் செயற்படாமையே இந்நிலைக்குக் காரணமாகும்.


குறித்த பாடசாலையில் கவிதை, சிறுகதை முதலியவற்றை எழுதுவதில் திறமை வாய்ந்த மாணவர்கள் இருந்தும், அவர்களை அறிமுகப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் அவர்கள் குடத்துள் விளக்குப்போல மறைந்து இருக்கிறார்கள் என்றால் அது மிகவும் கவலைக்குரிய விடயம் ஆகும்.

எனவே தமிழருவி தருகின்ற இந்த வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளத் திறமை வாய்ந்த மாணவரை வழிப்படுத்துவது அதிபரதும் ஆசிரியர்களதும் கடமை ஆகும்.

உங்கள் பாடசாலையில் கவிதை அல்லது சிறுகதைத்துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டுள்ள மாணவரை இனங்கண்டு அவர்கள் பற்றிய விபரம், புகைப்படம், எழுதப்பட்டவற்றுள் சிறந்த ஆக்கம் என்பவற்றை விரைவில் அனுப்பி வைப்பீர்கள் என ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

10.11.2011

ஆசிரியர்கள்.



# வாழும் கலைக் கோயில் கலாநிதி ஆறுதிருமுருகன்

யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருந்த "ஆழப்பதிந்த வேர்கள்" நூல் வெளியீட்டிற்குச் சென்றிருந்தேன். அந்நூலின் வெளியீட்டு உரையினை நிகழ்த்திக் கொண்டிருந்தவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள்.

அவர் உடுத்திருக்கும் உடை போலவே, அவர் உச்சரிக்கும் தமிழ்ச் சொற்களும் இலகுவாகவும், தூய்மையாகவும் இருந்தன. அவை நம் எல்லோரினது காதுகளிலும் ரீங்காரம் செய்தன.

தான் சொல்ல வந்த சம்பவத்தினை கதையாகச் சொல்லும் போது மனது நிறைந்த அமைதி ஏற்பட்டது.

அவர் தொடர்ந்து பேச வேண்டும் போலவும் அதை நாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் போலவும் இருந்தது.

அந்நிகழ்விற்கு பிறகு ஆறுதிருமுருகன் எங்கு உரை நிகழ்த்தச் சென்றாலும் அங்கு சென்று அவருடைய உரை கேட்பது எனது வழக்கமான ஒரு விடயமாக இருக்கும். வடமராட்சியில் ஒரு நாவல் நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்தார். தனது உரை முடித்துப் போவற்கு ஆயத்தமானார்.

ஓடிச் சென்று "சேர்…" என்றேன். திரும்பி நின்று "ஆ… என்ன தம்பி?" என்றார். என்னைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தேன்.

"உங்கள் உரை எங்கு நிகழ்ந்தாலும் அங்கு நான் வந்திருக்கிறேன். என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றும் கேட்டேன். "ஓம் ஓம்…." என்றவர் "நல்லது தம்பி. நீங்கள் எப்பிடி இருக்கிறியள்?" என்று அன்பு கலந்து என்னோடு உரையாடினார். ஐந்தாறு நிமிடங்கள் வரை அவருடன் உரையாடினேன். மன நிறைவு கிடைத்தது.

"சேர்,,!, செந்நீரும் கண்ணீரும் என்கிற எனது முதலாவது சிறுகதைத் தொகுதியினை வெளியிட இருக்கிறேன். அந்நூலிற்கான ஆய்வுரையினை நீங்கள் தான் நிகழ்த்த வேண்டும். அது பற்றி உங்கள் வீடு வந்த கதைக்க இருக்கிறேன்." என்று சொன்ன போது

"அதுக்கென்ன தம்பி…! கட்டாயம் நான் வருவேன். உங்கள் நூல் வெளியீட்டுக்கு இரண்டு கிழமைக்கு முன்பு என்னுடன் கதைத்து விட்டு வாங்கோ." என்றார். மனது சந்தோச வெள்ளத்தில் ஆனந்தக் கூத்தாடியது.

அவர் சொன்னது போலவே எனது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்தார். ஆய்வுரை செய்தார். எனது நண்பர்கள், உறவுகள், எனது மாணவர்கள் எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள்.

"சூப்பர் பேச்சு…! கேட்டுக் கொண்டே இருக்க வேணும் போல இருந்தது. வீரபத்திரர் திருவிழா காலங்களில், சேரைக் கூப்பிட்டு சொற்பொழிவு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கோ.." என்று, என்னைப் பலரும் வற்புறுத்தினர்கள்.

கொழும்பு பழைய மாணவர் சங்க மூலம் தனக்கு கிடைத்த நிதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஸ்கந்தன் கோயில் திருப்பணி செய்துள்ளர். பாடசாலை ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாருக்கு உருவச்சிலை நிறுவி இருக்கிறார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தம் சொந்தச் செலவில் ஆறுமுகநாவலருக்கு சிலை ஒன்றினையும் ஸ்தாபித்துள்ளார்.

திருகோணமலை அலஸ்தோட்டத்தில் வாழும் 1200 அகதிக் குடும்பங்களின் வழிபாட்டிற்காக ஆனந்த விநாயகர் ஆலயம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் கிளிநொச்சியில் குடியேறிய மக்களுக்காக 20 இற்கும் மேற்பட்ட நாகதம்பிரான் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியில் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் வழிபாட்டிற்காக வித்தக விநாயகர் ஆலயம் அமைத்துக் கொடுத்துள்ளார். இதற்காக இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்திடமிருந்து நிதி பெற்று வழங்கி யிருக்கின்றார்.

தொடர்ந்தும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறப்பணிகளுக்கு உதவி வருகின்றமை முதலிய இவரின் ஆன்மீகப் பணிகள் பற்றி சொல்லி முடித்தபோது எம் ஊர் மக்கள் திகைத்துப் போய் நின்றார்கள். நான் கூறியவற்றை ஏற்றுக் கொண்ட என்னவர்கள், "சேருக்கு, நேரமுள்ள ஒரு காலத்தில் எங்கள் கோயிலுக்குக் கூட்டி வாருங்கோ" என்றார்கள்.

"கட்டாயம் எங்கள் ஆலயத்திற்கு வருவார். நீங்கள் விரும்புகிறது போல நல்லதொரு சொற்பொழிவு செய்வார்" என்று அவர்களின் விருப்பினை மிகவும் சாந்தமாக அடக்கி வைத்தேன்.

தனக்கென் வாழாமல் பிறருக்காக வாழும் அவரின் புனிதத்தை யாரும் வார்த்தைகளால் வடித்து எடுத்து விடமுடியாது.

இலண்டன் அநாதைகள் அறக்கட்டளை உதவியுடன் கண்பார்வை அற்ற வாழ்வகச் சிறுவர்களுக்கு 16 இலட்சம் ரூபா செலவில் உடுவிலில் நிரந்தர இருப்பிடம் உருவாக்கி கொடுத்திருக்கிறார்.

கணவனை இழந்து வீடு வாசல்கள் இன்றித் தவிக்கும் இளம் விதவைக் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுத்து 'சிவயோகம் அன்னையர் குடியிருப்பு' என்கிற மாதிரிக் கிராமத்தை உருவாக்கி யிருந்தார்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய இடங்களில் உள்ள சைவச் சிறுவர் இல்லங்களுக்கு இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிதி உதவியுடன் வருடந்தோறும் நிதி கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட புற்று நோயாளர் கருணை நிதியம் மூலம் சுமார் 13 இலட்சம் ரூபா தொகையினை புற்றுநோயாளர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளார்.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடை பெற்ற தொடர் சொற்பொழிவுக்காக வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் மூலம் விதவைகளுக்குத் தையல் இயந்திரம் வழங்கியிருக்கின்றார்.

இணுவில் கிராமத்தில் அறிவாலயம் அமைப்ப தற்காக கனடா, இலண்டன் நாடுகளில் வாழும் இணுவில் மக்களிடம் இருந்து உதவி பெற்றுக் கொடுத்திருக்கிறார். இந்துக்கள் கண்தான சபையை உருவாக்கி கொடுத்தி ருக்கிறார்.

செவிப்புலன் குறைந்த மாணவர்களுக்கு அவுஸ்ரேலிய மருத்துவரின் உதவியினைப் பெற்றுக் கொடுத்து அதற்கான குறைநீக்கக் கருவிகள் பெற வழி ஏற்படுத்தியிருந்தார்.

இலண்டனில் சொற்பொழிவு ஆற்றியமைக்காக அங்கு வாழும் மக்கள் வழங்கிய நிதியின் மூலம், அரியாலை யுத்த அனர்த் தங்களால் அழிந்து போன மரங்களின் மீள் நடுகைச் செயற்றிட்டத்திற்காக 600 தென்னங்கன்றுகள் வழங்கிப் பசுமைப்புரட்சி ஏற்படுத்திய வள்ளலாகினார்.



மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையை கோண்டா விலில் நிறுவியிருக்கிறார்.

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம் அமைவதற்கு முக்கிய ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் கிளை நிறுவனத்தை இணுவிலில் ஆரம்பிப் பதற்காக, காணி கொள்வனவு செய்யும் சபைக்கு நிதியினை வழங்கியுள்ளார்.

மேலும் ஆன்மீகச் சொற்பொழிவுகளின் போது மோதிரம், கழுத்துச்சங்கிலி, கைச்சங்கிலி போன்ற பவுண் நகைகளை, இவர்மேல் அன்புடையோர் இவருக்கு வழங்கி மகிழ்ந்திருக்கிறார்கள். ஆனாலும், அத்தனை அன்பளிப்புக்களையும் அனாதைகள் இல்லத்தில் வாழும் சிறுவர்களுக்கு ஒரு வரிசையில் வழங்கி மகிழ்ந்து வருகிறார். அதனால் சிறுவர்கள் அடையும் மகிழ்வுடன் தானும் சங்கமமாகி விடுகிறார். ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காணலாம். எங்கள் ஆறுதிருமுருகன் சேரோ அனாதைச் சிறுவர்களின் சிரிப்பில் இறைவனைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். சிறுவர்களின் மகிழ்வினால் திகழ்ந்தொளிக்கும் செஞ்சொற்சொல்வர் ஏழை மக்களுக் கெல்லாம் கண்காணும் கடவுளாகவே விளங்கி வருகின்றார்.

செஞ்சொற்சொல்வரின் ஆன்மீகப் பணிகள், சமூகப்பணிகள், மருத்துவப்பணிகள் என்று நீளும் வரிசையிலே கல்விப்பணி என்பது எம் எல்லோரையும் நெஞ்சுருகி கண்ணீர் மல்க வைத்திடும்.

சுன்னாகம் திருஞானசம்மந்தர் வித்தியாசாலையில் ஆறு. திருமுருகன் அறக்கட்டளை நிதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அங்கு கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு இந்நிதியம் மூலம் உதவி புரிந்து வருகின்றார்.

அதுமட்டுமில்லாமல் சப்பிரகமுவா, ராஜரட்டை பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு உதவி பெற்றுக் கொடுக்கின்றார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நூல்நிலையத்திற்கு எவ்வளவோ பெறுமதியான மதிக்க முடியாத அளவுக்கு பெரும் தொகை புத்தகங்களை வழங்கியிருக்கின்றார்.

தென்னிந்திய பிரபல பாடகர் ஒரு பேட்டியில், "நான் பாடிய பாடல்களிலே ஈழத்து மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் பாடலான, 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதியருள் வாயம்மா' என்ற பாடல் வரிகள் போல் மிகவும் செழுமையும், நேர்த்தியும் நிறைந்த ஒரு பாடலை இதுவரை பாடியதில்லை" என்று புகழாரம் சூட்டியிருந்தார்.

அவ்வளவு சிறப்பு மிக்க வீரமணி ஐயாவின் பதிப்புக் குள்ளாகாத நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டும் இருக்கிறார் செஞ்சொற்செல்வர்.

தனது ஆசான் இ.மகாதேவா அவர்களின் சிறுகதைத் தொகுதியை யாழ்ப்பாணம் இலக்கிய வட்டத்தின் ஊடாக வெளியிட நிதி வழங்கி உதவி செய்திருக்கிறார்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் சங்கத்திற்கு மருத்துவப் பணிகள் என்று செஞ்சொற்செல்வரின் பணிகள் முடிவிலி வரை நீள்கின்றன.

யாழ்ப்பாணத்துக் கந்தபுராணக் கலாசாரம் மழுங்கடிக்கப்படாமல் கட்டிக் காப்பதன் தாற்பரியம் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பின்னர் ஆறுதிருமுருகன் அவர்களையே அதிக பங்கு சார்ந்து இருக்கிறது.

யாருக்குமே ஒரு குறிக்கோள் இருந்தால் தான் வாழும் வாழ்க்கைக்கே அர்த்தம் இருக்கும். செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களின் சேவையினை வார்த்தைகளால் மட்டும் அளந்து விட முடியாது.


மக்கள் சேவை மகேசன் சேவை என்பார்கள். இவ்வகையில் மக்கள் சேவையில் தம்மை ஈடு படுத்திய வர்களை விருதும் புகழும் தேடி வருவது இயல்பானதே. இம்முறை அவருக்கு யாழ். பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியதன் மூலம் தன்னையே கௌரவப்படுத்திக் கொண்டுள்ளது. மிக இளம் வயதிலே ஒருவரை இந்த விருது தேடி வந்துள்ளமை நம்புதற்கரிய சாதனையாகும்.

அவர் மேலும் மேலும் பல விருதுகளைப் பெற்றுச் சேவையில் உயர்ந்து விளங்க வாழ்த்துகிறேன்.

சமரபாகு சீனா உதயகுமார்.

# உலகத்து நாயகி

'பாட்டுக்கொரு புலவன் பாரதி'; பாரதப் புதல்வன் பாரதி; சக்தியை 'உலகத்து நாயகியே முத்துமாரியம்மா' என அழைப்பதில் பல பல நியாயங்கள் நீதியாக நிற்கின்றன. பூமியைப் பூமாதேவியென்றும், தண்ணீரைக் கங்காதேவி யென்றும், ஆகாயத்தை ஆகாசவாணியென்றும் அழைக்கின்றனர். இவற்றை விட சக்தி, கல்விக்கரசி கலைமகள், செல்வத்திற்கரசி திருமகள், இலக்குமியென அஷ்ட (எட்டு) இலட்சுமிகளாக விளங்கு கின்றாள். இதனால் உலகத்து நாயகி சக்தியென்பது உறுதியா கின்றது.



முழுமுதற்பொருளாகிய சிவபெருமான் வல்லபை என்று கூறப்படுகின்ற சக்தியைக் கொண்டே ஐந்து தொழில்களையும் செய்கிறார் என்பது சித்தாந்தத்தின் முடிபாகும். அத்தகைய சக்தியைத் தனது இஷ்டவழிபடு தெய்வமாகக் கொண்ட பாரதியார் அன்றைய மக்களின் வாழ்வு மூலம் மூன்று கால மக்களின் வாழ்வைத் தன் தீர்க்கதரிசனமான ஞானக்கண் கொண்டு பார்க்கிறார். உலகம் எப்படியெல்லாம் மாறி மாறி நடக்கும் நடக்கப் போகிறதென்பதை முத்துமாரியம்மனிடம் கூறிக் கண்ணீர் விடுகின்றார்.

இறைவியின் அருளால் மனிதப் பிறவியெடுத் தவர்கள் முதலில் இறைவியே தஞ்சம், இறைவியே துணை என்று இறைவியைச் சரணடைந்து அமைதியான ஆனந்தமான வாழ்க்கையில் ஒன்றே குலமாய் ஒருவனே தேவனாக யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றிருந்தார்கள். சிறிது காலங்களின் பின் நாகரிகம் என்ற பேய் முதலாகப் பல பேய்கள் பிடித்ததும் இதுவரை புனிதமாக, விசுவாசம் நேர்மையாக இருந்த வர்களின் மனம் மாறுபடத் தொடங்கிவிட்டது. ஐம்புலன் களின் சேஷ்டைகள் மனிதனின் எண்ணக்கருவில் குடி புகுந்ததும், அவன் குழப்பமடைந்துவிடுவதைக் காண முடிகிறது.

மனம் அமைதி அடைவதற்காகப் பல நூல்களைக் கற்றபோதும் பல அறிஞர்களிடம் ஞான அறிவுரைகள் கேட்ட போதும் முன்பே ஐம்புல வேடர்களாலும், நவநாகரிகப் பேய்களாலும் பெருங்காயம் பாசி போல் பீடிக்கப்பட்டு பழக்கப்பட்ட மனம் அமைதி அடையவில்லை. என் செய்வது ஒரு பயனுமில்லையே. நிலையான அமைதிப் பொருள் எங்கும் காணவில்லை. அதனால் முத்துமாரி தான் முடிவானது.

அம்மா! தாயே துணியில் நன்றாக அழுக்குப் படிந்தால் அதனை நீக்குவதற்குப் பல சாதனங்கள் உண்டு. உடம்பில் வியர்வை முதலிய அழுக்கினால் துர்நாற்றம் வீசும். புண் முதலிய பிணிகள் ஏற்படும். அதனால் உடம்பினை, உடம்பின் தோலினைப் புனித மாக்க நறுமணம் உள்ள பல சாதனங்கள் உண்டு. ஆனால் மனதில் படிந்த அழுக்கினை நீக்குவதற்கு ஒரு வழியுமில்லை. மன அழுக் கென்பது வஞ்சகம், பொறாமை, கோபம் போன்ற தீய பண்புகளாகும். இஃது கற்றவர்க்கும் கல்லாத வர்க்கும் மிகவுண்டு என்பது பாரதியாரின் தீர்க்கமான முடிவாகும்.

மனிதனுக்குப் பலவிதமான பிணி அதாவது நோய்கள் ஏற்படுவது இயல்பு. இந்தப் பிணியைத் தீர்க்க மாற்று வழிகள் பல இருக்கின்றன. அந்த மாற்று வழிகளால் உடம்பில் ஏற்பட்ட பிணிகளை அகற்றிவிடலாம். ஆனால் மனிதனின் அகத்தில் அறியாமையாகிய பேதமையை அகற்ற எந்த வழியுமே இல்லை. உலகத்தில் ஏற்படுகின்ற கேடுகள் யாவும் அறியாமையாலாகும். பாரதியாரின் இக்கூற்றுக்களை நன்றாக மனதில் ஆழப்புதைத்துச் சிந்தித்தால் உண்மைகள் பலப்பல உதிக்கும். பாரதியார் அனுபவத்தில் கண்ட உண்மைகளை, மக்கள் அறிந்து



திருந்த வேண்டிக் கடைசி வரியில் "அணிகளுக்குகொரு எல்லையில்லாய் அடைக்கல மிங் குனைப் புகுந்தோம். எங்கள் முத்து மாரியம்மா" என மக்களை வாழ்வாங்கு வாழும் நல்வழிக்கு ஆற்றுப்படுத்தியுள்ளார்.


**மாதாஜி**
குப்பிளான்

# புலமைப்பரீட்சை அழுத்தம்



திருமதி. விஜிதா பிரதாபன்
யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை

ஆரம்பக்கல்வி மாணவர்கள் மனித உடல் வளர்ச்சியில் 2ஆவது கட்டமான பிள்ளைப் பருவத்திலேயே இருக்கின்றனர். இவர்கள் இப்பருவத்திற்கே உரிய தனிப்பட்ட உடல், உள, தொழிற்பாட்டுத் தேவைகளை நாடி நிற்கின்றனர். விளையாட்டையும், மகிழ்ச்சியையும் சகபாடிகளுடன் சேர்ந்து கொண்டாடுவதையே எதிர்பார்க்கின்றனர். இக்குழந்தைகளின் உடல் உளத் தேவைகளுக்கேற்பவே கல்வியியலா ளர்களும் குழந்தை உளவியலாளர்களின் ஆய்வு முடிவுகளுக்கிணங்க ஆரம்பக்கல்வி முறையை ஆடல், பாடல், விளையாட்டு முறைகளுடன் கூடிய தாகத் திட்டமிட்டுள்ளனர். இதற்கமையவே ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் பயிற்றப்பட்டுக் குழந்தை களுக்குக் கற்றல் சலிப்பின்றிக் கரும்பாக இனிக்கும் வண்ணம் கற்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.



ஆனால் இன்றைய பெற்றோர் எதிர்பார்ப்பது என்ன? பாடசாலையை விட்டு வந்ததும் பிள்ளையின் அப்பியாசக் கொப்பியில் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன என்றே பார்க்கின்றனர். அது வெறுமனேயிருந்தால் அங்கு ஒரு படிப்பும் நடப்ப தில்லை என்று ஆசிரியர்களிடம் குறைப்பட்டுக் கொள்கின்றனர். எனவே ஆசிரியர்களும் இத்தகைய பெற்றோரைத் திருப்திப் படுத்தவே முனைகின்றனர்.


படிப்படியாகத் தொடரும் இந்நிலையானது தரம் 05 புலமைப்பரீட்சையின் போது இன்னும் உச்சமடைகின்றது. காலையில் ரியூசன் பின்னர் பாடசாலை. பாடசாலையில் மேலதிகமாக வகுப்பு, மாலையில் ரீயூசன், இரவில் வீட்டுப்பாடம். இப்படியாக பிள்ளைகள் அலைக்கழிக்கப்படுகின்றனர். "என்ர பிள்ளை இந்த வருஷம் ஸ்கொலஷிப்" என்ற கனமான வார்த்தைகள் பல பெற்றோரிடமிருந்து ஏக்கமாக வெளிவருதை நாம் கண்டும், கேட்டும் இருக்கிறோம். மாணவரது இயல்பான திறமைக்கு இடமளிப்பதை விடுத்து "புலமைப்பரிசில்" என்பதற்காக அவனை / அவளை படாதபாடுபடுத்தும் பெற்றோர் ஏராளம், தாராளம். ஒரு உயர்தர வகுப்பு (A/L) மாணவனது நிலையில் தரம் 05 பாலகனும் நடத்தப்படுகிறான். இவற்றை விடவும் "என்பிள்ளை எல்லாத்துறைகளிலும் மிளிர வேண்டும்" என ஒரே பிள்ளையை நடனம், சங்கீதம், வாத்திய இசை என்று எல்லாத்துறைகளுக்கும் கலைத்துக் கலைத்து அவனைக் களைப்படைய வைக்கின்றனர்.

இதன் பயன் என்ன? ஓய்வில்லை, உறக்கமில்லை, விளையாட்டு இல்லை. மேலும் இன்றைய சூழ்நிலைகளில் எந்தப் பொழுதுபோக்குச் சாதனங்களும் இல்லாத நிலையைப் பெற்றோர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர். அளவுக்கு மிஞ்சிய சுமை இந்தச் சிறார்களின் மூளையில் திணிக்கப்படுகிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இதனால் கல்வி பிள்ளைக்குக் கசக்கத் தொடங்கும். புத்தகம் பாரமாக மாறும், பாடசாலை வெறுக்க ஆரம்பிக்கும். ஓய்வின்றி உழைத்த மூளையின் செயற்பாடுகள் குறையும். அடுக்கடுக்கான பயிற்சிகளின் விளைவால் சுயசிந்தனை மழுங்கடிக் கப்படும், சுறுசுறுப்பும் உற்சாகமும் குறையும், சோர்வும் சோம்பலும் மிஞ்சும். கல்வியில் வெறுப்பே தோன்றும்.


ஆகவே அன்பான பெற்றோரே, ஆசிரியர்களே, வயதுக்கு மீறிய கல்விச் சுமையை இளஞ்சிறார்களின் தலையில் கட்டி விடாதீர்கள். தேவையற்ற திணிப்புகளால் அவர்களின் சுய திறன்கள் ஆற்றல்கள் சிந்தனைத் திறன்களை நசுக்காதீர்கள். தன் வழியே பயணம் செய்ய அவனுக்கு வழிவிடுங்கள். நீங்கள் அவர்களுக்கு வழித் துணையாகலாம். ஆனால் நீங்கள் அவர்களின் "வழி" என்று ஆகாதீர்கள். அவன் அவனாக, அவள் அவளாக முன்னேற வழி செய்யுங்கள். தானாகக் கனியும் கனியே சுவையும், உயிர்ச் சத்துக்களும் நிரம்பி யதாக இருக்கும். எனவே இன்றைய பிஞ்சுகளின் எதிர் காலம் ஆரோக்கிய மானதாக, ஒளிமயமானதாக அமைய சமுதாயத்தினரும், பெற்றோர் ஆசிரியர்களும் பூரணமான பொறுப் புணர்ச்சியுடன் இருப்பது அவசியமாகும்.

## பரீட்சைகள் படுத்தும் பாடு

பரீட்சைகள் அவசியம் தானா? கல்வி கற்பவர் கிரகித்தவற்றை அளவிடுவதற்கு பரீட்சைகள் சரியான அல்லது காத்திரமான முறைகளா? நீண்டகாலமாகக் கற்ற கல்வியைக் குறுகியகால நேரத்தில் நடத்தப்படும் பரீட்சைகள் துல்லியமாக மதிப்பீடு செய்ய முடியுமா? மேற்கூறப்பட்ட கேள்விகள் பரீட்சை தொடர்பாக நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வந்தாலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பரீட்சைகள் இன்றும் மிக முக்கியமானதாக இருப்பதை மறுக்க முடியாது. கற்றலினதும் கற்பித்தலினதும் தரா தரத்தை உயர்த்த வழி வகுக்கும் கல்வியினை மதிப்பீடு செய்வதற்குப் பரீட்சைகள் சரியான மதிப்பீட்டுக் கருவிகளாக இல்லாதபோதும் தற்போது கைவசமுள்ள மதிப்பீட்டுக் கருவிகளில் பரீட்சைகள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. ஆகவே பரீட்சைகள் தவிர்க்க முடியாதவை என்று கூறலாம்.



அதாவது விரும்பியோ விரும்பாமலோ அவற்றுக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும்.



கல்வியியலாளர்களின் கருத்துப்படி எல்லாப் பரீட்சார்த்திகளுமே பரீட்சைகளினால் பதற்றப் படுகிறார்கள். பரீட்சார்த்திகளின் மேல் பரீட்சைகள் பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. இவைகள் உடல் அழுத்தங்களாகவும், மன அழுத்தங் களாகவும் அமையும். மனப்பதற்றம், பரீட்சை பற்றிய பயம், மன உழைச்சல் போன்ற மன அழுத்தங் களினாலும் போதிய உறக்கமின்மை, ஓய்வின்மை, படபடப்பு போன்ற உடல் அழுத்தங்களினாலும் பாதிக்கப் படுகின்றனர். இவைகள் ஒரு விதமான தளர்வுநிலைக்கு உடலையும், மனத்தையும் இட்டுச் செல்லக் கூடியனவாகும். ஆயினும் பரீட்சைகள் தேவையற்றது எனக்கூறி ஒதுக்கிவிடவும் முடியாதுள்ளது.

## பரீட்சைகளை எதிர்கொள்ளும் வழிகள்

கற்ற கல்வியினை மதிப்பீடு செய்வதற்குப் போதுமானதாக இல்லாதபோதும் பரீட்சைகள் தவிர்க்க முடியாதவையாக உள்ளன. அவற்றை ஓரங்கட்டி விட முடியாது. பரீட்சைகள் ஒருவர் பெற்றுள்ள அறிவினைக் குறித்த நேரத்திற்குள் வெளிப்படுத்தும் திறனையே அடிப்படையாகக் கொண்டுள்ளன எனக் கூறலாம். எனவே பரீட்சைகளை எதிர்கொள்வது பற்றிய கருத்துக்களை நோக்குவோம்.

- பரீட்சைக்கு முன்னர்

(i) திட்டமிடுதல்
பரீட்சையின் காலம், பரீட்சை நேரசூசி என்பவற்றின் அடிப்படையில் நேர அட்டவணை போட்டுப் பாடங் களை மீளாய்வு செய்து படித்தல். ஒவ்வொரு பாடங்களுக்கும் உரிய நேரங்களைச் சரியாகப் பயன்படுத்துதல். கடந்த கால மாதிரி வினாக் களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறல். சந்தேகங்கள் தவறுகளை ஆசிரியரின் உதவியுடன் திருத்திக் கொண்டு தெளிவு பெறல்.

(ii) நம்பிக்கை கொள்ளுதல்
நான் பரீட்சையை எதிர்கொள்ளுவேன் படித்த பாடங்களில் தெளிவு உள்ளது என நம்ப வேண்டும். தேவையற்ற பயங்களை நீக்கி உறுதியுடன் இருத்தல். "என்னால் முடியும்" எனச் சொல்லிக் கொள்ளுதல்.

(iii) பதற்றத்தைப் போக்குதல்
பரீட்சையினால் ஏற்படும் பதற்றத்தைப் போக்க மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகளைச் செய்யலாம். சாதாரணமாக ஓய்வாக இருத்தல் விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் என்பனவும் மேலும் சுவாசப் பயிற்சிகள், சார்ந்த வழிமுறைகள், மந்திர உச்சாடனம், தியானம் போன்ற பயிற்சி களையும் செய்யலாம்.

- **பரீட்சையின் போது**

(i) குறித்த நேரத்துக்கு முன்பாகப் பரீட்சை மண்டபத் துக்குச் சென்று உரிய இடத்தில் ஓய்வாக இருத்தல்.

(ii) பரீட்சைத்தாளைப் பூரணமாகவும் தெளிவாகவும் வாசித்தல்

(iii) அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க வேண்டும். எத்தனை கேள்விகளுக்கு விடை யளிக்க வேண்டும்? கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்கள் எவை? என்பவற்றையும் வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். வினாக்களை முதல் வினா தொடக்கம் இறுதி வினா வரை வாசிக்கவேண்டும். ஏனெனில் இடையிலும் இறுதியிலும் கூட நன்கு பதிலளிக்கக் கூடிய வினாக்கள் இருக்கலாம்.

- **வினாக்களைத் தெரிவு செய்தல்**

பதில் எழுதக் கூடிய வினாக்களைத் தெரிவு செய்தல் பரீட்சையின் போது மிகவும் அவசியமானதாகும். இதன் போது சந்தேகமானவை, மயக்கம் தரும் கேள்விகள் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

- **நேரம் குறித்தல்**

வினாக்களைத் தெரிவு செய்த பின் விடை எழுது வதற்கான நேரத்தைக் கவனமெடுத்து ஒவ்வொரு கேள்விக்கும் நேரம் ஒதுக்கி விடைகளை எழுத வேண்டும்.

- **விடைகளை எழுதுதல்**

இலகுவாக எழுதக் கூடிய வினாக்களுக்கு முதலில் விடைகளை எழுத வேண்டும். விடைகளைப் பொருளுள்ளதாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும். வினாக்களுக்குரிய இலக்கங்களைச் சரியாக இடவேண்டும். உரிய படங்கள் விளக்கக் குறிப்புக் களையும் விடைகளுடன் தகுந்த முறையில் இணைக்க வேண்டும். (விடை எழுதுவதற்குப் பக்கத்திலேயே படங்கள் கீறுவதும், குறிப்புக்கள் எழுதுவதும் திருத்துவதற்கு இலகுவாக அமையும்) விடை எழுதி முடிந்ததும் அதற்கு அடிக்கோடிட்டு அந்த விடையை நிறைவு செய்யவேண்டும்.

- **விடைகள்**

விடைகள் சரியான இலக்கமிடப்படவும், தெளிவான கையெழுத்தில் எழுதப்படவும், பொருளுள்ளவை யாகவும் இருக்க வேண்டும். முதல் வினாவுக்கு எழுதப்பட்ட விடையின் தெளிவான கையெழுத்துப் போலவே இறுதியாக எழுதப்படும் வினாவுக்கான விடையின் கையெழுத்தும் இருக்கவேண்டும். (இல்லையேல் உங்கள் பதற்றத்தை வெளிப்படுத் துவதாக அது அமையும்) விடைத்தாள்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிச் சரிபார்த்துக் கட்டியபின் (கிளிப் அடித்து) மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவைகள் எல்லாம் நடமுறைப் படுத்தப்பட்டால் பரீட்சைகளை எழுதுவது இலகு வாகிவிடும். பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை தொடர்பான பயம் நீங்கிப் பெருஞ்சுமையாக இருக்கும் பரீட்சைகள் சுலபமாக மாறிவிடும்.

# செவ்வியல் தமிழிலக்கியத்தில் பெண்மை – 5


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னைநாள் ஆய்வாளர்,
கக்சுயின் பல்கலைக்கழகம்
ஜப்பான்.




பழந் தமிழர் வாழ்வியலில் பெண்மை பற்றிய கருத்துநிலைகள் காலத்துக்குக் காலம் மாறுபட்டதை இலக்கியப் பகுதிகளூடாக இன்று அறிய முடிகிறது. குறிப்பாக ஆணும் பெண்ணும் இணைந்து குடும்பமாக வாழ்வு நடத்தும்போது பெண்மை பற்றிய கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பாக மனைக்குத் தலைவியாகப் பொறுப்பேற்ற பெண்மையைப் பற்றி இலக்கியம் படைத்த தமிழ்ப் புலமைச் சான்றோர் சில பதிவுகளைச் செய்துள்ளனர். தமிழர் வாழ்வியலில் பிறபண்பாட்டுத் தாக்கங்கள் ஏற்பட்டபோது சில புதிய வரையறைகளும் வகுக்கப்பட்டதை அப்பதிவுகளூடாகக் காண முடிகின்றது.

இந்த வகையில் செவ்வியல் தமிழிலக்கியமான திருக்குறள், பெண்மை பற்றிய கருத்துப் பதிவுகளைச் செய்யும் போது வரையறை செய்ய முற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாகப் பின்வரும் குறளைச் சான்றாகக் கொண்டு இதனை நோக்கலாம்.

"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்: 55)

இக்குறளுக்கு உரைசெய்த பரிமேலழகர் வருமாறு கூறியுள்ளார்.

"பிறதெய்வம் தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று
துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்."

வள்ளுவர் குறள் இரண்டு நிலைகளை யுடைய பெண்ணின் ஆற்றலைக் குறிப்பிட்டுள்ளது. ஒன்று தெய்வத்தைத் தொழாதவள். மற்றது கொழுநன் தொழுது எழுபவள். இத்தகைய ஆற்றல் பெற்ற பெண் 'பெய்' என்று சொன்னால் மழை பெய்யும். வள்ளுவரது காலத்தில் காலையில் துயிலெழும் பெண் தன் கணவனைத் தொழுத பின்னரே துயிலெழுவாள் என்ற நடைமுறையிருந்ததைக் குறட்பா சுட்டுகிறது. அத்தகைய கற்புடைய பெண் இயற்கையையே தன் சொல்லால் செயற்பட வைக்கும் ஆற்றல் பெற்றவள் எனப் பெண்மையின் ஆற்றலை வள்ளுவர் வரையறை செய்ய முற்பட்டுள்ளார். பரிமேலழகர் பெண்மைக்கு இன்னொரு வரையறையைச் செய்ய முற்பட்டுள்ளார். பெண் திருமணமானபின் பிற தெய்வங்களைத் தொழ வேண்டியதில்லை. தான் வணங்கும் தெய்வமாகக் கணவனையே கொள்ள வேண்டும். அதுவே உண்மையான கற்பு நெறி. அந்தக் கற்பு நெறியின் ஆற்றலே இயற்கையையும் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெண்ணுக்குரிய தாக்கும் என்பதே அவர் கருத்தாயுள்ளது.

இங்கு 'கற்பு' என்பது 'கணவனைத் தொழுது வாழ்தல்' என்ற செயற்பாடாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் வள்ளுவர் கற்பு என்பதை 'மனத்திண்மை' என்ற பண்பு நலனாகவே முன்னர் (குறள் 54) குறிப்பிட்டுள்ளார். எனவே தொடர்ந்த இந்தக் குறளிலும் அப் பண்புடைய பெண்ணையே அவர் சுட்டியிருக்க வேண்டும்.

'கொழுநன் தொழுது எழுவாள்' என்ற தொடர் பிற்கால இலக்கியப் பதிவுகள் தரும் பெண்மை பற்றிய செய்திகளோடு நோக்கும் போது பிறிதொரு விளக்கத்தைத் தருவதாக உள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியும், காரைக்காலம்மையார் புராணத்தில் புனிதவதியும் தத்தம் கணவன்மாரால் தொழப்பட்ட வர்களாயுள்ளர். அதற்கு அவ்விரு பெண்களுடைய ஆற்றலே காரணமாக இருந்துள்ளது. பாண்டிய மன்னனால் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டிறந்த தன் கணவனைக் குற்றமற்றவள் என நிரூபித்தமையால் தன் மனைவியாகிய கண்ணகியைக் கோவலன் விண்ணுலகிலிருந்து வந்து வணங்கியதாக இளங் கோவடிகள் இலக்கியப் பதிவு செய்துள்ளார். மனைவி உயிரோடிருக்கும் போது இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்த தனதத்தன், முதல் மனைவி புனிதவதியின் கால்களில் விழுந்து வணங்கியதாகப் பெரியபுராணத்தில் சேக்கிழார் இலக்கியப் பதிவு செய்துள்ளார். இவ்விரு இலக்கியப் பதிவுகளையும் சான்றாகக் கொண்டு நோக்கினால் 'கொழுநன் தொழுது எழுவாள்' என்ற தொடர் குறிக்கும் பொருள் பெண் கணவனால் வணங்கப்படும் ஆற்றல் பெற்றவள் என அமைகிறது. இது பெண்மையின் கற்பின் ஆற்றலை மனத் திண்மையை விளக்குவதாக மட்டுமன்றி ஆணின் குற்றங்களைப் பொறுத்து வாழும் தெய்வீகப் பண்பு நலனையும் விளக்குகிறது.

'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற தொடருக்குப் பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யும் மழை போலப் பெண் செயற்பாட்டுத்திறன் வாய்ந்தவள் என்ற பொருளும் கொள்ளப்படுகிறது. எனவே வள்ளுவருடைய இக்குறள் காலத்திற்கேற்ற நிலையில் பொருள் தருவதாக உள்ளது. எனினும் குறளில் குறிப்பிடப்பட்டுள்ள இரு சொற்கள் கவனத்திற்குரியன. தெய்வம், கொழுநன் என்ற இரு சொற்களும் பெண்மையோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. தெய்வத்தைப் பெண், திருமணத்திற்கு முன்னர் வழிபடும் மரபு இருந்துளது. ஆனால் பெண்ணுக்குத் திருமணமான பின்பு கணவனே கண்கண்ட தெய்வமாக வாழ வேண்டும் என்ற ஒரு வரையறை ஏற்பட்டுள்ளது. சங்கப் பாடல்களில் தன் காதலனின் நலத்திற்காகத் தெய்வத்திற்குப் பெண் மடையிட்டு வழிபட்டதாகச் செய்தி உண்டு. ஆனால் வள்ளுவர் காலத்தில் பெண் கணவனையே தெய்வமாக நாளும் பொழுதும் வழிபட வேண்டும் என்ற மரபு தோற்றம் பெற்றுள்ளது. 'கொழுநன்' என்ற சொல் பெண் என்ற கொடிக்குக் கொழு கொம்பாக இருக்கும் ஆண் ஆகும். அவனே 'கொழுநன்' எனச் சிறப்புப் பெயர் பெற்றான்.

பெண்ணினுடைய எல்லாத் தேவைகளையும் கணவனே நிறைவேற்றுவதால் அவன் தெய்வமாகக் கருதப்பட்டு வழிபடும் தகுதி பெற்றான். திருமணமான பெண் கணவனின் முழுப்பொறுப்பிலேயே வாழ வேண்டியிருந்தது. குடும்பத்தின் தலைமைத்துவம் ஆணிடமே இருந்தது. தன் தேவைகள் எல்லாவற்றையும் கணவனிடமே பெண் கேட்டு நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதனால் கணவனையே தெய்வமாக வழிபட்டு வாழும் வாழ்வியல் நடைமுறை ஏற்பட்டது.

பெண்ணுடைய ஆற்றலும் மழையும் இக்குறளில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மழை உலகம் வளம் பெற இயற்கை தரும் கொடையாகும். அந்த மழை 'மாரி' எனவும் அழைக்கப்படும். மழையினுடைய ஆற்றல் பற்றி வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கி யுள்ளார். மழை உயிர்களுக்கு உணவாகும். கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் எல்லாவற்றையும் எடுப்பதும் மழையினதியல்பாகும். எனவே உலகத்திலுள்ள உயிர் களுக்கு எல்லாம் மழை எவ்வளவு இன்றியமையாததோ அதே போலப் பெண்ணும் தன்னைச் சார்ந்தவர்களுக் கெல்லாம் மிகவும் இன்றியமையாதவள் என்பதையும் இக்குறள் உணர்த்துகின்றது.

இல்வாழ்க்கை நடத்தும் ஆணும் பெண்ணும் சமமான ஆற்றல் பெற்றவர் என்ற கருத்து வள்ளுவரால் முன்வைக்கப்படவில்லை. ஆனால் பெண்ணின் ஆற்றல் வேறுபட்டது என்ற நிலையை அவர் மறுக்கவும் இல்லை. பெண்ணின் வாழ்க்கைத் துணைநலம் என்ற செயற்பாட்டில் சில வரையறைகளை அவர் செய்ய முற்பட்டுள்ளார். இதற்கு அக்காலச் சமூக அமைப்பே காரணமெனலாம். தாய்வழிச் சமூக நிலையிலிருந்து தந்தை வழிச் சமூகமாக மாற்றம் பெறும் வேளையில் வள்ளுவர் இல்லறம் பற்றிய சில வரையறைகளைச் செய்ய முற்பட்டுள்ளார். இல்லாளது நன்மை தீமை பற்றிய கருத்துப் பதிவினைச் செய்யவேண்டும் என்பதே வள்ளுவரது இலக்காக இருந்தது. பெண்மையின் ஆற்றலை 'மனைமாட்சி' எனச் சிறப்பியல்பாக எடுத்துக்காட்டி அவளுடைய அந்த ஆற்றல் குடும்ப நலத்திற்கே பயன்பட வேண்டும் என விளக்க முயன்றுள்ளார். எனவே பெண்மையின் முழு ஆற்றலும் குடும்பத் தலைவனான ஆணின் கட்டுப்பாட்டிற் குள்ளேயே பயன்பட வேண்டும் என்ற புதிய மரபு தோன்றலாயிற்று. கற்பு என்பதும் பெண் ஆணுக்குப் பணிந்து வாழவேண்டும் என்ற நிலையில் விளக்கப் பட்டது. கல்லைப் போல மனமிளகாதவனும் புல்லைப் போல இழிந்தவனும் கணவனாகவும் புருஷனாகவும் போற்றப்பட வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. குறளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்மை ஒரு காலத்தில் பெண்கள் பற்றிய கருத்து எவ்வாறிருந்தது என்பதை நன்கு விளக்குகிறது.

## *எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்*

எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்
எத்தனை அழகு மலர்களுண்டு
பொங்கும் மகிழ்ச்சி அதைப் பார்த்தால்
மனதில் புதிய உற்சாகம்.

வெள்ளை நிறத்தில் மல்லிகைகள்
செக்கச் சிவந்த செவ்வரத்தை
சூரியன் போன்ற காந்தி மலர்
ஆடி அசையுது ரோசாப்பூ

கருத்தைத் தருவது பூந்தோட்டம்
கற்பனை வளர்ப்பது பூந்தோட்டம்
காற்றில் அசையும் பூக்களெல்லாம்
ஏதோ கதைகள் சொல்லிடுமே.

வாடி வதங்குது ரோசாப்பூ
நீர்த்துளி பட்டால் எழுந்திடுமே
மனதைத் தொடுவது பூந்தோட்டம்
மகிழ்ச்சியைத் தருவது பூந்தோட்டம்.

ஜெ. அஜந்தன்
தரம் 10A
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்



## *எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்*

எங்கள் வீட்டு பூந்தோட்டம்
எத்தனை அழகு மலர்களுண்டு
பொங்கும் மகிழ்ச்சி அதைப் பார்த்தால்
மனதில் புதிய உற்சாகம்.

சின்னச்சின்ன இதழ்களுடன்
சிரித்துக் கொண்டே இருக்கிறதே
வண்ண வண்ண நிறங்களுடன்
வளைந்து நெளிந்து மகிழ்கிறதே

கண்ணை மூடி நான் படுத்தால்
கனவில் வந்து கதைக்கிறதே
மண்ணின் கீழே வேரூன்றி
மனதை மயக்கும் குழந்தையது

உலகில் உறவே அற்றிருந்தேன்
உறவாய் வந்த ஒருயிரே
உன்னைப் பார்த்தால் உள்ளத்தில்
உற்சாகம் மெல்லப் பிறக்கிறதே.

அ. ஸயந்தினி
தரம் 11
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

(தமிழருவி கவிதைப் போட்டியில் முதற்பரிசில் பெற்ற கவிதைகள்)



# சிறுவர் உளவியலும் கற்பித்தல் முறையும்

முருகையா ஜெயமதன்

நல்ல முறையிலே இளமைக்கால குடும்ப வாழ்க்கையை ஓட்டி வந்த அந்தக் காலங்கள் இன்று அவர்களுக்கு ஒருவித வெறுப்பைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டிருந்தது. காதலித்து மணம் முடித்து இன்னிசைத் தென்றலை இனிதே சுவைத்துப் புன்முறுவலை மட்டுமே முகத்திற் கொண்டு இன்பமுற வாழ்ந்த காலங்கள் இன்று கனாக் காலங்கள் ஆகிவிட்டன.

அதாவது தகாத நண்பர்களின் தீண்டல் காரணமாக தேன்கூடு போன்று இருந்த குடும்ப உறவு கல்லெறிபட்ட தேன்கூடு போன்றதாகி விட்டது இன்றைய நிலைமை. குடியும் கும்மாளமும் போட்டுவிட்டு கடையிலே சாப்பாட்டையும் பரிமாறிக் கொண்டு உழைத்த பணத்தை வதம் செய்து விட்டு வீடு வருகிறார் அந்த நபர்.

பிள்ளைகளோ எப்போ அப்பா வருவார்? என்ன வாங்கி வருவார்? என ஏக்கப் பெருமூச்சு விட்டபடி வாசலை எட்டிப் பார்த்தவாறு இருக்கும் பரிதாபக் காட்சிகள். தந்தை வரும் போது வெறி பிடித்த மனிதராய் பித்துப்பேச்சுப் பேசி வருவார் என்பதை அவர் வந்து சேரும் கணப்பொழுது வரை உணர்ந்து கொள்ளாது சிரிப்பும் கும்மாளமுமாக ஓடியாடிச் சந்தோசமாக இருப்பார்கள்.

**இப்படியான சூழலை எமது தெய்வங்களான ஆசிரியர்கள் கண்டுகொள்ள வேண்டும். மாறாக அரசன் நினைப்பது போன்று "என்னைப் போன்றே குடியானவனும் நன்றே உணவருந்தியிருப்பான்" என்கின்ற எடுகோள்களை மறந்தொழிக்க வேண்டும்.**

"யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பதற்கிணங்கத் தந்தை வீட்டினை வந்தடையும் போதே பழைய பாடல் ஒன்றை உரத்த குரலில் இசைத்தவாறு வருவார். இதைக் கேட்ட மழலைகள், "அப்பா வந்திட்டார்" என மகிழ்ச்சிக் கடலில் ஆர்ப்பரிப்பார்.

"உண்மை தான்" வந்தவர் சரமாரியான தூசண வார்த்தைகளைக் கூறியே தனது முன்னை நாள் காதலியும் தற்போதைய மனைவியுமானவரைக் கூவி அழைத்து "இண்டைக்கு என்ன சமைச்சனீ?" என்ற வாக்கியத்தை முன்மொழிவு செய்வார்.


இதன் பிற்பாடு இடம்பெறும் சம்பவத் தொடர்ச்சிகளை நீங்கள் கண்கொண்டு பார்க்க முடியாது என்பதோடு காது கொண்டும் கேட்க முடியாது. இதுவே இவரின் நாளாந்த நாடகக் காட்சி. இதனைப் பார்த்துப் பார்த்துப் புளித்து போன அந்த மழலைகள் இப்போதெல்லாம் காதடைத்துப் போன மாந்தர்களாக எல்லாவற்றையும் தமதாக்கிப் பழக்கப் படுத்திக் கொண்டு விட்டார்கள். இதன் விளைவுதான் என்ன? இன்று பாடசாலை செல்லும் மழலைகளில் மூத்தவன் தந்தையின் கதா பாத்தி-ரத்தைத் தனதாக்கிக் கொள்ளும் விசித்திர நிகழ்வொன்று நடந்தேறி வருகிறது. சகபாடிகளுடன் பேசும் போதும் சிலவேளை தகராறில் ஈடுபடும் போதும் தூசண வார்த்தைகளைப் பச்சை பச்சையாக கொட்டித் தீர்த்து விடுகிறான்.



இது எதனால் ஏற்பட்டது? இப்பிஞ்சு உள்ளத்திலே நஞ்சு விதை போட்டவர்கள் யார்? இதன் பின் விளைவு தான் என்ன? என்பதை மனதிலே நிறுத்த வேண்டிய தேவை ஒன்று உள்ளது. வீட்டிலே நடந்த சம்பவம் மனதை வக்கிர புத்திக்கு கொண்டு சென்றது. விரக்தியைப் பிறர் மீது காட்டத் தூண்டியது. அதேநேரம் பொன்னான வாழ்வை மெருகூட்ட வல்ல கல்விப் பயிரை நாசம் செய்தது.

நாளாந்தம் தாயைச் சித்திரவதை செய்து தலை முடியிலே பிடித்து அடிக்கும் காட்சியும் காலை வேளை எவ்வித உணவுமின்றி வரும் அந்தச் சின்னஞ்சிறு பாலகரின் மனதிலே எது தான் விளையும்? எவை தான் காட்சி யளிக்கும்? எதனை அவர்கள் விருப்பங் கொள்ள வைக்கும்?


இப்படியான சூழலை எமது தெய்வங்களான ஆசிரியர்கள் கண்டுகொள்ள வேண்டும். மாறாக அரசன் நினைப்பது போன்று "என்னைப் போன்றே குடியானவனும் நன்றே உணவருந்தியிருப்பான்" என்கின்ற எடுகோள்களை மறந்தொழிக்க வேண்டும்.



இந்த இடத்தில் புத்திக் கூர்மையை முழுமையாக முழுமனதோடு கையாண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். மாறாகப் பிள்ளைகள் நொந்து நூலாகி இருக்கும் போது அவர்களை வார்த்தைகளால் வதைப்பது எவ்வளவு நியாயமானது என்பதை உணர வேண்டும்.

# புலவர் ம. பார்வதிநாதசிவத்துடன் நேர்காணல்

செவ்வி கண்டவர் : S. நதியரன்



பழந்தமிழ் இலக்கியப் பரப்பிற்கு உரமூட்டியவர்களுள் புலவர் ம. பார்வதிநாதசிவம் குறிப்பிடத்தக்கவர். வயதில் முதிர்ச்சியடைந்தவர் மாத்திரமல்லாமல் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஆழ்ந்த முதிர்ச்சியுடையவர். தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், யாப்பமைதிகள் என்பவற்றைத் துறை போகக் கற்றவர். தமிழிலக்கிய உலகிற்கு இவர் அளித்த பங்களிப்புக்கள் அளவிடற் கரியவை.

தற்போது 75 வயது பூர்த்தியடைந்தாலும் அவரது இலக்கியத் தேடலில் எந்தவித தடங்கல்களும் ஏற்படவில்லை என்பதை அவரது உரையாடல்கள் வெளிப்படுத்தின. மெலிந்த உருவம்; அறிவின் ஆழத்தைப் பறைசாற்றும் அகன்ற நெற்றி. தீட்சண்யமான பார்வை. தமிழ்த் தாகத்தை வெளிப்படுத்தும் சொல்வீச்சு. இருந்தும் அவரது பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கும்போது வயதுக்கேற்ப ஞாபகங்கள் குறுக்கீடு செய்து கொண்டிருந்தன. மிகவும் சிரமப்பட்டே பல இளமைக்கால நினைவுகளை மீட்டிப் பார்த்தார். சில பல நிகழ்வுகள் ஞாபகத்தில் நின்றாலும் சில நினைவுகள் அவரது சிந்தனை வெளியிலிருந்து அகன்றிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. சிறந்த தமிழ்ப் புலவராக, கவிஞராக, பத்திரிகையாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட அவரைச் சந்தித்தபோது அரிய பல கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவர் கூறிய கருத்துக்களைப் பதிவு செய்வதில் தமிழருவி பெருமை கொள்கிறது. அவரது இலக்கியப் பணி மேலும் தடையின்றித் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகிறது.!

கேள்வி : உங்களது இளமைக்கால வாழ்க்கை பற்றி சிறிது கூறுங்களேன்?

பதில் : யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள மாவட்டபுரத்தில் 1936இல் மகாலிங்கசிவம் அருமைமுத்து தம்பதிகளுக்கு நான்காவது மகனாகப் பிறந்தேன். எனது தந்தையாரான மகாலிங்கசிவம் சிறந்த தமிழறிஞர். அத்துடன் பலமொழிகளிலும் தேர்ச்சி பெற்றவரும் கூட. குறிப்பாக வடமொழி, ஹிந்தி, உருது, ஆங்கிலம் போன்ற மொழிகளில் பரிச்சயம் மிக்கவர். மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, இராமநாதன் கல்லூரி முதலான பாடசாலைகளிலே தமிழாசிரியராக கடமையாற்றினார். அத்துடன் சுமார் 17 வருடங்களாகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரை யாளராகவும் பணியாற்றியவர். அத்துடன் காமாட்சி அன்னை, புன்னெறி விலக்கு முதலிய தனிப்பாடல்களை இயற்றியதுடன் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் விளங்கியவர். இவரது வழியில் நானும் ஒரு சிறந்த தமிழறிஞராக வரவேண்டும் என்ற வேட்கை என் மனதில் குடிகொண்டது. இதற்குச் செயல் வடிவம் கொடுக்க எண்ணியதன் விளைவே என்னை இலக்கண, இலக்கியத் தேடல்களில் ஈடுபடத் தூண்டியது எனலாம்.

நான் ஆரம்பக் கல்வியை வீமன்காமன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்ததுடன் இரண்டாம் நிலைக் கல்வியைத் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் கற்றேன். அப்போது அக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த கவிஞர் செ.கதிரேசம்பிள்ளையிடம் யாப்பிலக்கணத்தை முழுமையாகக் கற்றேன். இவர் சிறந்த நாடகாசிரியராகவும், கவிஞராகவும் விளங்கினார். பாரதியார், பாரதிதாசன் கவிதைகளையும் அவற்றின் இலக்கிய நயங்களையும் கவிதைக் கூறுகளையும் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். இவை எனக்குத் தமிழ்மொழியில் மிகுந்த ஈடுபாட்டைக் கொடுத்தன. எனது மேற்படிப்பைத் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தேன். அங்கு மேற்கல்வியைத் தொடர்ந்த காலத்தில் பல தமிழ் விற்பன்னர்களின் தொடர்புகள் கிடைத்தன. வித்துவான் அருணாசலம்பிள்ளை, தண்டபாணி தேசிகர், பேராசிரியர் சிதம்பரநாத செட்டியார் பன்மொழிப்புலவர் பொ. மீனாட்சி சுந்தரனார் முதலிய பலரின் தொடர்புகள் எனது திறமையைத் தீட்சண்யப்படுத்த உதவின. அது மட்டுமன்றி அக்காலப் பகுதியில் பாவேந்தர் பாரதிதாசன் மீது கொண்ட காதலால் பாண்டிச்சேரிக்குச் சென்று அடிக்கடி நேரில் அவரைச் சென்று சந்தித்து அவருக்கும் எனக்கும் இடையில் உறவுச் சங்கிலியை ஏற்படுத்திக் கொண்டேன். இவரது தொடர்பே என்னை எழுத்துலகில் பிரவேசிப்பதற்கு ஆளுமை நிறைந்த சிறந்த வீச்சுடைய ஒரு கவிஞனாக உருவாக்கியது எனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் கற்கைநெறியைக் கற்றுத் தேறிய பின்னர் 1961இல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தமிழாசிரியராக எனது கல்விப் பணியைத் தொடர்ந்தேன். பின்னர் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் தொடர்ந்து 1978களில் ஆசிரியப் பணியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

கேள்வி : உங்களது எழுத்துலகப் பிரவேசம் பற்றி?

பதில் : தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கையில் அக்கல்லூரிச் சமூகத்தால் வெளிக்கொணரப்பட்ட வளர்மதி என்ற கையெழுத்துப் பிரதி சஞ்சிகையில் எனது கவிதையும் இடம் பெற்றது. இக்கவிதை பின்னர்

பலராலும் பாராட்டப் பெற்றமை மூலம் கவிதைகளைப் படைக்க வேண்டும் என்ற அவா என் மனதில் உதித்தது. அதற்குச் செயல் வடிவம் கொடுத்து செயற்பட்டேன். அம்முயற்சி வீண் போகவில்லை. எனது பல கவிதைகள் வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இது எதிர்காலத்தில் தரமான கவிதைகளை என்னாலும் படைக்க முடியும் என்ற உந்துதலை ஏற்படுத்தியது.

கேள்வி : நீங்கள் இலக்கியவாதியாக, தமிழறிஞராக கவிஞராக மட்டும் உங்களை அடையாளப் படுத்தாது சிறந்த பத்திரிகையாளராகவும் இனங் காட்டியுள்ளீர்கள். உங்களது பத்திரிகைத் துறைப் பணிகள் பற்றிச் சிறிது கூறுங்கள்?

பதில் : 1979இல் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டேன். அங்கு மூத்த பத்திரிகையாளர் எஸ்.கோபாலரத்தினம் அவர்களது நெருக்கமான தொடர்பால் பத்திரிகைத் துறையில் ஆழ்ந்த அறிவினைப் பெறக்கூடியதாக இருந்தது.

மேலும் பத்திரிகைத் துறையில் நுழைந்தமையால் எனது படைப்புகளைப் படைப்பதற்கான தளத்தினை உருவாக்கிக் கொண்டேன். பத்திரிகைக்கென்று ஒரு மொழி நடையிருக்கிறது. அதனை உள்வாங்கி யாவரும் இலகுவில் படித்துணரும் வகையில் பல கட்டுரைகளை, கவிதைகளை எளிய மொழி நடையில் எழுதலானேன். ஈழநாடு பத்திரிகையில் வார மலர் ஆசிரியராகப் பணியாற்றியபோது "அறிவும் அனுபவமும்" என்ற புதிய தொடர் மூலம் வாசகர்கள் மத்தியில் பெருவரவேற்பைப் பெற்றேன். இப்பகுதியில் இயல், இசை, நாடகம் சார்ந்த பல்துறை அறிஞர்களையும் பேட்டி கண்டு எழுதினேன். குறிப்பாகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், சிரித்திரன் ஆசிரியர் செ. சிவஞானசுந்தரம், கலைச்செல்வி சிற்பி, வரதர், கலாநிதி நா. சுப்பிரமணியன், நாடகக் கலைஞர், ஏ.ரி. பொன்னுத்துரை, கலையரசு எஸ். சொர்ணலிங்கம், புலவர் சிவானந்தன் முதலிய பல்துறை விற்பன்னர்களைப் பேட்டி கண்டு பிரசுரித்திருந்தேன். இதன் மூலம் பல்துறைசார் ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

ஈழநாடு பத்திரிகையில் 10 வருடங்களாகப் பணி யாற்றினேன். தவிர்க்க முடியாத காரணத்தினால் ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மூடப்பட்டதை யடுத்து 1989இல் முரசொலியில் இணைந்து பணியாற்ற வேண்டி ஏற்பட்டது. முரசொலியில் உதவியாசிரியராகப் பணியாற்றினேன். வார மலரின் ஆசிரியராகவும் பணி யாற்றினேன். வார மலரிலும் பல கட்டுரைகள், கவிதைகள் வரைந் திருக்கிறேன். முரசொலியில் பணியாற்றியமை எனது வாழ்வின் பொற்காலம் என்றே கூற வேண்டும். இருந்தும் முரசொலிப் பத்திரிகையும் காலமாற்றத்தால் இடைநடுவில் ஆயுளை சுருக்கிக் கொள்ள 1992 இல் உதயன் பத்திரிகையில் இணைந்து 2002 வரை பணியாற்றினேன். உதயனின் வார மலரான சஞ்சீவி பல்சுவைப் பத்திரிகையிலும் பணியாற்றினேன். அத்துடன் பல இளம் படைப்பாளிகளையும் சஞ்சீவியூடாக உலகறியச் செய்தேன். இப்பத்திரிகைகளின் ஊடாக வாராவாரம் பல தொடர் கவிதைகளையும், குறுங் காவியங்களையும் வெளிக் கொணர்ந்தேன். இப்படைப்புக்கள் எல்லாம் இலக்கிய ஆர்வலர்களுக்கு நிறைந்த தீனி போட்டது என்றே கூறவேண்டும். இப்பத்திரிகையில் பணியாற்றியமை என் வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாகும்.

கேள்வி : நீங்கள் பல கவிதை நூல்களையும் காவிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளீர்கள் அவை பற்றிக் கூறுங்கள்.

பதில் : முதன் முதல் "காதலும் கருணையும்" என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டேன். இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு நான் கல்வி கற்ற மகாஜனக் கல்லூரியிலேயே 1972இல் நடைபெற்றது. இந்நூலை என்னால் மறக்க முடியாது. காரணம் கனக.செந்திநாதன், சில்லையூர் செல்வராசன், அரசியல் அறிஞர், வி. பொன்னம்பலம், கவிஞர்களான கதிரேசம்பிள்ளை, கந்தவனம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தியமை என்னால் ஒரு போதும் மறக்க முடியாத அழியா நினைவுகள். அத்துடன் இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர், பண்டிதர் சச்சிதானந்தன் ஆகியோரும் நேரில் வாழ்த்தியமையையும் மறக்க முடியாது.

அடுத்து "இரு வேறு உலகம்" என்ற கவிதை நூலை வெளியிட்டேன். இது குறுங்காவியமாகத் தனிக் கவிதை வடிவில் அமைந்திருக்கிறது. இக்கவிதைத் தொகுதிக்குச் சாகித்ய மண்டலப் பரிசும் கிடைத்தது. இதனையடுத்து "இரண்டு வரம் வேண்டும்", "இன்னும் ஒரு திங்கள்" "பசிப் பிணி மருத்துவன்", "மானம் காத்த மறக்குடி வேந்தன்" முதலிய கவிதை குறுங் காவிய நூல்கள் பின்னர் வெளிக் கொணரப் பட்டன. மொத்தமாக ஒரு கவிதை நூலும் நான்கு காவிய நூல்களையும் வெளியிட்டுள்ளேன். இதற்கு ஊடகங்களின் பங்களிப்பையும் மறக்க முடியாது.



கேள்வி : நவீன இலக்கிய வடிவங்களில் தற்போது புதுக்கவிதைகள் காத்திரமான இடத்தினை வகிக் கின்றன. புதுக்கவிதைகள் படைக்கும் கவிஞர்கள்

புதிது புதிதாக முளைக் கின்றனர். யாப்பென்ற வரன் முறையின்றி எப்படியும் எழுதலாம் என்ற மரபைத் தமிழிலக்கியம் புதுக் கவிதைக்கு அளித்தி ருக்கிறது. கேள்வி என்ன வென்றால் மரபுக் கவிதை மரபா? அல்லது புதுக்கவிதை மரபா? தமிழிலக்கியச் செழுமை வாய்ந்தது என்பது பற்றிய தங்கள் கருத்து யாது?

**மொழி என்பது காலத்திற்கேற்ப வளர்ச்சியடைந்து சென்று கொண்டிருக்க வேண்டும். இதற்குத் தமிழ்மொழி விதிவிலக்கல்ல. அந்த மாற்றத்தில் ஏற்படும் புதுமைகள் எமது தாய் மொழியான தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்குமானால் அவற்றை வரவேற்கலாம்.**

பதில் : மொழி என்பது காலத்திற்கேற்ப வளர்ச்சி யடைந்து சென்று கொண்டிருக்க வேண்டும். இதற்குத் தமிழ்மொழி விதிவிலக்கல்ல. அந்த மாற்றத்தில் ஏற்படும் புதுமைகள் எமது தாய் மொழியான தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கு மானால் அவற்றை வரவேற்கலாம். அதில் தவறில்லை. என்னைப் பொறுத்தவரையில் மரபுக் கவிதைகளையே படைத்திருக்கிறேன். அதனால்புதுக்கவிதை படைப்பதைத் தவறென்று கூறிவிட முடியாது. ஆனால் மரபுக் கவிதையைப் படைக்கும்போது இறுக்க மான வரையறைக்குள் நின்றே படைக்க வேண்டி யிருக்கிறது. மரபுக் கவிதைகளை எழுது பவர்கள் மரபுக் கவிதைக் குரிய இலக்கணங்களை ஐயம் திரிபறக் கற்க வேண்டும். இல்லையேல் கவிதைகளை எழுதும் போது பிழையான அணுகு முறைகளைத் தோற்று விக்கும். கவிதையின் தரம், நயம், கலை என்பன இல்லாமற் போகும். ஆனால் புதுக் கவிதைகள் அப்படியல்ல. யாரும் எப்படியும் எழுதலாம். வரை யறை, யாப்பு என்பன கிடையாது. இதனால்தான் இன்றைய இளைஞர்கள் புதுக் கவிதைகளை அதிகம் எழுதுகின்றனர். விரும்பு கின்றனர். மரபுக் கவிதைகளை எல்லோராலும் படைக்கவும் முடியாது. படித்து விளங்கவும் முடியாது மரபுக் கவிதைகள் மூன்று அம்சங்களை உள்ளடக் கியதாக இருக்க வேண்டும். ஒன்று, கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இரண்டாவது வடிவம் அடுத்தது நடை. இந்த மூன்று அம்சங்களும் மரபுக் கவிதைக்குக் கட்டாயம் இருக்க வேண்டும். இவையில்லாத கவிதைகள் மரபுக் கவிதைகளாக இருக்க முடியாது.

கேள்வி : இன்றைய இளைஞர்கள் கால மாற்றத்தால் வாசிப்புத் திறனில் நாட்டமின்றி மனம் போன போக்கில் வாழத் தலைப்பட்டுள்ளனர். பத்திரிகைகள் முதல் சிறு சஞ்சிகைகள் வரையான அச்சு ஊடகங்களின் பெருக்கம் அதிகரித்து உள்ள நிலையிலும் இளைஞர்களின் குறிப்பாக மாணவர் களின் வாசிப்புத் திறன் மிகவும் குறைந்த நிலையிலே உள்ளது. இதனால் இன்றைய இளஞ் சந்ததி எத்தகைய பாதிப்புகளுக்கு முகங் கொடுக்கும்?

பதில் : தற்போதைய சூழலில் நல்வழிப்படுத்துகின்ற புத்த கங்களை படிப்பது இன்றைய இளம் சந்ததியிடமிருந்து அருகி வருகிறது. முற் காலத்தில் நல்ல புத்தகங்களை, அறக் கருத்துக்களை, நீதி நெறியை, தர்ம நெறியைப் போதிக்கின்ற நூல்களை தேடிப் படிக்கும் பண்பு மேலோங்கியிருந்தது. இதனால் நடைமுறை வாழ்வியலும் இது பிரதிபலித்தது. நீதி நெறிக்குப் புறம்பாக அதர்ம வழியில் வாழ்ந்தால் அழிவு நிச்சயம் என்ற விழுமியக் கருத்தை போதிக்கும் இலக்கியங்கள், புராண, இதிகாச நூல்களைப் படித்ததால் மக்கள் நடைமுறை வாழ்விலும் அறவாழ்வு வாழ்ந்தனர். ஆனால் இன்றைய இளைஞர்களிடத்தே இப்படியான அறநூல்களை, நல்ல புத்தகங்களை ஆர்வமாக படிப்பது அருகி வருகிறது. இதற்கு இன்றைய கல்வி முறைகளும் ஒரு காரணம். மேற்கத்தைய கல்வி களைத் தழுவிய தாகவே இன்றைய கல்வி முறை காணப்படுகின்றது. ஆனால் முன்னர் இருந்து வந்த கல்வி முறை மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள வாழ்வியல் கல்வி. இக்கல்வி மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்குப் பல ஆக்கபூர்வமான கருத்துக்களை உள்ளடக்கி யிருக்கின்றது. படைப்புக் களை நுகருகையில் அப்படைப்புக்கள் மனித வாழ்வை உயர்த்துவதாக இருக்க வேண்டுமே தவிர எதிர்மறையான சிந்தனை களை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. அரிச்சந்திர மயான காண்டம் என்ற நாடகத்தைப் பார்த்து விட்டே காந்தியடிகள் காந்திய வழியைப் பின்பற்றிப் பாரத சமூகத்திற்கு விடிவை ஏற்படுத்திக் கொடுத்தார். அந்த நாடகம் ஒன்றே அவரது வாழ்வில் புதிய மாறுதலை ஏற்படுத்தியது. அதே போலவே இலக்கிய வடிவங்கள் மனித மனதில் நீதி, தர்மம், ஒழுக்கம், வாய்மை ஆகியவற்றைப் போதிப் பவையாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் மாறினால்கூட சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும் என்பதற்குக் காந்தியடிகள் நல்ல சான்று, எனவே இன்றைய இளம் சந்ததி நல்ல அற நூல்களை நிறைய வாசிக்க வேண்டும். நிறைய எழுத வேண்டும். அதற்கு ஊடகங்கள் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் திசை மாறிப்போய்க் கொண்டிருக்கும் இளம் சந்ததியை நல்வழிக்கு கொண்டுவர முடியும். இலக்கியத்தை ஆக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும். அழிவுகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**நீதி நெறிக்குப் புறம்பாக அதர்ம வழியில் வாழ்ந்தால் அழிவு நிச்சயம் என்ற விழுமியக் கருத்தை போதிக்கும் இலக்கியங்கள், புராண, இதிகாச நூல்களைப் படித்ததால் மக்கள் நடைமுறை வாழ்விலும் அறவாழ்வு வாழ்ந்தனர். ஆனால் இன்றைய இளைஞர்களிடத்தே இப்படியான அறநூல்களை, நல்ல புத்தகங்களை ஆர்வமாகப் படிப்பது அருகி வருகிறது.**

# சங்க காலத்திற்கு முன்னரான ஆடற்கலை

அ.உமாமகேஸ்வரி.
மானிப்பாய்.

மனிதனின் வாழ்க்கையின் ஆரம்பம் முதலே ஆடலும், இசையும் அவர்களோடு பின்னிப் பிணைந்திருந்தமையை மானிடவியல் ஆய்வாளர்களின் ஆராய்ச்சியின் மூலம் தெரிந்து கொள்கிறோம். சாதாரணமாக ஒரு குழந்தை பிறக்கின்ற போது அந்தக் குழந்தை அழுகின்ற ஓசை இசையாகவும் அந்த அழுகையின் போது அசையும் உடலின் நிலை நடனமாகவும் அந்தக் குழந்தையின் உருவமே ஓவியமாகவும் பெற்ற தாய்க்குக் குழந்தை முக்கலை களின் அம்சமாகத் தெரிகிறது. இது போன்றே மனிதனுடைய பிறப்பிலிருந்து, இறப்பு வரை கலைகள் மனித வாழ்வோடு இணைந்திருப்பதைக் காணலாம். இதையே நாட்டியக் கலையின் லௌகீக வரலாறு கூறுகின்றது. குறிப்பாக கற்கால மக்கள் வேடர்யுக, இடையர்யுக மக்கள் சூரியன், வானம், நிலம் பெருமரங்கள் போன்ற இயற்கையினை வழிபட்டுத் தம்முடைய தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொண்டனர். வேட்டையாடுவதன் மூலம் தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு சென்றனர். இவ்வாறான சூழ் நிலையில் தமது பரிபாஷைகளோ, வரிவடிவங்களோ இல்லாத நிலையில் தமது கருத்துப் பரிமாற்ற ஊடகங்களாக கண், கை, தலை, கால் என்பவற்றையே பயன் படுத்தினர். இத்தகைய கருத்துப் பரிமாற்றங்களின் மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் சற்று அதிகமாக பயன்படுத்தப்பட்டது. அதாவது தமது வெற்றியையோ, மகிழ்ச்சியையோ வெளிப்படுத்தத் துள்ளிக் குதித்தும், கூக்குரலிட்டும் வெளிப்படுத்தினர். எதுவித வரையறைகளுக்கும் உட்படாத இந்தக் குதித்தாடும் கூத்து அவர்களின் கற்பனைக்கும், கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்கி ஒரு சந்தத்தோடு வழிநடத்தப்பட்டு ஆடலும், இசையும் தோற்றம் பெறுகின்றன. இதுவே மானிடவியலாளரின் ஆராய்ச்சிகள் கூறும் ஆடல் இசை பற்றிய ஆரம்ப நிலை என்றும் கூறலாம். இவ்வாறாகத் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற ஆடல், இசை வரலாற்றுக் காலத்தின் முன்னும், பின்னும் எத்தகைய நிலைப் பாட்டில் இருந்தது என்பதற்கான சான்றுகள் உள்ளன.



சாதாரணமாக ஆடற்கலையின் பரிணாம வளர்ச்சி பற்றி நாம் பார்க்கும்போது அனேகமாக சங்க, சங்கமருவிய காலத்தில் இருந்தே ஆரம்பிப்பது வழமை. எனினும் இதற்கு முற்பட்ட காலத்தைப் பற்றி நோக்குவோம். பொதுவாக எந்தத் துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் முதலில் மக்கள் வாழ்க்கைக் காலமாகக் கருதப்படும் சிந்துசமவெளி காலத்தையே நோக்குவது வழமை. அந்த வகையில் கி.மு 2500-1500ம் ஆண்டளவிலான காலப் பகுதி சிந்துசமவெளிக் காலம் என்பர். ஆரம்ப திராவிட இனக் குழுக்கள் இங்கு வாழ்ந்தமைக்கான ஆதாரங்களை மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் இடம்பெற்ற அகழ்வாய்வுகள் மூலம் அறியலாம். இங்கு கிடைக்கப் பெற்ற இலட்சினைகள், படிமங்கள், மனித உருவங்கள் என்பவற்றின் அடிப்படையிலே இங்கு வாழ்ந்த மக்களின் சமயம், நகர அமைப்பு, வாழ்க்கை முறை, கலை, கலாசாரம் என்பவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இக் காலத்து இருபெரும் நகரங்களிலே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கிடைத்த மண்ணாலான நடன உருவங்கள், வெண்கலத்தாலான நேர்த்தியான நடனமாடும் சிலை அக்காலத்து பெண்கள் ஆடல் புனைந்தமையை எடுத்துக் காட்டுகிறது. இந்த நடனமானது கைநிறைய வளையல்கள் அணிந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் இக்காலத்தில் கிடைக்கப் பெற்ற இலட்சினைகளிலே ஒருவர்மேளம் அடிக்க சிலர் சூழ்ந்து ஆடுவது போன்று பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கால அகழ்வுகளின் போது மண், மரம், உலோகம் போன்றவற்றிலான இசைக் கருவிகளும் கிடைக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. இது மட்டுமன்றிப் பொம்மலாட்டக் கலை நிலவியதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இவ்வாறான ஆதாரங்கள் சிந்துவெளிக் காலத்தில் நடனமும், இசையும் மக்கள் வாழ்வியலில் இணைந்திருந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

இருக்கு, யசுர், சாம, அதர்வன வேதங்களிலிருந்து ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதம் உருவாக்கப்பட்டதாக நாட்டியத்தின் புராண வரலாறு கூறுகின்றது. அதாவது இருக்கு வேதத்தில் இருந்து பொருளும், யசுர் வேதத்தில் இருந்து அபிநயமும். சாம வேதத்தில் இருந்து இசையும், அதர்வண வேதத்தில் இருந்து ரஸங்களையும் எடுத்து தொகுத்து பிரமா நாட்டிய வேதத்தை ஐந்தாவது வேதமாகக் தொகுத்தார் என்று கூறுகிறது.

**ஒரு குழந்தை பிறக்கின்ற போது அந்தக் குழந்தை அழுகின்ற ஓசை இசையாகவும் அந்த அழுகையின் போது அசையும் உடலின் நிலை நடனமாகவும் அந்தக் குழந்தையின் உருவமே ஓவியமாகவும் பெற்ற தாய்க்குக் குழந்தை முக்கலைகளின் அம்சமாகத் தெரிகிறது. இது போன்றே மனிதனுடைய பிறப்பிலிருந்து, இறப்பு வரை கலைகள் மனித வாழ்வோடு இணைந்திருப்பதைக் காணலாம்.**

வேத காலத்திலே வேத நூல்களின் கலைகள் சம்பந்தமான செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. வேதகாலமென்பது பொதுவாக முன்வேத காலம், பின்வேத காலம் என இரண்டு பிரிவாக நோக்கப் படுகிறது. இதில் இருக்கு வேத காலத்தினை முன்வேத காலம் என்றும் ஏனைய வேதங்களின் காலத்தினை பின்வேத காலம் என்று கூறுவர். முன்வேத கால மக்கள் வாழ்க்கை முறை அம்சங்களில் ஆண்கள், போர்வீரர்கள் போர் நடனங்களில் ஈடுபட்டமையும், பெண்களின் பொழுது போக்குகளிலே இசையும், நடனமும் முக்கிய பங்காற்றியதையும் அறிகின்றோம். பின்வேத காலத்து சமூகநிலை முன்வேத காலத்து சமூக நிலையிலிருந்து சற்று வேறுபடுவதைக் காணலாம். இத்தகைய மாற்றங்களின் போது மக்களது பொழுது போக்கு அம்சங்களிலும் வேறுபாடு நிகழ்வதைக் காணலாம். அதாவர் நடர் (நடனமாடுபவர்)களின் நடனங்களும், இசைக் கலைஞர்களின் பாடல்களும், பக்கவாத்தியப் பாவனைகளும் அதிகமாக இடம்பெற்றிருந்தன. இக்காலத்தில் நடர்கள்-சைலுஷர் எனவும் இக்காலத்தில் இசைக்கப்பட்ட பாடல்கள் "காதா" எனவும் (பிற் காலத்தில் இதிஹாஸங்கள் காதா பாடல் களாகவே பாடப்பட்டன) வீணை வாசிப்பவர்களை "வீணாகாதின்" எனவும் அழைத்தனர். மக்கள் கூடும் பொழுது வைபவங்கள் விழாக்களில் இசையும் நடனமும் இடம் பெற்றதை அறிகின்றோம். பின் வேத காலத்தில் நடைமுறையிலிருந்த தொழில் முறைமைகள் கல்வி முறைகளில் "வேத ஜன வித்யாவும்" ஒன்றாக இருந்தது. அதாவது தேவஜன வித்யா என்பது இசை, நடனம், புராணம் பற்றிய கல்வி எனப்படுகிறது.

வேத காலத்தை தொடர்ந்து ஆகமங்களில் இசை, நடனம் பற்றிப் பார்ப்போமாயின் காமிகாமகம், உத்தரபதம் பகுதியிலே சோடசோபசாரம் எனப்படும் இறைவனுக்கு சாற்றப்படும் 1ஆம் வகை உபசாரங் களிலே கீதம், வாத்தியம், நிருத்தம் என்பன இடம்பெற வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம். எனினும் ஆகமங்கள் கிறிஸ்துவிற்குப் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றது என்னும் கருத்து நிலவுவதால் இத்தலைப்பினின்றும் இது வேறுபடுவதைக் காணலாம்.

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இருபெரும் இதிகாசங்களும் "காதா" பாடல்களாகப் பல காலம் இசைக்கப்பட்டு வந்தன. இவ்விரு இலக்கியங்களிலும் ஆடல், இசை பற்றிய செய்திகளை ஆங்காங்கே தேடக் கூடியதாக இருக்கிறது. மகாபாரதத்திலே இராஜசூய வேள்வியிலே வந்திருந்த அந்தணர்களை நடனமாதர் வாத்தியக் கலைஞர்கள் மூலம் மகிழ்வித்தமையைப் பற்றி அறிகின்றோம். மேலும் 'பந்ர' என்னும் நடிகனின் சிறப்புக்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அத்துடன் தசரதன் நடத்திய குதிரை வேள்வி, பரத்துவாச முனிவரின் ஆச்சிரமத்தில் பரதனது சேனைக்கு அளிக்கப்பட்ட விருந்து உபசாரம் போன்ற நிகழ்வுகளில் நடனமாதர் வருவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டமையைப் பாராட்டி ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, போன்ற ஆடல் நங்கையர்கள் மகிழ்ச்சியால் ஆடிய செய்திகளும் உண்டு.

தொடர்ந்து மௌரியர் காலம் கி.மு324-கி.மு 3225 வரையான காலப் பகுதியாகும். இக்காலத்தில் பௌத்த மதமும், சமண மதமும் மேன்மையடையத் தொடங்கியிருந்தன. இதனால் இம்மதங்கள் போதிக்கும் தர்மமே பின்பற்றப்பட்டது. எனினும் இக்கால உற்சவங்கள், சமாஜங்கள் (பிரமன், பசு, பதி, சிவன், சரஸ்வதி ஆகிய தெய்வங்களைப் போற்றும் வகையிலான விளையாட்டுக்கள்) என்பவற்றின் போதும் இசை, நடனம், வாத்திய இசை என்பன பயன்படுத்தப் பட்டன. இக்காலத்தில் நிலவிய நாடகங்கள் பற்றிப் பதஞ்சலியின் "யோக சூத்திரம்" குறிப்பிடுகிறது. இக்காலத்திலே நடிகர்கள் சௌலிகர், சோபனிகர், நடநர்த்திகர் என்றும் அழைக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.



பாணினியின் 'அஷ்டாத்யம்" என்கின்ற வடமொழி நூலிலே சிலாலின், கிருஷாஷ்வ ஆகியோர் எழுதிய "நடசூத்திரங்கள்" பற்றிய செய்திகள் வருகின்றன. இவை நாட்டிய சாஸ்திர முன்னோடியாக கணிக்கப்படுகின்றன. இக்காலத்திலே கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்திலே அரசு நாடகக் கலைஞர் களுக்கு ஆதரவு அளித்தமை களியாட்டங்களுக்கு வரி விதித்தமை நடன அரங்குகள் இருந்தமை, பெண்களுக்கு என்று தனியான அரங்குகள் கட்டப் பட்டமை போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

இவ்வாறான ஆடற்கலையின் ஆரம்ப வரலாற்றினை கி.முக்கு முன்னரான காலப் பகுதியிலிருந்தே அறிய முடிகிறது. இதே தலைப்பில் ஆழமாக ஆராயும் போது இன்னும் பல அரிய தகவல்களைப் பெற முடியும் என்பது திண்ணம்.

## சிந்தனைச் சுடர்

- சேமித்து வை அவமானங்களை! செலவுசெய் சோர்வுகளை! திரும்பப்படி தவறுகளை!
- முட்களில் மோதி கிழியாதவனுக்கு பூக்களைத் தடவும் தகுதி கிடையாது!
- ஓட்டைப் படகு ஒடிந்த துடுப்பு கரை சேரலாம் கடல்போல் நம்பிக்கை இருந்தால்!

# நெடுந்தீவு முகிலனின் பயணிகள் கவனத்திற்கு....

வேலணையூர் தாஸ்

## ஓர் இரசனைக் குறிப்பு

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை பதிவு செய்வது. சமூக இயக்கத்தை எல்லோரும் அவதானிக்கின்றார்கள். ஆனால் கவிஞனின் பார்வை சற்று வித்தியாசமானது. காணுகின்ற காட்சிகளில், நிகழ்கின்ற சம்பவங்களில், மூல இருப்பை ஆராய்ந்து பார்க்கின்ற குணம் கவிஞனுக்குரியதாகின்றது. இதுவே அவனை சாதாரண மனிதரில் இருந்து வேறுபடுத்திவிடுகின்றது என்று சொல்லாம்.

அந்த வகையில் அண்மையில் வித்தியாசமாக, ஓடும் பஸ்சிலே வைத்து வெளியிடப்பட்ட நெடுந்தீவு முகிலனின் "பயணிகள் கவனத்திற்கு" என்ற கவிதை நூல் பேருந்தில் நடக்கின்ற சில சம்பவங்களைக் கவிதையாக சொல்ல வந்திருக்கின்ற போதிலும் எமது சமூக வாழ்வியத்தின் மீதான கூரிய விமர்சன பார்வையையும் முன்வைத்துள்ளது. 'பொய்க்கால் குதிரை' என்னும் கவிதையில்

"அரைச் சொகுசு பஸ்சுக்குள் உட்காந்திருக்கும்
முழு மனிதர்களே உங்கள் பக்கத்தில்
பல அரை டிக்கெட்டுகள் நின்று
கொண்டிருக்கிறார்கள்"

என்ற மனிதாபிமானம் மறந்து இருக்கின்ற மனிதர்களைப் பார்த்துப் பொங்கி எழுகின்ற கவிஞர் சமூகப் பிறழ்வுகளைக் கண்டு தனக்கே உரிய பாணியில் ஏளனம் செய்கின்றார். 'முட்களை உமிழும் ரோஜாக்கள்" கவிதையில்

"பக்கத்து இருக்கைகளில் எல்லாம்
காதல் ஜோடிகள் குழந்தைகள் தயார்
செய்யப்படுகின்றனவோ, என்னவோ"

என வரும் கவிதை இதற்கு நல்ல உதாரணம்.

"அன்னிய நாட்டு பிள்ளைகளோடு
தொலைபேசியில் உரையாடி கண்ணீர்
விட்டுக்கொண்டு காசு அனுப்பச் சொல்லி
கதறிக்கொண்டு இருக்கிறார்"

எனும் கவிதை வரிகளை வாசிக்கின்ற போது பிறர் துயரில் தானும் துயருறுகின்ற கவிஞனின் இரக்க குணம் புலப்படுகின்றது.

இவ்வாறு பயணங்களில் கவிஞர் மனதை பாதித்த பல சம்பவங்களைக் கூறிச் செல்லுகின்ற இத்தொகுதியின் கவிதைகள் சமூகச் சீர்கேடுகளை அம்பலப்படுத்தவும், தோலுரித்துக் காட்டவும் தயங்கவில்லை.

'பூக்கள் புழுதியிலும் மலர்கின்றன' எனும் கவிதையில் சிறுவர்களின் பாலியல் முரண்களும், "பொய்க்கால் குதிரைகள்" கவிதையில் பஸ் சாரதி, நடத்துனர், சில பயணிகளது, பொறுப்பற்ற நடத்தையும் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

கவிதைக்குரிய அழகியல் அம்சங்களை அதிகம் தவிர்த்து இருக்கின்ற தொகுதி இதுவாகும். இருந்தாலும் 'காணாமல் போன அவள்" என்ற கவிதை இக்குறையை நிவர்த்தி செய்ய முயல்கின்றது.

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பல சந்திப்புக்கள் நிகழ்ந்து விடுகின்றன.

சில சந்திப்புக்கள் மட்டும் மனதில் கவிதையாக பதிந்து விடுகின்றன. அந்தச் சந்திப்புக்கள் மீண்டும் நிகழாதா? என மனம் ஏங்குகின்றது. இத்தகையதொரு அனுபவத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார் முகிலன். 'காணாமல்போன அவள்" பலரது கவனத்தை கவர்ந்திருக்கிறாள்.

வாசித்து முடிக்கின்றபோது கவிதை மொழி ஆளுமை என்னும் விடயங்களைக் கடந்து சம்பவங்கள் மனதில் இடங் கொள்கின்றன.

இது தமிழ்க் கவிதை போக்கில் வித்தியாசமான தொரு முயற்சி. பலரது கவனம் இப்போது முகிலன் பக்கம் திரும்பியிருக்கிறது.

வேலணையூர் தாஸ்

---

## செல்வி மாதவி உமாசுதசர்மா



1998.06.22ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த நான் தற்போது கோண்டாவிலில் வசித்து வருகிறேன். யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 8இல் கல்வி பயில்கிறேன். எனது பெயர் செல்வி மாதவி உமாசுதசர்மா எனது கவிதை, சிறுகதை போன்ற எழுத்தியல் திறமைகளுக்கு எம் பாடசாலை துணை புரிகிறது. நான் நல்லூர் பிரதேச சபை நடத்திய கவிதைப் போட்டியில் 2ஆம் இடத்தையும் (2009), GTZ மற்றும் கல்வித் திணைக்களம் இணைந்து திருகோண மலையில் நடத்திய மாகாண மட்டக் கவிதைப் போட்டியில் 2ஆம் இடத்தை (2010) பெற்று விருதுகளைப் பெற்றேன். மற்றும் பல மாகாண மட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளேன். கலைத்துறைகளிலும் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. என் இலட்சியம் எதிர்காலத்தில் தலைசிறந்த இதய வைத்திய நிபுணராக வருவதாகும். தமிழருவி சஞ்சிகை வளர வாழ்த்துக்கள்!

### தேடல்

தேசிய ரீதியில்
தேடலை மேற்கொண்டு
தொடர்ந்து உனை
தொடர்கதையாய் வடித்தேன்.

### தேநீர்

தேயிலைக் கொழுந்து பறித்த
தேனான பெண்களின்
தேடலான வறுமை ஒழிப்பும் - மணத்தது
தேநீர்க் கோப்பையுள்.

# சொர்க்கத்தில் சிலம்பு!

'செங்கோலும் வெண்குடையும்,
செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்-தன் கொற்ற வாயில்
மணிநடுங்க, நடுங்கும் உள்ளம்;
இரவு வில்லிடும்; பகல் மீன்விழும்
இரு-நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவதோர் துன்பம் உண்டு
மன்னவற்கு யாம் உரைத்தும்.'

செங்கோலும் வெண்குடையும் செறிந்த நிலத்தின் கண் மடங்கிக் கீழே வீழ்ந்தன. நம் கோமானது கொற்ற வாயிலின் கண்ணே மணியானது நடுங்க நடுங்க, எம் உள்ளமும் அதனால் நடுங்கியது. இரவிலே வானம் வில்லிடும். பகற் காலத்தே விணமீன்கள் எரிந்து கீழே விழும். எட்டுத் திசைகளும் அதிர்ந்திடும். ஆதலால், நமக்கு வரக்கூடிய துன்பமும் ஒன்று உண்டு. அதனை நம் மன்னவனுக்கு யாம் சென்று உரைப்போம்" என்று கோப்பெருந்தேவியானவள் எழுந்தாள். அவள் மன்னன் இருக்குமிடம் நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.



பாண்டிய நாட்டுக்கு கேடு வரப் போகிறது. தேவி கண்ட தீய உற்பாதங்கள், நடக்கப் போகும் விபரீதத்தை முற்கூட்டியே சொல்லி விடுகின்றன. சிலம்பைக் களவாடியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட கோவலன் மன்னனால் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான். கழுத்து வெட்டுண்டு முண்டமாய்….. நீதி கேட்டாள் கண்ணகி. மதுரை மாநகர் தீக்கு இரையாயிற்று. பத்தினித் தெய்வமாய்க் கண்ணகி. நான் சிலம்பு படித்துக் கொண்டிருந்தேன்.

சிலம்பு தமிழின் ஒளிர்மணி விளக்கம்: தமிழரின் தனிப்பெருஞ் செல்வம், நெஞ்சை அள்ளும் சுவையுடையது. தேனிலே சேர்த்திழைத்தாற் போன்ற தீஞ்சொல்லால், சீர்மையுடன் இனிமையும் எளிமையுடன் செறிவும் அமைந்தது.

எம்மருங்கும் யாவராலும் விரும்பிப் போற்றிக் கொள்ளப்படும் ஒப்பற்ற உயர்தனிக் காப்பியம். தத்துவ உண்மைகள், வாழ்க்கைப் பிரச்சினைகள் வளஞ்செறிந்த தமிழிலே நயமுடன் ஒளிர்கின்றன. தமிழர் மறமேம்பாட்டின் செவ்வியையும் தமிழாட்சியாளரின் அறநெறி பேணும் அளவிலா உறுதிப்பாட்டையும் சிலம்பிலே நாம் கண்டு வியந்து மகிழலாம். என் நெஞ்சின் மேல் பச்சைக் குழந்தையாய் பக்குவமாய்க் கிடந்த சிலம்பு என்னைக் கவர்ந்தது. 'அரசியல் பிழைத்தார்க்கு அறமே கூற்றாகும்' எனும் மாண்புறு மணிமொழியை உலகுக்கே காட்டிய நூல் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். சிலம்பின் சிந்தையிலே நெகிழ்ந்து போன என்னை நித்திராதேவி தன் மென்கரங்களால் இச்சையோடு தழுவிக் கொண்டாள்.

நரகம்! பஞ்சமாபாதகம் புரியும் பாதகர்கள் சித்திரவதை செய்யப்படும் இடம். கொலை, களவு, காமம், சூது, பொய் எனப் பாதகம் புரிவோர் அங்கு சென்று அவதிப்பட வேண்டுமாம். ஆயின், சொர்க்கத்தில் பிரச்சினைகளே இல்லையா? சொகுசான இடம்தான் சொர்க்கமா?


விண்ணுலகத்துத் தருக்கள் யாங்கள் என்று கர்வம் கொண்டிருப்பன போலத் தேவதாரு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. எம்முடன் அடிக்கடி வானவில் போட்டியிட்டுத் தோற்று மறைவது வாடிக்கை என்று கூறுவது போல் பல வண்ணப் பூக்கள் நிரம்பிக் கிடந்ததோர் பொழில். குழலும் யாழும் என்ன இனிமையைத் தரமுடியுமோ அதை இதோ நாங்கள் தருகிறோம். கேண்மின் என்று கூறுவது போல சிற்றாறு ஓடிக் கொண்டிருந்தது. எங்கும் மணம்-விழாக்கோலம். பாசிபடாத, தூசி விழுந்தால் தெரிந்து விடத்தக்க தெளிந்த நீர் கொண்ட தடாகம். கண்ணாடியில் தமது முக இலாவண்யத்தைக் கண்டு களித்திடும் காரிகையர் போல் மலர் சுமந்து கிடந்த தருக்கள் தமது வனப்பைக் கண்டு மகிழ்வதற்காகவே இந்தத் தடாகம் ஏற்பட்டது என்று கூடக் கூறலாம்.

அந்தத் தடாகத்துப் படிக்கட்டுக்களில் அமர்ந்து ஒரு சமயம் தேவலோகமாதர் பொழுது போக்குவர். இங்கு அமர்ந்திருக்கும் போது தேவமாதர் தத்தமது அல்லல், அனுபவம் பற்றிப் பேசிப் பேசித் தமது ஆயாசத்தைப் போக்கிக் கொள்வார் போலும்! அவர்களுக்கு என்ன தொல்லை நேரிட முடியும்? தாங்க முடியாத குடும்பப் பாரமா? தொட்டுத் தாலி கட்டினவன் விட்டுப் பிரிந்ததால் வந்துள்ள துயரமா?

தொட்டதெல்லாம் தங்கமாகும். அவ்வளவு பாக்கியவான் இவன் என்று ஜோதிடரும் தரகரும் கூறியதால் மணமகனாக்கப்பட்டவர், வெறும் மண்ணாங்கட்டி என்பது போகப் போகத் தெரிந்ததால் புலம்பிக் கிடக்கும் பூலோகத்துப் பூவையர் போலவா தேவமாதரின் நிலை இருக்கும்? அவர்களுக்கு என்ன குறை? இந்திர சபையில் நடனம், அக்கினியோ, ஓடைக் குளிர் மதிப்பார்வை காட்டுவான்! உண்ண அமுதம், உடுத்திடத் தேவலோகப் பட்டாடைகள்! நடந்திடும் பாதையோ மலர் தூவியன! இவர்களின் போக பாக்கியத்திற்கு என்ன குறை! என்று தான் எவரும்

எண்ணுவர். ஆனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல் இதயக் குமுறலைத் தரத்தக்கது என்பது அவர்கள் பளிங்காலான படிக்கட்டுகளில் அமர்ந்து பேசும் போதுதான் தெரிந்து கொள்ள முடிந்தது. தேவமாதர் களின் முகத்திலே ஒரு துளியும் கவலையின் கீறல்கள் தெரியக் காணோம். உள்ளத்தில் ஓராயிரம் கவலையின் சோகக் கதைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்று கண்டறிய முடியவில்லை. அவர்கள் இருளுக்கு ஒளி ஊட்டும் பேரழகுடன் காணப்பட்டனர்.

படித்துறையில் பெண்கள் பல சொல்லித் தம்முள் பகிர்ந்து கொண்டனர். அப்போது அவர்களுள் தோழி ஒருத்தி விரைந்து வந்தாள். தோழிகளா வாருங்கள் இன்று நம் தேசத்திற்கு ஒரு புதுவரவு. நமக்கெல்லாம் ஒரு தோழி வந்துவிட்டாள். பூலோகத்திலேயே பேரழகியாகத் திகழ்ந்திருக்கிறாள். அப்படி ஒரு அழகு. தோழிகள் வந்த பெண்ணைப் பார்க்க ஆவலோடு சென்றார்கள்.



தேவலோகத்தின் வரவேற்பு ஆசாரங்கள், சடங்குகள், சம்பிர தாயங்கள் ஆரம்பித்தன. புனித நீரில் நீராட்டுவதற்காக அவளை மலர் சொரியும் பூம்பொய்கைக்கு அழைத்துச் சென்றார்கள் நங்கையர். அவர்களோடு செல்ல அவள் மறுத்தாள். எதுவும் எனக்கு வேண்டாம் என்று அடம்பிடித்தாள். ஒருவாறு அவளை நீராட்டி வாசனைத் திரவியங்கள் பூசி, ஆணை அலங்காரங்களில் ஈடுபடுத்தினர். அவளோ வேண்டா வெறுப்பாக நின்றாள். மறுத்தாள் தோழிகள் இருவர் வரவுப் புத்தகத்தில் அவள் விபரம் அறிய முற்பட்டனர்.

பெயர் : மேனகா சிவராஜா
வயது : 26
இடம் : திருவையாறு, கிளிநொச்சி, இலங்கை.
இறப்பு : அசம்பாவிதம்

முக்கிய விபரங்களை மட்டும் பார்த்து விட்டு மேனகா இருக்குமிடம் வந்தனர். மேனகாவின் முகம் சோகத்தின் இருப்பிடமாய் உறைவிடமாய்த் தெரிந்தது. பல்வேறுபட்ட உணர்ச்சிகளும் ஒன்றாக கலந்து அவள் முகமெனும் பளிங்கில் பரவ விடப்பட்டிருந்தன. மேனகாவைப் பார்த்த போது, கானகத்தில் இராமனைத் தேடிப் பரதன் வந்தபோது அவனது துன்பத் தோற்றத்தை "அவலம் ஈதென எழுதிய படிவம் ஒத்து எய்துவான்" சோகம் என்றால் என்னவென்று கேட்பவர்க்கு, சோகம் என்பது இதுதான் என்று வரைந்து காட்டிய உருவத்தினை ஒத்து வருகிறான் என கம்பர் கூறிய வரிகள் தான் ஞாபகத்திற்கு வந்தன. மேனகா அமைதியாகச் சோகமாக இருந்தாள். சொர்க்கலோகத்துக்கு வந்த விருந்தாளி போலில்லாமல் சோக தேசத்து நங்கையாகக் காணப் பட்டாள். நங்கையர் பலர் கொஞ்சும் மொழி பேசவந்த போதும் உலகத்திலே சிறந்தது மௌனமொழி தான் என்பதை நிருபிப்பவள் போல் சித்திரப் பதுமையாய் உட்கார்ந்திருந்தாள். சரி விட்டுப் பிடிப்போம் என்று தோழிகள் ஒதுங்கிக் கொண்டனர். மேனகா அறுசுவை உணவுகளையும் மறுத்தாள். தனிமையிலிருந்த மேனகாவிடம் ரதி சென்றாள். பாசத்தோடு கரங்களைப் பற்றிக் கொண்டாள். மேனகா, இங்கு வந்துவிட்டால் நாமெல்லாம் ஒன்றாகி விடுவோம். நீ தனிமையில் வாடாதே, சோகத்தை மறைக்காதே. மனம் திறந்து சொல்லி விடு. என்று அவள் கூறி முடிக்கும் முன்னரே சூடான நீர்த் திவலைகள் ரதியின் கைகளைத் தொட்டு நின்றன. ஆம் மேனகா அழுதாள். சோகத்தைச் சொன்னாள்.

காடும், கழனியும், பொய்கையும் பொழிலுமாய் வளநிறை திருநாடு நமது. எத்தனை இயற்கை வினோதங்கள்! இத்தகைய ஈழமணித் திருநாட்டின் வன்னி மாவட்டத்தின் கிளிநொச்சி திருவையாற்றின் திருமகள் நான். தாய்க்குத் தலை மகள். பெருஞ்செல்வம், பேறான வாழ்க்கை, இளமகளாய் இனித்த போது பருவத்துக்குரிய காதல் பக்குவமாய் வந்துவிட காதல் வாழ்வில் களித்தேன். அவரும் எதுவும் அறியாதவரல்ல. தமிழைக் கரைத்துக் குடித்தவர். மேனகா நின்றாள். நெடுமூச்செறிந்தாள். தொடர்ந்தாள் அவர் தமிழாசிரியர். எமது பிரதேசத்தில் அரசியல் பிரச்சினைகள் தலை தூக்கித் தாண்டவமாடிய பொழுதுகளில் எத்தனையோ பேர் தேசம் விட்டோடி வெளிநாட்டில் வாழ, என்னவரோ தன் மண்ணை நேசித்து, தன் மொழியை சுவாசித்து தேசம் கடக்காதவர். உள்ளத்தில் ஊனமில்லாதவர் இன்று உடல் ஊனமாய் இருக்கிறார். பச்சைப் பனம் பழத்தைப் பனையின் கீழ் புசித்த சுகம் பிரான்ஸ் தேசத்தின் பிச்சை வாழ்க்கையில் கிடைத்திடாது என்று தன் தேசத்திலேயே வாழ்ந்தவர் தன் காதல் வாழ்க்கையில் மூழ்கிப் போனது அவளது பேச்சில் புரிந்தது. தொடர்ந்தாள். எங்கள் காதல் இனிமையாகத் தொடர்ந்தது. இருவீட்டுச் சம்மதமும் சந்தோசத்தை மெருகூட்டின.

"நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென் பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ நான்"

அன்று ஆண்டாளின் மனநிலையில் நானும் இருந்தேன். தோழி எத்தனை சந்தோசம். "மாலை சூடும் மணநாள். இளமங்கையின் வாழ்வில் திருநாள். சுகம் மேவிடும் காதலின் எல்லை ஒரு திருநாள் இனியில்லை" என்பதான உன்னத நாள். அதற்காகக் காத்திருந்த இனிய நாளில் தான் குண்டுகள் பல நம் தேசத்தைக் குதறிப் போட்டன.

பசுங்கூந்தல் ஏந்தி புஷ்பத்துடன் யௌவனம் பூண்டிருந்த பெருமங்கைகள் கணவனை இழந்த கைம்

பெண்களாய்ப் பூவிழந்து, களையிழந்து, நிலையிழந்து நின்றனர். காய்க்கும், கனிக்கும் பதிலாக மரக்கிளைகள் சிதைந்த கால்களையும், கரங்களையும் காவி நின்றன. உடம்பற்ற தலைகள் உச்சிகளை அலங்கரித்தன. சிரமிழந்த முண்டங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாய்ச் சிதறியபடி, பள்ளிப் பருவத்தினர் பரிதவித்து உயிர் துடிக்கப் பச்சிளங் குழந்தையோ பாலுண்ட நிலையோடு தாய்முலை சிதறித் தனித்ததாக.

எங்கு நோக்கினும் அவலம், அவலம், அவல ஒலி. பெற்றோரைத் தொலைத்த பிஞ்சுகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், இளங் காளையரின் கைக் கண்ணிகளில் தம்மை இழந்த கன்னிகள். சுவை முத்தத்தால் மொத்தத்தையும் சுகிக்க வைத்தவர்கள் மொத்தமாகத் துகளாகிப் போனார்கள். உண்ண உணவில்லை; குழந்தைக்குப் பாலில்லை; நோயாளருக்கு ஏற்ற உணவில்லை; மருந்தில்லை. துன்பத்தின் சுவடுகளே தொடர் கதையாக...."

ஏது பிழை செய்தோம் நாம்? இன்னலே எம் வாழ்க்கையாகியது. அகிம்சை, அமைதி என்பதெல்லாம் எங்கோ போயொழிய வன்முறையே வரன்முறையாய் இன்றெம்மைத் தாக்க..... என் செய்வர் எம்மவர்? அகிம்சை என்ற ஆத்மார்த்தத்தின் அழகான தன்மை விட்டு இப்போ.... இப்போ, எல்லாமே எதிரிடையாய்...."

"ஐயகோ! என்ன பரிதாபம் இது" ரதி விசனமுற்றாள்.

"சரி, மேனகா நீ இங்க வந்த விதம் பற்றிச் சொல்லு"

"அக்கா என் நிலையா? அதையா கேட்கிறீர்கள்? நான் என் செய்வேன் அக்கா. அக்கா என்னவர் இரக்க சிந்தை கொண்டவரக்கா. அசம்பாவிதத்தால் கை, கால் இழந்து காயமுற்றவர்க்கு வைத்தியசாலை சென்று தன்னால் முடிந்த உதவி என்று செய்து கொண்டிருந்தார். நோயாளிகளின் இடம். சிதைக்கக் கூடாது. என்பது எறிகணைக்குத் தெரிய நியாயமில்லை. சேவை செய்த தாதி உட்பட முப்பது பேர் உடல் சிதறி பலியாகினார்.

ஐயோ! அங்கே என் கண்ணனின் உதவிய கரமும் உருக்குலைய காலொன்றும் காணாமற் போய்விட்டது நிலையறிந்தேன்; நொந்தேன்; துடித்தேன்; கட்டிக் கதறினேன். ஏனிந்த வன்முறை? எதற்கிந்த சோதனை? சிகிச்சைக்காக அவரை வேறிடம் எடுத்துச் செல்ல, உடல் குமிறி உயிர் துடிக்க நின்ற என்னை அடுத்த எறிகணையின் பாரிய சத்தம் செவியைப் பிளந்தது. அதன் சன்னம் இதயத்தைக் கிழித்தது. என் கண்ணனுக்காகத் துடித்த உயிர் காணாமற் போய்விட்டது. என் உடல் சிதற நான் இங்கு வந்துவிட்டேன். நான் சொர்க்கத்து விருந்தாளியாம் என்று என்னை இங்கு அழைத்து வந்துவிட்டார்கள். எனக்கு வேண்டாம் இந்த சொர்க்கம்" எனக் கதறினாள் மேனகா.

"மேனகா அமைதியுடன் இரு கலங்காதே" ரதி சொன்ன போதும் மேனகா தொடர்ந்தாள்.

"இது எனக்கு வேண்டாம். எங்கள் ஊரில் சலசலத் தோடும் ஓடை நீரை விடவா இந்தத் தடாகம் உயர்ந்தது? என் தேசத்தில் என் வீட்டின் புழுதி மண்ணைவிட தேவலோகம் பெரிதல்ல. என் தேசத்தில் குடை பரப்பும் பெரு மரங்களினை விடவா இந்தத் தேவதருக்கள் சிறப்பானவை?

காலைக் கதிரவனின் இளஞ்சுடர்கள், மரங்களில் இலைகளைத் தொட்டுத் தழுவி அணைத்து ரசவாதம் செய்யும் விந்தையில் சிந்தை மகிழ்ந்து போகும் பொன் சொரியும் பூக்கள் நிலக் கம்பளமாய் விரிந்திருக்க அந்தப் பஞ்சுத் தரையில் என் கண்ணனோடு கரம் கோர்த்துப் பாதம் வைக்கும் சுகம் எதற்கிங்கே ஈடாகும்? சொர்க்கமாம், சொர்க்கம் வேண்டாம் இந்த நரகம்" குமுறினாள் மேனகா. அவள் நிலையறிந்த ரதி அவளை ஆசுவாசப் படுத்தினாள்.

"சரி மேனகா, உங்கள் யாழ்ப்பாணத்தின் நிலை எப்படி இருக்கிறது?" ரதி கேட்டாள். "அங்கேயும் சோகத்துக்குக் குறை வில்லைத்தான். தம் உறவுகளுக்காய் ஏங்கித் தவிக்கின்றனர். ஆனாலும், அவர்களிற் பலரை இன்று ஆட்டி வைப்பது தொலைக்காட்சித் தொடர்களும். கையடக்கத் தொலைபேசிகளும் தான். வயது பேறுபாடின்றி இந்த மோகத்திற்குள் மூழ்கிவிட்டார்கள். அதிலும் இந்த இளைஞர்களின் பாடு என்ன சொல்வேன் நான். பண்பாடு கலாசாரமே வன்முறைக்கு வருகிறது. அந்த வன்முறைதானே இன்று என் தேசத்தையும் தீக்கிரையாக்கியது.

அவ்வேளை அரச களை முகத்தில் ஜொலிக்க ஆரணங்கு ஒருத்தி அவ்விடம் நோக்கி வந்தாள். இவர்களின் பேச்சில் கலந்து கொண்ட அவள், "என்ன வன்முறை? எது பற்றிப் பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள். வந்தவருடைய தேஜசைப் பார்த்த மேனகா "யார் இவர்கள்" என்று ரதியிடம் கேட்டாள். "இவர்கள் தான் பாண்டிமாதேவி கோப்பெருந் தேவியார்" வியந்து நோக்கினாள். மேனகா, "ஓ! சிலப்பதிகாரம் சொன்ன சிறப்புறு தேவியாரா தாங்கள்?" என்று அவரை வணங்கி நின்றாள். "சரி எந்த வன்முறைகளைப் பற்றி நீங்கள் உரையாடுகிறீர்கள்?" மீண்டும் ஞாபக மூட்டினார்.

"அம்மையாரே, இவளது தேசத்தின் நிலைமையைத் தான் கூறிக் கொண்டிருக்கிறார்" ரதி தொடர்ந்தாள்.

"இவள் தேசத்தில் குண்டுமழை குறைவின்றிப் பொழிகிறதாம். ஆயுதக் கலாசாரம் அடாவடி பண்ணு கிறதாம். வன்முறைகள் வரம்பின்றி வழிகிறாம். "ஆம் அம்மா, ஏது பிழை செய்தோம் நாம்? இன்னலே எம் வாழ்க்கையாகியது. அகிம்சை, அமைதி என்பதெல்லாம் எங்கோ போயொழிய வன்முறையே வரன்முறையாய் இன்றெம்மைத் தாக்க.... என் செய்வர் எம்மவர்? அகிம்சை என்ற ஆத்மார்த்தத்தின் அழகான தன்மை விட்டு இப்போ.... இப்போ, எல்லாமே எதிரிடையாய்...." சொன்ன மேனகாவின் விழிகளை ஊடுருவிப் பார்த்த கோப்பெருந்தேவியார் குறுக்கிட்டார்.

"வன்முறை வன்முறை என்கிறாயே அதுவும் இன்றுதான் வந்தது என்கிறாய். இது தவறென்று நான்

மறுக்கிறேன்." அம்மையாரின் முகத்திலே ஏதோவொரு இறுக்க உணர்வு பட்டுத் தெளிந்தது தெளிவாகத் தென்பட்டது. மேனகாவும் ரதியும் தேவியாரை நோக்கினர். மேலும் தொடர்ந்தார் அவர்.

எங்கள் கதை உங்களுக்குத் தெரியும். தானே தன் கணவன் தண்டிக்கப்பட்டதற்காய் மதுரை மாநகரையே தீக்கிரையாக்கினாள் கண்ணகி. எம் அரசன் செய்தது தவறு தான். தீர ஆராயாமல் தண்டனை கொடுத்தது பிழை தான். அதை உணர்ந்த போதே என் கொற்றவன் கோலொடிந்து குடைமடங்கித் தன்னுயிர் இழந்துவிட்டார். அறம் பிழைத்தார். அறக் கடவுளே கூற்றாகிவிட்டது. அவர்க்கு மட்டுமல்ல,

"கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தனனே மடமொழி"

என்றபடி நானும் இணைந்து விட்டேன். இதுவே எனக்கு அறம். நான் மட்டுமா? நான் இறந்த பின்னரும் கண்ணகி என்ன சொன்னார் தெரியுமா? "நான் மாடக் கூடலின் மகளிரும் மைந்தரும், வானத்து கடவுளரும் மாதவமுடைய வரும் கேட்டுக் கொள்ளுங்கள் யான். விரும்பிய காதலனைத் தவறாக கொன்ற மன்னவனின் நகராதலினால் இதன்பாலும் யான் வெகுண்டேன். யான் குற்றமேதும் இல்லேன்" என்று கூறி மதுரையை மூன்று முறை வலமாகச் சுற்றிப் பார்த்து இடமுலை கையால் திருகி விட்டெறிந்து நகரைத் தீக்கிரை ஆக்கினார். அல்லவா? அது மட்டும் வன்முறையில்லையா? அமைதி, அகிம்சை இதில் எங்கிருக்கு? சரி என் கணவன் குற்றம் செய்தான். நானும் அவரும் தான் தவறுணர்ந்து உயிர் விட்டோமே. எம் நகர் என்ன செய்தது? நகரையே தீக்கிரையாக்கியது. வன்முறையில்லையா? கண்ணகி கற்புக்கரசி தான். மறுக்கவில்லை. கற்புக் கடவுள் தான்.

ஆனாலும் ஒரு பெண் வன்முறை கொண்டு நகரை தீக்கிரையாக்கி விட்டாளே. அதுவும் தாய்மையின் பாகமாம் மென்முலை திருகி எறிந்து நகரை எரியூட்டியது வன்முறை தானே. இன்று வன்முறை வன்முறை என்கிறீர்களே அன்றே அதுவும் ஒரு பெண்ணிடம் இருந்திருக்கிறது. சிலம்பில் வன்முறை வந்துவிட்டது.

"சிலம்பில் வன்முறையா? நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திற்கு இப்படியொரு குற்றச் சாட்டா?....

என் குரல் என் செவிகளுக்குள் கேட்டது. விழிகளை அகல விழித்தேன். ஓ! இத்தனையும் கனவா? சிலப்பதிகாரம் இப்பொழுதும் என் நெஞ்சின் மேல் பக்குவமாய்ப் படுத்திருந்தது. என் சிந்தனையைக் கிளறிய படி!!

உதயலதா நவதீசன்

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்கள்

என் கற்பனையில் பிறந்த
சின்னக் கவிக் குழந்தை இது
இதுபோல் பலரது கற்பனைகளையும்
நிஜங்களையும் சங்கமிக்க வைத்து
வாழ்க்கைக்கு வழிகாட்டுவன நூல்களே!

வாழ்க்கையே ஒருமாயம் - இதில்
வெற்றியும் தோல்வியும் சகஜம்
மாய உலகில் வாழ்க்கைக் கடலைக் கடக்க
உதவும் மாயமற்ற தோணியே நூல்கள்

மண்வளமற்றுப் போனால்
மரம் எப்படி வளரும்?
கண் பார்வை அற்றுப்போனால்
காட்சிகள் எப்படித் தோன்றும் - அதுபோல்
நூல் அறிவு இன்றி இருந்தால்
வாழ்க்கை எப்படி மிளிரும்

எந்திர வாழ்க்கையது
கடுகதியாய் நகர்கையிலே
மாற்றங்கள் பல இவ்வுலகினிலே
பணம் பணம் பணம் பணத்திற்காக
எங்கும் பிணம் பிணம் பிணம்
மனிதர்களின் ஆறறிவு ஐந்தறிவாய்க் குறையும்
போது மனிதனை உலகத் தெய்வமாக்குவது
வாழ்க்கை வழிகாட்டி நூல்களே.
இயந்திரமான இந்நாளில்
இயந்திரமாம் மனிதர்கள்
தலையின் மேலே பாரம்
இறக்கி வைக்க ஏதிங்கே இடம் - எனினும்
இவ்வகையான அடர்த்தியான வாழ்க்கைப்
பாதைக்கு வழிகாட்டும் திசையறி கருவி நூல்கள்

கிட்லர், நெப்போலியன்
காந்தி, அப்துல்கலாம், பில்கேட்ஸ்
இவர்கள் வாழ்க்கையை மாற்றியமைத்தது
நூல்கள் எனும் அறிவுப் பொக்கிஷங்கள்

உலகில் எது மாறினாலும்
மாறாதது மாற்றம் தான் என்னும் சொல்லை
மாற்றிவிட்டன நூல்கள்
இது புதுமொழி உலகிலே மாறாதது நூல்கள் தரும்
அறிவு.......................................!
எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் - மனித
வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்கள்.

சுயோதமி யோகநாதன்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# புதிய வேதம்

**தொடர்கதை – அத்தியாயம் 045**

இயற்கையுடன் இணைந்து, இசைந்து வாழ்ந்த மனித சமூகம் என்று நாகரீக மாற்றத்தின் வளர்ச்சியில் அடி எடுத்து வைத்ததோ அன்றே துன்பமும் அவர்களை தொடர ஆரம்பித்து விட்டதை அறியாமல் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். தங்களைப் பற்றி மட்டுமே கருத்திற் கொள்ளும் மனப்பாங்குள்ள வரை மனிதன் முன்னேறுவதாக எண்ணிக் கொண்டு இயல்பாகவே வாழ்க்கையில் பின்னடைந்து செல்கின்றான் என்பதே அறிவுபூர்வமான உண்மை. வாழ்வுக்கு ஆரோக்கியம் தான் உறவு. சுற்றம், சூழல் ஆரோக்கியமாக இருந்தால் தான் உறவுகள் வலுப்பெறும். இதனையே முன்னோர் 'சுற்றத்துக்கு அழகு சூழ இருத்தல்' என்று கூறி வைத்தார்கள். ஆனால் இன்று பணமே தான் ஜீவநாடி என்று பெற்றவர்கள் முதற்கொண்டு உறவுகளையும் மறந்து பணத்துக்கும் பகட்டுக்கும் அடிமையாகிக் கொண்டிருப்பவர்களைத் தான் பெரும்பாலும் காண முடிகின்றது.

சுவேதா ஒரு நாள் கூறிய கருத்துக்களை தொகுத்துப் பார்த்த ஜெபநேசனின் சிந்தனையில் மற்ற சகோதரர்களைக் காட்டிலும் வயதில் சிறியவளான அவள் அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் உயர்ந்த ஸ்தானித்திலிருப்பதை உணர்ந்து கொண்டான். வெளிநாட்டிலிருந்த போது புரியாத பல உண்மைகளை நிதர்சனமாகக் காணும் பொழுது எமது சமூக அமைப்பின், கலாசாரமாற்றத்தின் அசிங்கங்களையும் கண்டு உணர்ந்தான்.

சாருலதாவினதும், வித்யாவினதும் திருமணப்பதிவின் போது இந்துமதச் சம்பிரதாயங்களையும் பிறமதச் சம்பிரதாயங்களின் ஊடுருவலையும், ஒருவரை ஒருவர் பார்த்து எதற்குச் செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? என்று பயப்படும் செயற்பாடுகளைப் பார்த்து கிறிஸ்தவனான அவனே வேதனைப்பட்டிருந்தான்.

அன்று நடந்த நிகழ்ச்சிகள் அவள் மனக்கண்ணில் நிழற்காட்சியாகத் தோன்றி விரிந்தது. பார்த்தீபன் வித்யா திருமணப்பதிவின் போது முன்வரிசையிலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவன் கேக் வெட்டிய சமயம் எழுந்து வெளியே சென்று நின்றான். அங்கே வந்த சுந்தரம் பிள்ளை "என்ன தம்பி நீங்கள் வெளியே வந்து நிற்கின்றீர்கள். கேக் வெட்டி ஒவ்வொருவரும் கேக் மணமக்களுக்கு ஊட்டிப் போட்டோ எடுக்கிறார்கள். நீங்கள் நண்பனுக்கு மாப்பிள்ளை வீட்டார் சார்பில் செய்ய வேண்டுமெல்லோ?"

"ஐயா! உங்கள் சம்பிரதாயப்படி சூடம் ஏற்றி தேங்காய் வெட்டி ஒவ்வொரு நிகழ்ச்சியும் செய்தீர்கள். இந்த கேக் வெட்டும் நிகழ்ச்சி உங்கள் சம்பிரதாயத்தில் எப்படி வந்தது?"

"தம்பி, படித்த பிள்ளைகள் புதுப்புது நாகரீக விடயங்களை எல்லாம் செய்யுதுகள். என்ன செய்வது? ஊரோடு அனுசரித்து போக வேண்டியது தானே. நாங்கள் சொன்னால் கேட்கவா போகிறார்கள்?"

"ஐயா இது உங்கள் மதம் சம்பந்தமானது. சைவத் தமிழ்க் கலாசாரம் சம்பந்தப்பட்டது. எங்களுடைய மதத்தவர்கள் உங்கள் சம்பிரதாயங்கள், பண்பாட்டலுவல்களை ஏற்றுக் கொள்வதில்லை. அது தெரியுமா உங்களுக்கு?"

"தம்பி இது சிறுபிரச்சினை இதை ஏன் பெரிது படுத்த வேண்டும்?"

"ஐயா இது சிறுபிரச்சினை என நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்கள் மதத்தை நீங்களே கொச்சைப்படுத்தும் விடயமல்லவா?"

"தம்பி நான் படிப்பு அதிகம் படிக்கவில்லை. அங்கேயிருக்கிறாரே திருமணப்பதிவாளர். அவரே கேட்கிறார். கேக் வெட்டவில்லையா ஏன் செய்யவில்லை என்று பக்கத்து வீட்டு பத்மாவின் எழுத்திலன்று கேட்டவராம். எங்கடை பிள்ளைகள் வந்து சொல்லிச்சினம். அதனால் தான் நானும் அதுபற்றி எதுவும் பேசவில்லை".



ஆக்கம்:
கே.எஸ்.ஆனந்தன்

"சாதி, சமயம், குலம், கோத்திரம் பார்த்து திருமணம் செய்கிறீர்கள். காதல் கல்யாணம் என்றால் கத்தி எடுக்கிறீர்கள். உங்கள் மதத்தை, கலாசாரத்தை கொச்சைப்படுத்தும் இந்நிகழ்வுகளை எப்படி அனுமதித்து சிறுவிடயம் என்று தட்டிக் கொடுக்கின்றீர்கள். நான் ஒரு கிறிஸ்தவன் ஆனால் நான் பாகுபாடு காட்டுவதில்லை. நீங்கள் ஆசார அனுட்டானம் பார்ப்பவர்கள். எப்படி உங்களால் இவற்றை எல்லாம் தெரிந்தோ தெரியாமலோ அனுமதிக்க முடிகின்றது? நான் தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள்".

"தம்பி சொல்வதும் சரி தான். என்ன செய்வது? கலிகாலம் எதுவும் நடக்கலாம். சொன்னாலும் கேட்பார் இல்லை".

"அப்பா உங்களை வரட்டாம். நீங்கள் ஏன் சார் இங்கே நின்று விட்டீர்கள்! மாப்பிள்ளை உங்களையும் வரச்சொன்னார்" என்றாள் சுவேதா.

"அவன் அப்படிச் சொல்லியிருக்கமாட்டான். எனக்குத் தவறானதாகத் தோன்றும் நிகழ்வுகளில் நான்

பங்கேற்பதில்லை. ஆகவே நான் நிகழ்ச்சிகள் முடிந்ததும் வருகின்றேன்''.

"நீங்கள் அப்பாவிடம் கூறிய அனைத்தும் நான் கேட்டுக் கொண்டு தான் நின்றேன். உங்களைப் போன்று இலட்சியப் போக்குள்ளவர்கள் செயலில் காட்டுகின்றீர்கள். ஆனால் பண்பாடு, கலாசாரம் பற்றி வாய்கிழியப் பேசுபவர்கள் எல்லாம் தங்கள் சுயகாரியங்களில் அவற்றை தட்டிக் கழித்துவிட்டே செயற்படுகின்றார்கள். நீங்கள் வெளிநாட்டில் வசித்து விட்டு வந்து இப்படி எல்லாம் கதைக்கிறீர்கள் என்று உங்களை எள்ளி நகையாடுவார்கள். என்னுடைய குடும்பத்தில் நான் உங்கள் கட்சியைச் சேர்ந்தவள். சிரித்துக் கொண்டே கூறினாள்.

"மிஸ் சுவேதா, நீர் என்ன சொல்கின்றீர்?"

"இப்போது உங்களுக்கு எதுவும் புரியாமலிருப்பதே நல்லது. எனக்கும் சில இலட்சியங்களிருக்கு. அவை செயல்பட ஆரம்பிக்கும் போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அப்பொழுது என் பெரியண்ணனிடம் எனக்காக நீங்கள் சிபார்சு செய்யணும்'' என்று கூறிவிட்டுச் சிரித்துக் கொண்டே ஓடினாள்.

எங்கள் சமூகத்தில் நல்ல நிலையிலிருப்பவர்கள் கூட பகட்டான வாழ்வையும், தங்களை மற்றவர்கள் பெரிய மனிதர்களாக நினைக்க வேண்டும் என்ற நோக்கையும் கொண்டு செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஒரு வேளைச் சாப்பாட்டைப் பெரிதாகக் கூறும் நிலைக்கு வெளிநாட்டுப் பணப்புழக்கம் மக்களில் பெரும்பாலாரை மாற்றியமைத்து விட்டிருப்பதை எண்ணி மனம் புழுங்கினான். வளர்ந்து வரும் நாகரிக வளர்ச்சி பழமைகளைத் தொலைத்துவிட்டுக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நடமாடும் செயற்பாடுகள் மலிந்துவிட்டிருக்கின்ற கொடுமை என்றாவது ஒரு நாள் மாறத் தான் போகின்றது என்று தன்னைத் தானே திருப்திப்படுத்திக் கொண்டு பயணத்துக்கான ஏற்பாடு களைக் கவனிக்கலானான்.

இரவு பத்து மணியிருக்கும் மறுநாள் பயணத் துக்கான ஆயத்தங்களைச் செய்து விட்டு வித்யா தங்கை சுவேதாவிடம் வந்தாள். கண்மூடிப்படுத்திருந்த சுவேதாவின் பக்கத்தில் வந்து அமர்ந்த வித்யா "ஏன்டி தூக்கமா?" என்றாள்.

"இப்ப தான் முயற்சிக்கின்றேன். தூக்கம் வந்தால் தானே"

"ஏன்டி சுவேதா நீயும் நானும் அன்றைக்கு கதைத்துக் கொண்டிருந்த போது அப்பா எங்கள் கதையை கேட்டுக் கொண்டு வந்தவர் தானே. உன்னிடம் ஏதும் கேட்டாரா?"

"இல்லையே நானும் பயந்து கொண்டு தானிருந்தனான். றெயிஸ்டேசன் அமளியில் மறந்து போயிருப்பார்'' என்றாள் சுவேதா.

"நல்லாத்தான் மறந்திருப்பார். நான் கொழும்புக்குப் போய் வரும் பொழுது உனக்கு என்னடி வாங்கிக் கொண்டு வரவேண்டும்?"

"நீ கேட்டதே போதும். நீ உன்னைத் தொலைத்து விடாமல் திரும்பி வந்தால் அதுவே போதும்'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

"கழுதை, அக்காவோடு கதைக்கும் கதையா இது? அவருடைய அப்பா, அம்மா எங்கள் அப்பா எல்லோரும் தான் பொடிகாட்டா வாறாங்களே. அதுவும் போக மிஸ்டர் பார்த்தீபன் என்னை விடப் பயந்தாங் கொள்ளி. நான் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை'' என்று சிரித்தாள் வித்யா.

"நீ அதிஸ்டசாலியடி வித்யா. மிஸ்டர் ஜெபநேசன் ஒரு ஜென்டில்மேன். அவருடைய தோஸ்து உன்ரை ஆள். எப்படி இருப்பார் என்று சொல்லத் தேவையில்லை. நீ சந்தோஷமாகப் போய்விட்டு வா, குட்நைட்'' என்று அவளுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

வீட்டில் முன் ஹோலில் சுந்தரம் பிள்ளை கட்டிலில் படுத்துக்கிடந்தார். வீட்டில் அடுத்தடுத்து நடைபெற்ற சுப நிகழ்ச்சிகளால் தூக்கம் தொலைந்து மகிழ்ச்சியான சிந்தனைகளில் மிதந்து கொண்டிருந்தார். அவருடைய எதிர்பார்ப்புக்களிலும் பார்க்க மிகச் சுலபமான வழிகளில் இரு பெண்களையும் கரை சேத்துவிட்ட மகிழ்ச்சியில் மனம் புதுத்தென்பு பெற்று விளங்கியதால் எதிர்காலச் சிந்தனை அவரை ஆட்கொண்டிருந்தது.




மகன்களுக்குப் பெண் பார்க்கு முன்பு சுவேதாவுக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவனைச் செய்து வைத்துவிட்டால் பின்பு மகன்களுக்குப் பணமாகவே சீதனம் வாங்கி வட்டிக்குக் கொடுத்து விட்டு ஊருக்குள் பெரிய மனிதனாக வலம் வரலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தவருக்கு சுருட்டுப்பற்ற வைக்கவேண்டும் போலிருக்கவே எழுந்து உட்கார்ந்து கொண்டு தலையணைக்குக் கீழிருந்த சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். நான்கு ஐந்து தடவை புகையை உறிஞ்சி வெளியேற்றியதும் புத்துணர்ச்சி பிறந்தது. வித்தியாவின் எழுத்துக்கு வந்திருந்த அவரது பெரியதாயாரின் மகள் மரகதம் கூறியது ஞாபகத்திற்கு வந்ததும் மனதில் மீண்டும் புத்துணர்ச்சி பரவியது.

"என்னண்ணே திடீர் என்று வித்யா விடயத்தையும் ஒருத்தரோடையும் கதைக்காமல் முடிச்சிட்டாய். சுவிஸில் இருக்கிற என்ர மகன் நவநீதனுக்கு வித்யாவைக் கேட்பம் என்றிருந்தனான். அதுக்கிடையில் நீங்களும் அவசரப்பட்டியள்'' என்றாள் மரகதம்.

"பெண்ணைப் பெத்தவை வசதியாய் ஒன்று வரும் போது அதுவும் நான் தேடியலையாமல் அவளுடைய தமையன்மார் சிபார்சுடன் வந்த மாப்பிள்ளையை எப்படி விட முடியும். நீ அன்றைக்கு சாருதலாவுடைய எழுத்துக்கு

வந்த போது என்னிடம் கேட்டிருக்கலாம் தானே? நான் ஏதும் கேட்டு மச்சான் ஏதும் சொல்லியிருந்தால் எங்களுடைய உறவும் கெட்டுப் போய் விடுமில்லையா? அதனால் தான் நானும் எதுவும் சொல்லவில்லை. இப்ப என்ன இதோடை முடிஞ்சு போச்சே சுவேதா இருக்கிறாள் தானே" என்று அவளுக்கு சொல்லிக் கொண்டிருந் ததையும் நினைத்தவுடன் இனி ஒரு பிரச்சினையுமில்லை என்ற முடிவுக்கு வந்தவர் கையிலிருந்த சுருட்டைக் காலடியில் போட்டு மிதித்து விட்டு கட்டிலில் சாய்ந்தார்.



நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றைச் செய்யும் என்பதை மறந்து வசதி வாய்ப்புகக்கள் வந்ததும் மனம் போல் செயல்பட ஆரம்பித்து விடுகின்றனர். கஸ்டம் வரும் போது தானே கடவுளை அழைக்கின்றனர். இன்பமும் துன்பமும் சுழல் சக்கரம் என்பதை ஓரளவுக்கேனும் தெரிந்து வைத்திருக்கும் மனிதர்களால் மனம் போன போக்கில் செயற்பட எப்படி முடிகின்றது? இதற்கு வசதி வாய்ப்புக்கள் தான் உறுதுணையாய் அமைந்து விடுகின்றன என்பதை அறியாமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார் சுந்தரம்பிள்ளை.

மறுநாட்காலையில் எல்லோரும் பயணம் புறப்பட்டு போய்விட்டனர். சாருலதாவும் வேலைக்குப் போய்விட்டாள். சுவேதா வீட்டில் நின்றிருந்தாள். பரீட்சை முடிந்து விட்டதால் பொழுதுபோக்கு வதற்காக நூலகத்திலிருந்து எடுத்துவந்த புத்தகங்களைத் தேடி எடுத்து வந்து வாழ்க்கைத் துணை எனும் நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஏற்ற மனநிலையில் அமைந்திருந்தது. அந்த நாவலில் வரும் கதாபாத்திரம் எப்படித் தன் வாழ்வினை அமைத்துக் கொள்ள குடும்பத்தவருடன் போராடி வெற்றி பெறுகின்றாள் என்பதை மிகவும் ரசித்துப் படித்துக் கொண்டிருந்த போது வெளியே தபால்காரன் மணி அடிக்கும் ஓசை கேட்டது. எழுந்து வந்து கடிதங்களைப் பெற்றுக் கொண்டாள். அவளுடைய பெயருக்கும் ஒரு கடிதம்.

அந்தக் கடிதத்தை ஆவலுடன் பிரித்து எடுத்து அவசர அவசரமாகப் படித்தாள். ஒருமுறைக்கு இருமுறை படித்தாள். மீண்டும் வாய்விட்டுப் படித்தாள்.

மிஸ் சுவேதா,

கடிதம் கிடைத்தது மகிழ்ச்சி மட்டுமல்ல எனது வாழ்த்துக்களும், உமது அக்காக்கள் இருவருக்கும் எதிர்பாராத விதமாக திருமணம் நிச்சயமாகி விட்டதாக எழுதியிருந்தீர். நல்ல செய்தி தான். உமது புத்திமதியின் படி நான் கிடைத்த அரச உத்தியோகத்தினை ஏற்றுக் கொண்டு வெளிவாரியாகவும் உமது உதவியுடன் படிப்பதால் எதிர்காலம் எமக்கு பிரகாசமானதாகத் தான் இருக்கும். பயமாக இருக்கிறதாயினும் எமது குடும்பத்தினரால் பயமில்லை. மதத்தால் வேறு பட்டாலும் இனத்தால் மொழியால், மனதால் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம். இறைவன் எமக்கு நல்ல வழிகாட்டுவார் என்ற தளராத நம்பிக்கை யுடனிருக்கிறேன். மற்றவை நேரில்...

அன்புடன்
டேவிட்.

கடிதத்தைப் படித்து முடித்த போது அவள் உள்ளத்துள் உவகை பொங்கி வழிந்தது. அப்பா எதிர்த்தாலும் போராடித்தீர்வது என்று மனதில் முடிவு செய்து கொண்டாள். அறைக்கு வெளியில் காலடி ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தாள். சாருலதா நின்று கொண்டிருந்தாள்.

"அக்கா ஏன் நேரத்துடனேயே வந்திட்டாய்?"

"நான் வந்தது இருக்கட்டும். உது யாருடைய லெட்டர். ஏதும்..." என்று உள்ளார்ந்த நோக்குடன் கேட்டாள் சாருலதா.

"அக்கா, இது என்னுடைய அன்புள்ளம் ஒன்று எழுதியது. உங்களுடைய திருமணங்கள் பற்றி எழுதியிருந்தேன் அதற்கு கிடைத்த பதில். போதுமா? இன்னும் விரிவாக விளக்க வேண்டுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"சுவேதா, நாங்கள் போன பின்பு அம்மாவுக்கு ஆறுதலாக நீதான் இருக்கப்போகிறாய். அப்பாவின் குணம் தெரியும் தானே? எடுத்தேன் கவுட்டேன் என்று அம்மாவோடு தான் ஏறி விழுவார். அப்படி ஏதுமிருந்தால் நாங்கள் இருக்கும் போதே விசயத்தை வெளிக் காட்டி ஓர் முடிவுக்கு வரலாம். அதனால் தான் கேட்டேன்."

"அக்கா நீயும் படித்தவள் தானே? நாங்கள் எதையும் ஆரம்பிக்கலாம், திட்டங்கள் போடலாம், நடைமுறைப்படுத்தவும் செய்யலாம், ஆனால் முடிவு எல்லாம் எமது விருப்பப்படி நடைபெறுவதில்லை. நடப்பவை நல்லபடி நடக்க வேண்டும் என்று தானே ஆண்டவனை வழிபடுகின்றோம். நடப்பவை நன்மைக்கே என்று பொறுத்திருப்போம்" என்று சிரித்தாள். "உனக்கு எல்லாம் பகிடி தான்" என்றாள் சாருலதா.

"இதில் என்ன பகிடி இருக்கு? உனக்கும் சரி, வித்யாவுக்கும் சரி அப்பா நினைத்தபடி எதுவும் நடந்ததா? நினையாப்பிரகாரமாகத் தானே நடந்தது. அப்படித் தான் எல்லாம் நடக்கும். சரி வா சாப்பிடப் போவம்" என்று எழுந்து வெளியே வந்த பொழுது வாசலில் வந்து நின்ற மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கி வந்தவனைப் பார்த்து இருவரும் திகைத்து நின்றனர்.

(வளரும்)

# தமிழ் மருத்துவமும் ஆரோக்கிய வாழ்வும்

டாக்டர் கந்தையா சோதிதாசன் R.I.M.P (Cey)



தமிழருடைய பாரம்பரிய மருத்துவ முறைகள் இன்றைய மருத்துவப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைப் பற்றி இக்கட்டுரைத் தொடர் ஆராய்கிறது. அந்த வகையில் Obesits என்று அழைக்கப் படும் உடற்பருமன் நோய் பற்றியும் இதற்கான தமிழருடைய பாரம்பரிய மருத்துவ தீர்வு பற்றியும் இங்கு நோக்குவோம்.

**உடற்பருமன் என்றால் என்ன?**

ஒருவரது உடல் நிறையானது அவரது உயரத்திற்கு ஏற்ப அமையாது அதிகரிப்பதாகும். அதாவது உடலில் அதிகமாக கொழுப்புச் சேர்வதை குறிக்கும். மேற்கு நாடுகளில் உடற்பருமன் ஒரு பாரிய சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது. இன்று ஆசிய நாடுகளிலும் குறிப்பாக இலங்கையிலும் உடற்பருமனால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**உடற் பருமனுக்கான காரணங்கள்**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் எமது உணவு முறைகள் வாழ்வியல் நடைமுறைகள் மாற்ற மடைந்திருப்பது உடற்பருமனுக்கு முக்கிய காரண மாகிறது. இவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) அதிகளவில் உணவு உண்ணுதல்.
2) போதிய உடற்பயிற்சியின்மை.
3) அதிக நேரம் ஒரே இடத்தில் இருந்து வேலை செய்தல், தொலைகாட்சி பார்த்தல், அலுவலகப் பணிகள்.
4) சில வகை ஓமோன்கள் அதிகரிப்பதும் குறைவடைவதும்.
5) மரபணு மாற்றங்களால் ஏற்படும் பரம்பரை உடற் பருமன்.

**உடற்பருமனை அளவிடுவது எப்படி?**

உடற்பருமனை அளவிட உடல் எடை குறியீட்டு எண் (Body mas). இது ஒருவரது உயரம் நிறை என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. இந்தச் சுட்டி ஒருவரைச் சராசரி எடையுள்ளவர் குறைந்த எடையுள்ளவர் என பாகுபடுத்துவதன் மூலம் உடல் எடை குறித்த விழிப்புணர்வை அளிக்கிறது. இக்குறியீட்டு எண்ணின்படி குறைந்த எடையுள்ளவர்கள் 18.5க்கு கீழ் உள்ளவர்கள்.

சராசரி எடையுள்ளவர்கள் 18.5-24.9

அதிக எடையுள்ளவர்கள் 25-29.9

உடற்பருமன் உள்ளவர்கள் 30 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் என வகைப்படுத்தப் படுகிறது.

அதிகரிக்கும் உடல் எடை மற்றும் அதிக கொழுப்பு என்பவற்றால் உயர் இரத்த அழுத்தம் மூட்டு வியாதிகள் நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இன்று அனேகமாக நடு வயதில் உள்ள பெரும்பாலோர் இவ்வாறான நோய்த்தாக்கத்திற்கு உட்படுகின்றனர். இவ்வாறு பல நோய்களுக்கு காரணமாகும் உடற் பருமனை குறைக்க என்ன செய்யலாம்.

**உடற்பருமன் தீர்வுகள்**

உடற் பருமன் ஏற்படாமல் இயல்பாக உடலைப் பேணுவதற்கு பாரம்பரிய தமிழர் மருத்துவ முறையில் பல தீர்வுகள் சொல்லப்படுகின்றன. இதில் குறிப்பாக சொல்ல வேண்டியது அக்கால மக்களது உணவுப் பழக்கம்.

தற்போது அதிகம் பயன்படுத்தப்படும் சொக்கிலேற், பிஸ்கட். றோல் போன்ற உணவுகள் பாவனையில் இருக்கவில்லை நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளை உண்டார்கள். இறைச்சி கொழுப்பு சேர்ந்த உணவுகளை எடுக்கிற போது ரசம் சேர்த்துக் கொண்டார்கள். இதில் சேருகின்ற உள்ளி, மிளகு என்பன கொலஸ்ரோலை குறைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை பார்த்தல், அதிக நேரம் ரீவி பார்த்தல் என்பனவும் நிறை அதிகரிப்பிற்கு காரணமாகிறது. அதைத் தடுக்க யோகாசன முறைகளைப் பாரம்பரிய மருத்துவம் சிபார்சு செய்கிறது. சர்வாங்காசனம், மயூராசனம், சிரசாசனம் போன்ற ஆசனங்கள் உடற் பருமனை குறைக்க உதவுகின்றன. இப்பயிற்சிகளை நித்திய வாழ்வில் பழக்கமாக்கி கொள்வதால் உடலுக்குத் தேவையான நல்ல கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கிறது. பாதகமான கொழுப்பின் அளவு குறைகிறது.

**மருந்துகள்**

தமிழர்கள் மருத்துவத்தில் உடற் பருமனுக்குச் சித்த ஆயர்வேத மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. வறுத்த கொள்ளு சூரணம், திரிபலாதி சூரணம் என்பனவும் உள்ளி, கடுக்காய், இஞ்சி போன்ற மூலிகைகள் சேர்ந்த மருந்துகளும் பரிந்துரைக்கப் படுகின்றன. இம் மருத்துவ முறையான வைத்தியரின் மேற்பார்வையில் எடுக்கப்பட்ட வேண்டும் எனவே பாரம்பரிய உணவு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் யோகாசனம் போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்வதாலும் எமதுடலே எமக்குப் பாரமாவதை தடுப்போம்.

## கருவறையே கோவில்

கருவறையைத் தொட்டிலாக்கித் தாலாட்டியவள்
கல்லறையைத் தொட்டாலும் போராடுபவள்
உதிரத்தை உரமாக்கி உயிரூட்டியவளே
சதுரத்தை எனக்கெனவே சங்கமித்தவளே
இன்று நான் கவிதையில் பேச்சுத் தொடுப்பதே
அன்று எனக்கு நீ மூச்சுக் கொடுத்ததால் தான்.

சி.சிறீதரன், கொட்டடி.

# யதார்த்தங்களையும் ஏற்கக் கற்றுக் கொண்டபடியால்!

மௌனமாய் நான் பேசியவை பெருமதியானவை
நான் மௌனம் கலைத்தபோது ஒதுக்கப்பட்டேன்
மௌனமானேன் எழுதக்கற்றுக் கொண்ட போது
மந்திரமாய் சுருங்கிய வார்த்தைகள் கவிதை யானது

மனம் நிரம்பி உடைந்து போகாதபடி - ஒற்றைக்
கதவாய் இருக்கும் ஊற்றே ஊடகங்கள் - கற்பனைகள்
மிதமிஞ்சியவையாகக்கூட இருக்கலாம்
கலைகளுக்குள் இவை சகஜம் தானே!

கற்பனைகள் தான் கற்பனையை அறிய முடியும்
வைரம்தான் வைரத்தை வெட்ட முடியும் - கற்பனை
கடந்த இறைவனைக் கூட பலர் பல்வகையில்
கற்பனை செய்து கண்டவையே மதங்கள்

கற்பனையில் வாழ்பவன் இராஜாவாக, மந்திரியாகக்
கூட வாழலாம். அவன் யாரையும் ஏமாற்றிப்
பிழைப்புக்கள் நடத்துவதில்லை. ஏமாற்றங்கள் நிறை
வேறாத கனவுகள் இந்நிலையின் விளைவு.

குறியீடே மௌனத்தின்வாசல், குழம்பித் தெளிந்த
அறிவின் உச்சமும் அதுவே. மனம் பிரம்மத்தின்
வடிவமும், மாயைதானே. யதார்த்தங்களையும்
ஏற்கக் கற்றுக் கொண்டதால் மனதுக்கு நிம்மதி!

தொடர்பற்ற வார்த்தைகள் கூடக்கவிதை
தொடர்புபடுத்திப் பார்ப்பதே கற்பனை, தொடர்
இலக்கியத்துக்கு இதுவும் அடக்கம், கலைகள்
என்பது நிஜவாழ்வுக் கப்பாலான நிழல்!

மாயையிலிருந்து பிறந்ததுவே படைப்புக்கள் எல்லாம்
மீண்டும் மாயமாகும் காலம் வரும்போது - காலம்
எம்மை இயக்குவதும் மாயையால் தானே, மனங்கள்
இன்பமென ஏங்குவது கூட இதனால் தானே!

வாழ்வுகூட மாயைதான் என்றாலும் எம் கடமை
களைச் செய்யச் சொன்னது பகவத் கீதை - இவை
கடந்த இறைவாழ்வு கூட மாயை தானே - கடவுளைச்
கண்டிட எம் கடமைகளைச் செய்வதே மேல்!

அறிவை அறிந்தால் எல்லாம் நாடகம், நாம்
போடும் எல்லாம் போலி வேசம், ஒரு பொல்லாப்புமில்லை
என்றாலும், ஏற்ற பாத்திரத்தில் இயங்கி இறையடி
சேர்தலையே போற்றுவோம்!

இயங்கும் இயற்கை வைத்த நிஜதி அதை அநுபூதி
மான்கள் மாற்றி உலகை அழிவில் இருந்து காத்து
ஒவ்வாமைகளை ஒறுத்து என்றாலும் சனத்தொகை
பெருகி மீண்டும் இயற்கைச் சீற்றம்!

பிறப்பு இறப்புத் துன்பம் பிறந்துவிட்டால் வாழ்ந்து
தான் ஆகவேண்டும், எல்லாம் மாயையென்று
உணர்ந்தால் கற்பனைகள் சிறப்பே - கற்பனையை
வளர்க்கப் பல படைப்புக்களைச் செய்வோம்!

கற்பனை தான் காதல், கற்பனைதான் காவியம்
கற்பனை தான் கண்டுபிடிப்புக்கள், கற்பனை தான்
அறிவு என்றாலும் கற்பனையை
கற்பனையாக ஏற்று நிஜங்களைத் தரிசிப்போம்!

இராம ஜெயபாலன் (கொக்குவில்)

## இன்பத்துப்பால் இனிய கவிதைகள்

திருவள்ளுவரின் இன்பத்துப்பால், காதல் உணர்வுகளை அழகாகக்கூறும் இலக்கியப் படைப்பு. இதில் அடங்கும் இனிய குறட்பாக்களை இன்றைய புதுக்கவிதையில் எழுதினால் எப்படி இருக்கும் என்ற எண்ணத்தில் உருவான கவிதைகள் இவை.

குறள் 1242:
காதல் அவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு.

அவர் நமது காதலை மதித்து நம்மிடம் வராத போது, நெஞ்சே! நீ மட்டும் அவரை நினைத்து வருந்துவது அறியாமையாகும் நீ வாழ்க.

காற்றாய் மாறி உன் மூச்சாக மாட்டேனா
விழியில் விரியும் கனவுகளோடு
காத்திருக்கிறேன்
இதயவாசல் இன்னுமேன் அடைத்திருக்கிறாய்?
நான் உனக்காக தினமும் மலரும் தாமரை
சூரியன் நீ தான் கண்டு கொள்வதில்லை
மல்லிகையாகப் புன்னகைக்கிறேன்
அலரிப்பூவாக அலட்சியம் செய்கிறாய்
உதயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்
அஸ்தமனங்களை அறிமுகம் செய்கிறாய்
என் காதல் பாடல்களில்
முகாரியைச் சேர்க்க ஏன்
ஆசைப்படுகிறாய்.
உன் நினைவுகள் மட்டும் பனிக்காற்றாய்
ஆனால் நிஜமோ பாலை வெயிலாய் தகிக்கிறது.
காற்றாய் மாறி உன் மூச்சாக மாட்டேனா
உன் கையில் சிறையாகி
காதலில் கரையேனா
என்னைத் தவிர்க்கிறாய்
என்பதை உணர்கிறேன் அன்பே ஆனால்
உன்னையே எண்ணி
உருகும் என் நெஞ்சு....

*வேலணையூர் தாஸ்*

*(வளரும்)*

# இலக்கிய இன்பம்

சங்ககாலம் தொட்டு தமிழகம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. சங்க காலம், சங்கமருவிய காலம், சோழர் காலம், பல்லவர் காலம் ஆகிய காலங்கள் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய காலங்களாகும். பெரும்பாலான தமிழிலக்கியங்கள் எழுச்சி பெற்ற அக்காலப் பகுதி மன்னராட்சியிலேயே இருந்து வந்துள்ளது. குடிமக்களின் தலைவனாக மன்னன் விளங்கினான். இதனால் மன்னர்களில் ஒப்பற்ற வீரர்களையும் மக்களிடத்தில் மன்னர்கள் மீது உண்டான காதலையும் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை. அந்தவகையில் முத்தொள்ளாயிரம் என்ற பழந்தமிழ் இலக்கியநூல் குறிப்பிட்டுக் கூறக்கூடியது. அகத்திணையும் புறத்திணையும் இணைந்த இலக்கியங் களில் முத்தொள்ளாயிரமும் ஒன்று. இந்நூலில் 900 பாடல்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. மூவேந்தர்கள் மேலும் பாடப்பட்ட தொளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. வெண்பா யாப்பில் உள்ள பாடல்கள் படிப்போர் உள்ளங்களில் காதல் உணர்வை வளர்க்கின்றன. அதில் உள்ள சில பாடல்களைப் பார்ப்போம்.

சேரமன்னனிடம் காதல் கொண்டாள் ஒரு பெண். காதல் வயப்பட்டுத் தனது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமற் கலங்கினாள். மன்னன் மீது கொண்ட காதல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. "நான் மன்னனிடத்தில் காதல் கொண்டு வருந்துகிறேன். அதனை இந்த நகரவாசிகள் மன்னிடம் சொல்லி என் துன்பத்தை துடைக்கக் கூடாதா? நான் ஒரு பெண் என்ற படியால் எப்படி மன்னனிடம் சென்று என் காதலை வெளிப் படுத்துவது எனவே ஒருவர் துன்பப்படும் போது உதவுவது தானே பொது வியல்பு. எனவே எனது துன்பத்தை போக்குவதற்கு மக்கள் முன்வர வேண்டும்" என்பதாக அப்பாடல் அமைந்து காணப்படுகிறது.



"மல்ல நீர் மாந்தையர் மாக்கடுங் கோக் காயினும்
சொல்லவே வேண்டும் நம்குறை நல்ல
திலகங் கிடந்த திருநுதலாய்! அஃதால்
உலகம் கிடந்த இயல்பு"



இதன்பொருள் யாதெனில் அழகுடன் திலகம் வைத்திருக்கும் தோழியே, நீர்வளமிக்க மாந்தை நகர் வாழும் மக்கள் சேர மன்னனாய் இருந்த போதும் இது காதல் தொடர்பான துன்பந்தானே என்றிருக்காமல், இவர்கள் இக்குறையை எடுத்து மன்னனிடம் சொல்ல வேண்டும். அதுதான் நெறியாளர்களின் பொது இயல்பு என்கிறார் புலவர்.

இன்னொரு காதல் வசப்படும் பாடலைப் பார்ப்போம். சோழ மன்னன் வீதியுலா வந்து கொண்டிருக்கிறான். அக்காட்சியைப் பெண்கள் தங்கள் வீட்டு யன்னலின் வழியே பார்த்து ரசிக்கின்றனர். மன்னனின் அழகு உருவம் பெண்களின் மனதைப் பிழறச் செய்கிறது. முகங்களை அங்கும் இங்கும் திருப்பித் திருப்பிப் பார்த்து மகிழ்கின்றனர். இக்காட்சியை பார்க்கும் போது கடற்கரையிலே மீனவர்கள் கரைவலை இழுக்கும் போது வலையில் அகப்பட்ட மீன்கள் துடிப்பதற்கு ஒப்பாக இருந்ததாகக் காட்டுகிறார் பாடலாசிரியர்.

"சுடரிலை வேல் சோழன் தன் பாடலம் ஏறிப் படர்ந்தான்
பைந் தொடியள் காணத் தொடர்புடைய நீல வலையிற்
கயல் போல் பிறழுமே
சாலேக வாயில் தோறும்"

இதன் பொருளை நோக்கினால் ஒளிமிகுந்த இலை போன்ற வேலைக் கையகத்தே கொண்ட சோழ மன்னன் குதிரை மீதேறி வீதியில் உலா வந்தான். அப்போது அவனை அவ்வீதியின் இருமருங்கும் அழகிய வளையல்களை அணிந்த பெண்கள் வீட்டு யன்னலின் வழியாகக் கண்டுகளித்தனர். இக் காட்சி எப்படி இருக்கிறது எனில் அவர்களது காதற் கண்கள் மீனவர்கள் வீசும் கறுப்புநிற வலைகளுக்கிடையே சிக்கித்தவிக்கும் மீன்களை ஒத்திருக்கின்றன. என்று புலவர் பாடுகின்றார். காதல் உணர்வை தூண்டும் இன்னொரு பாடலையும் படிப்போம்.

"ஊடல்என ஒன்று தோன்றி அலருறூஉங் கூடல்
இழந்தேன்
கொடியன்னாய் நீள்தெங்கின் பாளையிற் தேன்தொடுக்கும்
பாய்புனல் நீர்நாட்டுக் காளையைக் கணபடையுள் பெற்று"

இதன் கருத்து யாதெனில் பூங்கொடியைப் போல உடலமைப்பைப் பெற்ற தோழியே! நீண்ட வளமுள்ள தென்னைகளின் தேனடைகளையும் நீர் வளத்தையும் உடைய சோழ நாட்டின் இளமையுடன் கூடிய மன்னன் நான் உறங்கிக் கொண்டு இருக்கும் போது என்னைத் தழுவ வருவதாகக் கண்டேன். அப்போது நான் கோபப்பட்டு விலகி ஓடினேன். அவன் மீது கொண்ட காதல் எல்லையற்றது. அதற்குள் விழித்துக்கொண்டு பின்வருமாறு எண்ணுகிறாள். "கோபம் என்ற ஒன்று அப்போது எனக்கு இருக்கா விட்டால் மன்னனுடன் கூடியிருப்பேன். இப்போது மன்னனின் கூடலை இழந்து தவிக்கிறேன்" என்று எண்ணுவதாகப் பாடல் அமைந்திருக்கிறது.

**எஸ். நதிபரன் B.A (Hons)**

இவ்வாறாக மூவாயிரம் பாடல்களின் பெரும்பாலான பாடல்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பெண்கள் கொண்ட ஒருதலைக் காதலை வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளன.

பொருத்தமான உவமான உவமேயங்களுடன் படிப்போர் மனக்கண்களில் காதல் உணர்வை தூண்டும் வகையில் புலவர் வெண்பா யாப்பில் பாடியுள்ளார். இப்பாடல்கள் அக்காலத்தில் மன்னர்களுக்கும் பெண்களுக்கும் இருந்த உறவை, அன்பை, காதலை வெளிப்படுத்துவதாக அமைகின்றதெனில் மிகையில்லை.

# மக்கள் வாழ்வியலில் யதார்த்த வாதம்

மனித சமுதாயத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வாழ்வியல் நடைமுறையாக யதார்த்த வாதம் தொன்றுதொட்டு விளங்கி வருகின்றது. இதனுடைய சரியான கருத்து என்பது யாதெனில் நடைமுறை வாழ்வியலுக்கு எது பொருத்தமாக அமைகின்றதோ அதனையே நாம் யதார்த்தம் என்கின்றோம். இந்தப் பொருத்தப்பாடு என்பது ஒரு சாதகமான வாழ்வியலை மக்களுக்கு வழிகாட்டு வதாகவும் உள்ளது. இவ்வாறே இந்தக் கருத்தினைக் கொண்டு செல்கின்றவர் யதார்த்தவாதி என அழைக்கப்படுகின்றார். இவ்வாறு கொண்டு செல்பவர் இச்சமுதாயத்தின் வழிகாட்டி என்று கொள்ளவும் இடமுண்டு. இதன்படி யதார்த்தவாதி நீதியை நிலை நாட்டுவதில் முன்னின்று உழைப்பவராகவும் உள்ளார். இதன்லே தான் நீதியை நிலைநாட்ட உழைக்கின்றபோது அதனால் பாதிக்கப்படுபவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளுகின்ற சமூகப் போக்குக் குறைவடைந்து செல்கின்றது. இதனையே "யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்ற முதுமொழி புலப்படுத்துகின்றது.

இந்த உலகத்தின் தோற்றத்திற்குப் பல்வேறு பட்ட காரண காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மத ரீதியில் கூட ஒவ்வொரு மதமும் பல்வேறுபட்ட காரணங்களினைக் கூறி இருக்கின்றன. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றா அல்லது ஏற்க முடியாத மாற்றும் முடிவுக்கு உட்பட்டதா என்ற வாதப் பிரதி வாதங்களினை மேற்கொள்வது என்பது யதார்த்த வாதத்தின் நோக்கம் அல்ல. இருப்பினும் உலகம் தோன்றிய காலம் முதலே யதார்த்த வாதமும் தோன்றிவிட்டது எனக்கொள்ள இடமுண்டு. இதன்படி யதார்த்த வாதம் என நடைமுறை உலகினை ஆராய வருகின்ற போது மக்களினம் தோன்றிய உடனேயே வழிபாடுகளும் தோன்றிவிட்டன என்பதை யதார்த்த வாதம் ஏற்றுக் கொள்கின்றது. எனினும் இவற்றினை சரியாக நிறுவ எந்தவொரு இலக்கிய ஆதாரத்தையோ யதார்த்த வாதிகளினால் குறிப்பிட முடியாது. காரணம் என்னவென்றால் காலச்சக்கரம் மிக நீளமாக நகர்ந்து இன்று அழிவடையும் நிலையை நோக்கி நகர்கின்றது.

இதற்கு உதாரணமாக இந்து மக்களின் வழிபாட்டு முறையை நோக்கி நகர்ந்தால் அவர்களுடைய வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமூக மாற்றம், உணவுப் பழக்க வழக்கம், வழிபாடு என்பன ஒவ்வொரு கால கட்டத்திலும் மாற்றங்களைச் சந்தித்து நின்றன. என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று இந்த வகையில் முதலில் வழிபாடு தோற்றம் பெற்று முதலில் மக்கள் வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தியது வேத காலத்தையே சாரும். வேத காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் முதல் சாதாரண மக்கள் வரை அங்கு வாழ்ந்தவர்கள் இயற்கையைப் பார்த்து மிகவும் பயந்தனர். இதனால் அவர்கள் பயத்தின் அடிப்படையிலேயே முதலில் வழிபாட்டை மேற்கொண்டனர். கடலைக்கண்டு பயந்து போன மக்கள் கடலை வழிபட்டனர். காற்றைக் கண்டு பயந்து போன மக்கள் காற்றை வழிபட்டனர். இவ்வாறே மழை, சூரியன், மரம் என்பவற்றையும் வழிபட்டனர். இது போலவே விலங்குகளான பாம்பு, சிங்கம், புலி என்பவற்றையும் பயத்தின் அடிப்படையிலே முதலிலே வழிபட்டனர் இதன் தொடர்ச்சியாகவே விலங்கு வழிபாடும் தோற்றம் பெற்றது. என்பதனை யதார்த்த வாதம் புலப்படுத்துகின்றது. இவ்வாறு பயத்தின் அடிப்படையிலேயே வழிபாடு தோற்றம் பெற்றதனை அடிப்படையாக வைத்தே "பயபக்தி" என்பது உருவானதாகவும் கொள்ள இடமுண்டு.

யதார்த்த வாதம் என்பது பொய்களை மறுக்கின்ற அல்லது சாத்தியமற்ற ஒன்றை ஏற்றுக்கொள்ளும் ஒன்றாக இல்லை. மாறாக நீதியை வழங்குவதாகவும் உண்மைகளினையும், நடைமுறை வாழ்க்கைக்கு பொருத்தப்பாடு உடைய கருத்துக் களினையுமே வலியுறுத்தும் பண்பைக் கொண்டுள்ளது. இவ்வாறு யதார்த்த வாதத்தை மக்கள் வாழ்க்கையில் நாம் காட்டுகின்ற போது சாதாரண மக்கள் வாழ்வியலில் ஆன்மீகத்தினை அடிப்படையாகக் கொண்டு தொன்றுதொட்டு வாழ்ந்த மக்கள் பேணி வந்தமை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். ஏன் என்றால் மக்கள் வாழ்வியலில் பழையவர்கள் சத்தியத்திற்கு பயந்த மக்களாக வாழ்ந்து வந்தனர். அதனால் "அறம்", "தர்மம்", "சத்தியம்" என்ற மூன்றும் அவர்களை எதிரான பாதைக்கு செல்வதனை தடை செய்வதோடு பழியான வாழ்வியலுக்கு செல்லாது உரிய நெறிமுறைகளையுடைய வாழ்க்கையை இம்மூன்றும் காட்டியும் உள்ளன. இந்த வகையிலே பிழையான செயல்கள் நடைபெறுகின்ற போது அந்தப் பிழைகளை நிரூபிக்கின்ற களமாக நீதிமன்றம் திகழவில்லை. நீதிபதி யாரும் நியமிக்கப்படவில்லை. சட்டத்தரணிகள் L.L.B படித்து உருவாக்கப்படவில்லை. மாறாக இந்த நியாயம் கூறும் சபையாக திகழ்ந்தது அன்றை மக்கள் வாழ்வியலில் ஆலயங்கள் தான்.

ஏதாவது ஒரு பிழை அல்லது பழியொன்று நடாத்தப்பட்டு ஒருவர் பாதிக்கப்படுகின்ற போது பாதிக்கப்பட்டவர் அந்தப் பாதிப்பில் இருந்து விடு பட்டுக் கொள்ளவும் பாதிப்பை ஏற்படுத்திய வரை அடையாளம் கண்டு பரிகாரம் காணுகின்ற அமைப்பாக அன்று

திகழ்ந்தமை ஆலயங்களே என்பதனை யதார்த்த வாதம் ஏற்றுக் கொள்கின்றது. அதாவது பிழை செய்தவர் கடவுளுக்கு முன்சென்று கற்பூரம் அணைத்து சத்தியம் செய்வதன் மூலம் பிழை செய்யாதவர் நிரபராதி ஆகின்றார். பிழை செய்தவர் இவ்வாறு கர்ப்பூரம் ஏந்தி சத்தியத்தினை செய்ய மறுத்து பிழையை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவர் குற்றவாளி அல்ல என்பதனையும் கடவுள் சாட்சிக்கு பயந்தவர் என்ற நிலையிலேயே உண்மையும் நீதியும் நிலைநாட்டப்படுகின்றது. இதனை யதார்த்த வாதம் என்ற நிலையில் இருந்து நோக்குகின்ற போது இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்கமைப்பான வாழ்க்கை முறையை அன்று வாழ்ந்த மக்கள் கொண்டிருந்தமையை யதார்த்தவாதிகள் ஆன்மீகவாதிகளாக இல்லாது இருந்தவர்கள் கூட அதாவது கடவுட் கொள்கையை எதிர்க்கின்றவர்கள் கூட வாழ்க்கை முறையில் மக்கள் வாழ வேண்டிய நல்ல நெறிமுறை காட்டப்பட்டு இருப்பதனை வரவேற்று இருக்கின்றனர் என்பது சாலச் சிறந்த உதாரணங்கள் மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிகாட்டப்பட்டது என்பது சரியான கருத்தாகும்.

ஆனால் இன்றைய நவீன உலகிலே மக்கள் வாழ்வியலில் யதார்த்த வாதம் என்பது மாறுபட்ட கண்ணோட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. அதாவது மக்கள் வாழ்வியலில், சமூக மாற்றத்தில் நீதிக் கட்டமைப்புக்கள், அரசுகளின் தோற்றம், கல்வியறிவு, பணப் பொருளாதாரம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. யதார்த்தவாதி ஒருவர் எதிர்வு கூறிய சரியான நெறிமுறையிலே செல்ல வேண்டிய ஒரு விடயம் மேற்கூறப்பட்ட காரணிகளில் ஏதாவது ஒன்றினுடைய செல்வாக்கு காரணமாக மாற்றமடைந்துள்ளது. இதற்கு உதாரணமாக ஒரு விடயத்தைக் கூறமுடியும். மக்கள் வாழ்க்கையிலே நடைமுறையில் உள்ள ஒரு பிரச்சினை நீதிமன்றத்திலே வழக்காக செல்கின்றது. இங்கு செல்கின்றபோது யதார்த்தவாதி ஒருவர் கூறிய எதிர்வு கூறலில் மாற்றமடைகின்றது. காரணம் சட்டத்தரணி ஒருவருடைய திறமையான வாதம், நீதியை மாற்றமடையச் செய்கின்றது. அல்லது போதிய பணப் பொருளாதாரம் அல்லாத வழக்கைத் தொடுத்தவர் மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட நீதி உயர்நீதி மன்றுக்கு அவரால் செல்ல முடியவில்லை, உரிய சட்டத்தரணியை ஒழுங்குபடுத்த முடியவில்லை என்ற காரணத்தினால் நீதி கைமாறிப் போகின்றது. இது நேர்மையான சத்தியத்தின் பால் சமுதாயம் செல்வதனை நிறுத்தி விடுகின்றது. இதனுடைய பிற்பட்ட விளைவாகவே பொய், பித்தலாட்டம், களவு, கொலை, விபச்சாரம் போன்ற தீமைகள் ஏற்பட காரணமாக அமைகின்றது. எனவே தான் மனித சமுதாயத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதியான வாழ்வியலை யதார்த்த வாதம் கூறி நிற்கின்றது.

யதார்த்த வாதம் என இங்கு குறிப்பிடப்பட்ட கட்டுரையானது அளவையியல், மெய்யியல் என்பவற்றில் வருகின்ற தர்க்க ரீதியான தொடர்புகளை ஆராய்கின்ற யதார்த்த வாதம் அல்ல சிலவேளை அவற்றில் குறிப்பிடுகின்ற கருத்துக்கள் ஒத்துப் போகும் தன்மை கொண்டதாக அமையலாம். இங்கு வலியுறுத்திய யதார்த்த வாதப் பண்பு என்பது நேர் முறையான மக்கள் வாழ்க்கையில் நடைமுறைச் சாத்தியமுடைய ஏற்றுக் கொள்ளும் தன்மையுடைய நீதியான சத்தியத்தை கூறுகின்ற ஒன்றாக உள்ளது என்பதே கட்டுரையின் கருத்து. இங்கு கூறப்பட்டதன் மூலம் மக்கள் அறம் சத்தியம் என்பவற்றின் பால் வாழ்க்கையை கொண்டு செல்பவர்களைப் பாராட்டவும் அவ்வாறு வாழாதவர்களை வாழத் தூண்டுவதும் இந்த எழுத்தாளரின் இலக்காகும்.



**சி.சிறிதரன்**
சமுர்த்தி பதில் முகாமையாளர்
B.A (dip-In-Psychology)

# படமும் பாடலும்
## இளநீர் நல்கும் எழில் மரமே!



01. இளநீர் நல்கும் எழில் மரமே!
எழிலார் தென்னை எனும் மரமே!
வளவு முழுதும் நிழல் பரப்பி
வானை நோக்கும் பயன் மரமே!

02. தாளாலுண்ட நீரதனைத்
தலையால் இளநீர் எனநல்கி
வாழச் செய்வாய் எனப்புலவோர்
வாழ்த்துச் சொன்னார் முன்னாளில்!

03. வீடு வேய ஓலைகளும்
விறகே ஆகப்பாளைகளும்
கூடி மகிழ்ந்து கறிசமைக்கக்
குளிர் சேர்காயுந் தந்திடுவாய்!

04. கடலின் ஓரம் நின்றிசைப்பாய்
காணும் மங்கல நிகழ்வினிலே
அட்டா நீ தான் இல்லாமல்
ஆமோ கருமம் சொல்வாயா?

05. தேங்காய் கொண்டே மங்கலமாம்
நிறை வாம் குடங்கள் வைத்திடுவார்!
பாங்கார் வருடப்பிறப்பினிலே
அடிப்பார் மகிழ்வார் போர்த்தேங்காய்!


(புலவர். ம. பார்வதிநாதசிவம்)

# வாசிப்பும் அறிவியல் மேதைகளும்



இன்றைய நவீன உலகில் எங்கு பார்த்தாலும் அதர்மம் தலைதூக்கி நிற்கின்றது. நல்லதொரு தலைவர்களையே இன்றைய எமது சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இளமைப் பருவத்தில் எதிர்காலம் பற்றிய கனவுகளை மாணவர் மனதில் விதைப்பதன் மூலமே பெருந் தலைவர்களையும், சாதனையாளர்களையும், வெற்றியாளர்களையும் இம்மண்ணில் உருவாக்க முடியும். அதற்கு வாசிப்புப் பழக்கமே மிகவும் முக்கிய மாகக் கைகொடுக்கும் இன்று நாம் பல சாதனையாளர்கள் பற்றியும், தத்துவ ஞானிகள் வெற்றியாளர்கள் பற்றியும் பல வகையிலும் கேட்டும் நூல்களின் மூலம் வாசித்தும் அறிந்து கொண்டுள்ளோம்.

இவர்களது வாழ்க்கை வரலாற்றை நாம் அலசி ஆராய்ந்து பார்த்தோமானால் எமக்கு ஒரு தெளிவான உண்மை புலப்படும். அது இன்று சாதனையாளராக



வானுயர்ந்து நிற்கும் ஒவ்வொருவரையும் வானுயர வைத்தது வாசிப்புப் பழக்கமே ஆகும் என்பதில் ஐயமில்லை. இப்படி எல்லா அறிவியல் மேதைகளையும் இங்கே குறிப்பிட முடியாது. எனினும் வாசிப்புக்கும் அறிவியல் மேதைகளுக்கும் இடையேயான இடைத் தொடர்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது மிகவும் அவசியமாகின்றது.

இப்படியே நூல்களோடு பிறந்து நூல்களோடு வளர்ந்த மிக முக்கியமான தத்துவஞானி ரூசோ. அறியாமை என்னும் புதைமணலில் மூழ்கியிருந்த மக்களை வெளிக் கொணர வைத்தவர். இவரது தந்தை கடிகாரம் செய்யும் தொழில் செய்தாலும் கல்வியறிவுமிக்கவர். ஓய்வு நேரங்களில் தலைசிறந்த நூல்களைப் படிப்பார். ரூசோவின் தாய் நற்குணங்கள் நிரம்பப்பெற்ற புண்ணியவதி. திருமணப் பரிசாக விலையுயர்ந்த புத்தகங்களை வீட்டுக்குக் கொண்டு வந்தவர். இருவரும் பொருட் செல்வத்தைவிட நூல்களை மேலானதொரு செல்வமாக கருதியவர்கள்.

ரூசோ முறையாகப் பள்ளி சென்று பயிலவில்லை. இவருக்கு ஏழுவயது நிரம்பும் போதே தந்தை நல்ல நூல்களை படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். இதனால் இளம் வயதிலேயே நூல்களை விரும்பிப் படிக்கும் ஆர்வம் ரூசோவிற்கு இருந்தது. தந்தையும் மகனும் நேரம் போவது தெரியாமல் வாசித்துக் கொண்டே இருப்பார்கள். கிரேக்க நாட்டுக் காவியங்களைப் படித்த ரூசோவின் மனதில் தலை சிறந்த எழுத்தாளராக வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கடைசியில் அது நிஜமாக நீரூற்றி வளர்ந்துவிட்டது வாசிப்புப் பழக்கம்தான். எமது கனவுகளை வாசிப்புப் பழக்கம் நிஜமாக்கும் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

அமெரிக்க சிந்தனையாளர் ஜான்டுயி அறிஞர்களின் வரலாற்றைப் படித்து அதுபோல் தானும் வரவேண்டும் என்ற இலட்சியத்தை வாசிப்பின் மூலம் அடைந்தார். தமது பக்கம் மக்களை ஈர்த்த அமெரிக்க ஜனாதிபதிகளான ஆபிரகாம்லிங்கன், கென்னடி ஆகியோர் இளமைக் காலத்தில் அறிவியல் மேதைகளின் வரலாற்றைப் படித்து உயர்ந்தவர்கள். அமெரிக்காவில் பிறந்து அகிலப் புகழ்பெற்ற விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் இளம் வயது முதலே வாசிப்பில் ஆர்வம் கொண்டு கிடைத்த காசையெல்லாம் நூல்கள் வாங்கி வாசிப்பதிலேயே செலவிட்டார். பின்னாளில் அவர் அறிவியல் மேதையாக வரவில்லையா? அதற்குக் காரணம் வாசிப்புப் பழக்கம் தான். படிக்கக்கூட வசதியில்லாமல் புத்தகம் கட்டும் பணியில் சேர்ந்து அங்கு வரும் புத்தகங்களை ஆர்வத்துடன் வாசித்து இவ்வுலகத்திலேயே உயர்ந்தவர் தான் டைனமோ என்ற எளிய சாதனத்தை கண்டு பிடித்த மைக்கல் பரடே. வாசிப்புப் பழக்கம் என்ற ஒன்றிருந்தால் மட்டுமே இவ்வுலகை ஆளலாம் என்பதற்கு இவர்கள் தவிர இன்னும் பல மேதைகள் உதாரணம்.

ஆங்கில இலக்கிய மேதை பேர்னாட்ஷா ஏழுவயதில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள், பைபிள், அரபுக் கதைகள் போன்றவற்றைப் படித்தார். நீல் ஆம்ஸ் ரோங் சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்தார். இவர் முதலாம் வகுப்புப் படிக்கும் போதே தொண்ணூறு புத்தகங்களை படித்து விட்டாராம். இதனால் இவருக்கு விண்ணில் பறக்க வேண்டும் என்ற ஆசை சிறுவயதிலேயே ஏற்பட்டுவிட்டது எனக் கூறப்பட்டுள்ளது. ஈழத்தில் புகழ் பூத்த எழுத்தாளர் கே.டானியல் இவர் ஐந்தாம் தரம் மட்டுமே கல்வி கற்றவர். எனினும் வாசிப்பினால் தன்னை எழுத்தாளராக வளம்படுத்திக் கொண்டார். விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் வீட்டில் இரண்டு நூலகங் களே இருந்தனவாம். அங்கு அவர்கள் சுதந்திரமாக வாசித்து அறிவு வளர்க்க அவர்களது தந்தையார் வழி காட்டினார்.

இப்படியாக இவ்வுலகில் அத்தனை அறிவியல் மேதைகளும் வாசிப்பினாலேயே உயர்ந்தார்கள். வாசிப்பு எமக்குத் தரும் நன்மைகளுக்கு அளவேயில்லை. வாசிப்பு மாணவ சமுதாயத்திற்கு மட்டுமின்றி எல்லா வயதினருக்கும் ஓர் அரிய வழிகாட்டி ஆகும். அனைவரும் வாசிப்பினால் உயர்ந்த சாதனையாளர்களின் சரித்திரங்களையும் நற்கருத்துக்களையும் தேடி வாசிக்க வேண்டும். அதுவே எதிர்காலக் கனவுகளை உருவாக்கு வதோடு அவற்றை நனவாக்க வழி வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

**சுயோதமி லோகநாதன்**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**



# விவசாயமும் நாமும்

பூமதி யோகநாதன்
விவசாயப் போதனாசிரியர்

கிராமப்புற வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக் கூடிய பயிர் வகைகள் மற்றும் வீட்டுத்தோட்டம் ஒன்றில் காணப்படும் கூறுகள் (பிரிவுகள்) பற்றியும் சென்ற தமிழருவி அருவி - 4இல் பார்த்தோம்.

இந்த இதழில் பயிர் வகை ஒவ் வொன்றினதும் விருப்பு, வெறுப்புக்களுக்கேற்ப பயிர்களின் விருப்பு களுக்கு ஏற்ற வகைகள் இடங்களைத் தெரிவு செய்து பொருத்தமான இடங்களில் பொருத்தமான பயிர்களை நாட்டுவதன் மூலம் பயிர்கள் சிறப்பாக வளர்ந்து கூடிய விளைவைப் பெறக் கூடியதாக இருக்கும்.

எனவே பயிர்களுக்கான விருப்பு வெறுப்புக்கள் பற்றி சற்று விரிவாக பார்ப்போம்.

பயிர்களின் சிறப்பான வளர்ச்சிக்கு தேவையானவை:

1) வளமான மண் (போசாக்கான மண்)
2) நீர்
3) சூரிய ஒளி
4) காலநிலை

பயிர்கள் (தாவரங்கள்) தமது சிறப்பான வளர்ச்சிக்கு தாம் வளரும் மண்ணில் உள்ள போசாக்குகளை மழை அல்லது நீர்ப்பாசனம் மூலம் பெறப்படும் நீரால் போசாக்குகள் கரைக்கப்படும் போது பயிர்கள் தமது வேர் பகுதியில் உள்ள உறிஞ்சும் வேர்ப் பகுதிகள் (வேர் மயிர்கள்) மூலம் மண்ணில் காணப்படும் மளிர்த்துளை குழாய்களில் காணப்படும் நீரில் கரைந்துள்ள போசாக்குகளை (பயிர் வளர்ச்சிக்கு 17 வகையான மூலகங்கள் போசாக்குப் பொருளாக தேவைப்படுகின்றன) நீருடன் சேர்த்து உறிஞ்சி எடுத்து அவற்றைப் பச்சை நிறமான இலைப் பகுதிகளுக்கு கடத்தி சூரியனில் இருந்து கிடைக்கும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி இலைகளில் காணப்படும் பச்சைய மணிகளில் தமக்கு தேவையான உணவுகளை தாமே (பயிர்களே) உற்பத்தி செய்து கொள்கின்றன. உலகில் வாழும் எந்த உயிரினங்களுக்கும் இந்தக் கொடை இறைவனால் வழங்கப்படவில்லை. தாவரங்களுக்கு மட்டுமே இந்த சக்தி இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. தாவரங்கள் தற்போசணையுள்ளவை என்று விஞ்ஞான ரீதியாக அழைக்கப்படுகின்றன. ஏனைய உயிரினங்கள் யாவும் தாவரங்களால் உலகத்தில் தயாரிக்கப்பட்ட உணவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன் படுத்துவதால் பிற போசனையுள்ளவை என அழைக்கப்படுகின்றன.

இந்நிலையில் தாவரங்கள் இடம்விட்டு இடம் பெயர்வதில்லை. நடுகை செய்யப்பட்ட நிலத்தில் இருந்தே தமக்கு தேவையான நீரையும், போசாக்கையும் பெற்று சூரிய ஒளிமூலம் தமக்கு தேவையான உணவை உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதால் வீட்டுத்தோட்ட செய்கையில் சூரிய ஒளியின் முக்கியத்துவம் நீரின் அவசியம் பயிர் வளரும் இடத்தின் தெரிவு என்பவற்றின் முக்கியத்துவத்தை அறியக்கூடியதாக இருக்கிறது.

எனவே வெற்றிகரமான வீட்டுத்தோட்டத்திற்கு சூரியஒளி, நீர், இடத்தெரிவு (மண்) என்பன பயிர் வகைகளின் தேவையை சிறப்பான வகையில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அமைந்தால் பயிர்களில் இடையூறின்றி சிறப்பாக வளர்ந்து சிறப்பான அறுவடையைத் தரும்.

## நேற்று இன்று நாளை

சூரியஒளித் தேவையின் அடிப்படையில் பயிர்களை வகைப்படுத்தல்

1) ஒளித்தேவை கூடிய பயிர்கள்
2) நடுத்தர ஒளித்தேவையுற்ற பயிர்கள்
3) குறைவான ஒளித் தேவையுள்ள பயிர்கள்

**கூடிய ஒளித்தேவையுற்ற பயிர் வகைகள்**

இவை நேரடியாக அதிகளவு சூரிய ஒளியை விரும்பிப் பெற்று உயர் விளைவு தருபவை. இதற்கு உதாரணமாக உலர்வலய பிரதேசத்தில் வளரும் பயிர் வகைகளைக் குறிப்பிடலாம்.

- உள்நாட்டு மரக்கறி வகைகளான கத்தரி, வெண்டி, பூசனி, பாகல், புடோல், பயிற்றை, கறிமுருங்கை, கறிவாழை
- பழவகைகளில், மாதுளை, கொய்யா, மா, தேசி, தோடை, பப்பாசி, வாழை, பலா
- இலை மரக்கறிகளில், கறிமுருங்கை, முல்லை, முசுட்டை, கொவ்வை, தூதுவளை, தோட்டக் கீரை

இத்தகைய நல்ல வளமான மண்ணில் நேரடியாக சூரியஒளி கிடைக்கக்கூடிய வகையில் வீட்டுத்தோட்டத்தைத் திட்டமிடும்போது இவற்றிற்கான தகுந்த பொருத்தமான இடத்தை நிழல் படாதவாறு ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

**நடுத்தர சூரியஒளி விரும்பும் பயிர்கள்**

இவ்வகையான பயிர்களுக்கு பகுதியான சூரிய ஒளி கிடைத்தால் மட்டும் போதுமானது நடுத்தர சூரிய ஒளி மூலம் சிறப்பாக வளர்ந்து கூடிய விளைவைத் தரவல்லன. இவற்றிற்கு உதாரணமாக மலை நாட்டு வகை மரக்கறிப் பயிர்களை முக்கியமாகக் குறிப்பிடலாம் பீற்றூட், கரட், லீக்ஸ், தக்காளி, முள்ளங்கி, கோவா, பூக்கோவா



எனவே இவ்வகையான நடுத்தர ஒளித்தேவை உள்ள பயிர்களுக்கு வீட்டுத்தோட்டத்தில் பகுதியான சூரியஒளி கிடைக்கும் இடங்களை தெரிவு செய்தும் ஓரளவு ஈரலிப்பு காணப்படும் நீர் நிலைகளுக்கு (கிணறு) சற்று அப்பால் இடத்தை தெரிவு செய்யலாம்.

வருடா வருடம் கத்தரிப்பு செய்து பராமரிக்கப் படும் நிரந்தரப் பல்லாண்டு மரங்களுக்கு கீழும் இவற்றை நிரந்தரப் பயிர்களுக்கு இடையூறு, போசாக்கு போட்டி இல்லாதவாறு இடம் ஒதுக்கிக் கொள்ளலாம்.

**குறைவான ஒளித்தேவையற்ற பயிர் வகைகள்**

இப்பயிர்களுக்கு குறைவான சூரிய ஒளியுடன் சிறப்பாக வளர்ந்து கூடிய பயன்தரவல்லன. அத்துடன் கூடிய ஈரத்தையும் விரும்புவன எனவே கிணற்றிற்கு மிகவும் கிட்ட வாக மரங்களுக்க கீழாக இவற்றை பயிரிடலாம் உதாரணமாக வல்லாரை, கோப்பி, மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்றவற்றை குறிப்பிடலாம் சூரிய ஒளி மிகவும் அவசியம் ஆனால் மிகவும் குறைவான சூரியஒளி போதுமானது.

(தொடரும்)

# தற்கால சமூக சீரழிவுகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளும்

- முகவுரை – சமூகம், சமூகச் சீரழிவுகள்
- சமூகச் சீரழிவுகள் எவை?
- சமூகச் சீரழிவுகள் ஏற்படுவதற்கான காரணிகள்
- சமூகச் சீரழிவுகளினால் ஏற்படும் விளைவுகள்
- சமூகச் சீரழிவுகளைத் தீர்ப்பதற்கான வழிகள்
- முடிவுரை

பல குடும்பங்களின் ஒன்றிணைந்த சேர்க்கையே சமூகம் எனப்படும். ஒரு குடும்பத்தில் இடம்பெறும் நன்மைகளோ, தீமைகளோ அச் சமூகத்தைப் பிரதி பலிக்கும். அதே போல் சமூகத்தில் இடம்பெறும் நல்ல, தீய காரியங்கள் அச்சமூகத்திலுள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்தி யிருக்கும். ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலும் இடம்பெறும் சீரழிவுகளே சமூகச் சீரழிவுகள் என்ற சொல்லுக்குள் உள்ளடக்கப்படும். தற்காலத்திலே சமூகச் சீரழிவுகள் அதிகரித்து வருகின்றன.

தற்கால சமூகச் சீரழிவுகள் குறித்து சிறப்பாக நோக்குவோம். தகாத பாலியல் வல்லுறவு, கொலை, களவு, கற்பழிப்பு, பணத்திற்காக ஆட்கடத்தலில் ஈடுபடல், போதைப் பொருட்பாவனை, நாகரிகம் என்ற பிறநாட்டுக் கலா சாரங்களில் ஏற்பட்டிருக்கம் மோகம், நவீன தொடர்பாடற் சாதனங்களினால் ஏற்படும் சீரழிவுகள் போன்ற அனைத்தும் தற்காலத்தில் அதி கரித்து வரும் சமூகச் சீரழி வுகள் ஆகும். இச்சமூகச் சீரழிவுகளில் பாரிய தாக் கங்களை ஏற் படுத்தவல்ல



சில சீரழிவுகள் பற்றி நோக்குவோம்.

போதைப் பொருட் பாவனையே மிகப் பிரதானமாக நோக்க வேண்டிய சமூகச் சீரழிவாகக் காணப்படுகிறது. சிகரெட், மதுபானம், புகையிலைச் சுருட்டு, கஞ்சா, அபின் போன்ற அனைத்தும் போதைப் பொருட்கள் ஆகும். இப்போதைப் பொருட்கள் பாரிய சமூகச் சீரழிவினை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றன. இவற்றினை அநேகர் விரும்பி உண்டு, புகைத்துச் சீரழிவுக்கு உள்ளா கின்றனர். இப்பொருட்கள் மயக்கத்தை, வெறியை உண்டாக்க வல்லன. இப்பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கினால் பின்னர் இவற்றைத் தவிர்ப்பது மிகவும் கடினமானதாகும். இப்போதைப் பொருட்பாவனை கொலை, களவு, கற்பழிப்பு போன்ற பல தீய செயல்களைச் செய்யத் தூண்டுகின்றது.


தற்காலத்தில் பெண்களோ அல்லது ஆண்களோ நாகரிகம் எனும் போர்வையில் பிறநாட்டு கலாசாரங்களில் மோகித்து காணப்படுகின்றனர். உடை, கலாசாரங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக முன்னைய காலங்களில் பெண்கள் ஆலயங்களுக்கோ அல்லது வேறு நிறுவனங்களுக்கோ செல்வதானாலும் தலைவாரிப் பூச்சூடிச் சேலை அணிந்து செல்வார்கள். ஆனால் தற்காலத்திலோ நாகரிகம் எனக்கூறி "ஜீன்ஸ், ரீசேட்" என்ற உடை அணிந்து தலைவிரி கோலமாகவே பெரும்பாலானவர்கள் சமூகத்தின் மத்தியில் நடமாடு கின்றனர். இதுவும் தற்காலத்தில் அதிகரித்து வரும் சமூகச் சீரழிவுகளில் ஒன்றாகும்.

நவீன தகவல் தொடர்பாடல் சாதனங்கள் சமூகச் சீரழிவுகளில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி நோக்கும் போது அதில் தொலைபேசியே அதிக பங்கு வகிக்கின்றது. தொலைபேசியின் மூலம் தேவையற்ற கருத்துக்களைப் பரிமாறல், பெண்களை மிரட்டுதல் போன்றவை சீரழிவுகள்

ஆகும் தொலைக்காட்சியில் ஆபாசத் திரைப்படங்களைப் பார்த்தல், தொடர் நாடகங்களைப் பார்வையிடல் போன்றவையும் சீரழிவுகளை ஏற்படுத்தவல்லன. இணையத்தின் மூலம் ஆபாசப் படங்களைப் பார்வையிடல் "பேஸ் புக்" (Face book) போன்ற சமூக இணையத்தளங்களை பயன்படுத்தி சீரழிவுகளில் ஈடுபடுவது நவீன சாதனங்களினால் ஏற்படும் சீரழிவுகளின் பாற்படும். இச்சாதனங்கள் மூலம் விளையும் சீர்கேடுகள் பாலியல் வல்லுறவு, கற்பழிப்பு போன்ற பல தீய செயல்களிற்கு காரணமாகின்றன.

வைத்தியம், ஆன்மீகம், கல்வி, பாதுகாப்பு போன்ற புனிதமான தொழில்களில் ஈடுபடும் ஒரு சிலரின் தகாத காரியங்களினால் அப்புனித தொழில்களுக்கே அவப்பெயர் உண்டாகின்றது. இத்தொழில்களில் ஈடுபடும் சில மனிதர்கள் தமது சுயகட்டுப்பாடின்மையால் பாலியல் வல்லுறவு, பெண்களிடம் வன்முறையில் ஈடுபடல் போன்ற சமூகச் சீரழிவுகளைச் செய்கின்றனர்.

சமூக சீரழிவிற்கான காரணிகள் அனேகம் உள்ளன. அவை பற்றி நோக்குவோம். பணம் கருதி அநேகர் போதைப் பொருள் விற்னையினை நடத்துகின்றனர். இதனால் பல சமூகச் சீரழிவுகள் ஏற்படுகின்றன. தற்காலத்தில் சில சினிமாத் திரைப்படங்கள் சமூகச் சீரழிவுகளை நோக்கி மக்களைச் செல்லத் தூண்டுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுப்பதனாலேயும் சமூகச் சீரழிவுகள் உண்டாகின்றன. அப்பிள்ளைகள் பாலியல் உறவு, போதைப் பொருட் பாவனை போன்ற சீர்கேடுகளில் ஈடுபடுகின்றனர். பணத்தின் மீதுள்ள ஆசையினால் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை போன்றவற்றில் சிலர் ஈடுபடுவதனால் சமூகம் சீரழிவுக்குள்ளாகின்றது. யுத்தத்தின் பயனாக அனேக விதவைகளும், சிறுவர்களும் அநாதரவாக்கப்பட்டனர். இவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு சீரழிவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சுற்றுலா விற்காக வரும் பயணிகள் இவர்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி சீரழிவுகளை உண்டாக்குகின்றனர். சமூகத்தில் பயமில்லாமல் தட்டிக் கேட்க ஆட்கள் இல்லாமல் புனிதமான தொழில்களிலே இருந்து கொண்டு பல சீர்கேடுகளை பலர் மேற்கொள்கின்றனர். இவ்வாறான பல காரணிகளினாலே தற் காலத்தில் சமூகச் சீரழிவுகள் ஏற்படுகின்றன.



தற்கால சமூகச் சீரழிவுகளினால் ஏற்படும் விளைவுகள் பற்றி சற்றுச் சிந்தித்து பார்த்தல் அவசியமாகும். சமூகச் சீரழிவுகளினால் பல்வேறுபட்ட உடல் ரீதியான நோய்களும், உள ரீதியான நோய்களும் ஏற்படுகின்றன. உதாரணமாக எயிட்ஸ், மன உளைச்சல் போன்ற நோய்களைக் கூறலாம். சீரழிவுகளினால் எதிர்காலத்தில் ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகலாம். போதைப்பொருட் பாவனையினால் அதாவது மதுபானம் அருந்துவதனால் குடும்பத்திலே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதனையே "குடி குடியைக் கெடுக்கும்" எனும் பழமொழி கூறுகிறது. தகாத பாலியல் வல்லுறவுகளினால் ஆதரவற்ற குழந்தைகள் தெருக்களிலும், கிணறுகளிலும் வீசப்படுகின்றனர். புனிதமான தொழில்களில் ஈடுபட்டவாறு சீரழிவுகளினை ஒரு சிலர் மேற்கொள்வதனால் அத்தொழில்களுக்கான புனிதத் தன்மை கெட்டுப் போகின்றது.

மேலும் மேலும் சமூகச் சீரழிவுகளை தொடரவிடாமல் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் கண்டு சிந்தித்து உணரல் அவசியமாகிறது. சமூகச் சீரழிவுகளைத் தீர்க்கும் வழிகளாக சமூக சீரழிவுகளைத் தடுத்தல் பற்றியதான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மக்கள் மத்தியில் நடத்துதல் வேண்டும். விழிப்புணர்வு தொடர்பான நாடகங்கள், சஞ்சிகைகள், நூல்கள் போன்றவை வெளியிடப்படல் வேண்டும். ஊடகங்கள் மூலமாக அதாவது பத்திரிகை, தொலைக் காட்சி, வானொலி போன்றவற்றில் விளம்பரங்கள், நிகழ்ச்சிகள் ஊடாக சமூகச் சீரழிவுகளை தீர்த்தல் பற்றி அறிவூட்டல் வேண்டும். இவ் விழிப்புணர்வுகள் அனைத்தும் தொடர்ச்சியாக இடம்பெறல் வேண்டும். போதைப்பொருள். சினிமா போன்றவற்றினால் எமக்குக் கிடைக்கும் தீய முறைகளில் இருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரத்தைக் கொடுக்காமல் தவிர்த்தல் வேண்டும். சிறுவர் இல்லங்கள், அநாதை இல்லங்கள் போன்றவற்றை அமைத்து சிறுவர்களை அதற்குள் உள்வாங்கி கற்றலில் ஈடுபடச்செய்தல் வேண்டும். சுற்றுலா விடுதிகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்த்துக் கற்றலில் ஈடுபட ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும்.

சமூக சீரழிவுகளைத் தடுத்தல் பற்றியதான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மக்கள் மத்தியில் நடத்துதல் வேண்டும். விழிப்புணர்வு தொடர்பான நாடகங்கள், சஞ்சிகைகள், நூல்கள் போன்றவை வெளியிடப்படல் வேண்டும். ஊடகங்கள் மூலமாக அதாவது பத்திரிகை, தொலைக் காட்சி, வானொலி போன்றவற்றில் விளம்பரங்கள், நிகழ்ச்சிகள் ஊடாக சமூகச் சீரழிவுகளை தீர்த்தல் பற்றி அறிவூட்டல் வேண்டும். இவ் விழிப்புணர்வுகள் அனைத்தும் தொடர்ச்சியாக இடம் பெறல் வேண்டும்.

விதவைப் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி ஒரு வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களை ஆன்மீக வழியில் ஈடுபடச் செய்தல் வேண்டும். அதாவது யோகாசனப் பயிற்சிகள், தியானம், உடற் பயிற்சிகள் போன்றவற்றில் ஈடுபடச் செய்தல் வேண்டும். புனிதத் தன்மையான தொழில்களில் ஈடுபட்டுத் தவறுகள் செய்பவர்கள், அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுக் கொடுத்து மற்றவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்கு வழிசெய்ய வேண்டும். இவ்வாறான பல தீர்வுகளைக் கைக்கொண்டு சமூகச்சீரழிவுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம் என உறுதியாகக் கூறலாம்.

எனவே நாமும் வாழ்வில் சமூகச் சீரழிவுகளில் ஈடுபடாமல் நம்மை நாமே சீர்படுத்தி நல்லவர்களாக வாழ்ந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமைவோம். இவ்வாறாக ஒவ்வொருவரும் சமூகச் சீரழிவுகளில் ஈடுபடாமல் இருந்தால் எதிர்காலத்தில் சமூகச் சீரழிவுகள் ஏற்படாது என்பதில் ஐயமில்லை.

ப. சிவப்பிரியா, **A/L (Arts 2013)**
யா/ விக்டோறியாக் கல்லூரி

(தமிழருவி நடத்திய மாதாந்தக் கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கட்டுரை)



# மாதம் ஓர் இளம் எழுத்தாளர் அறிமுகம்

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை மாணவப் பருவத்திலேயே இனங்கண்டு ஊக்குவிக்கத் தமிழருவி விரும்புகின்றது. இவ்வகையில் சிறுகதை அல்லது கவிதை எழுதும் மாணவர்களுள் திறமையான ஒருவரது முழுப்பெயர், பிறந்த திகதி, இடம், பெற்ற விருதுகள், எழுதிய ஆக்கங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் புகைப்படம் ஒன்றையும், அவரது ஆக்கங்களுட் சிறந்ததெனக் கருதும் ஆக்கத்தையும் அனுப்பிவைத்தால் பிரசுரிப்பதற்குத் தமிழருவி தயாராக உள்ளது. ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**த.கணேசமூர்த்தி, தமிழருவி,**
**இயக்குநர், உதவி ஆசிரியர்,**
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

## எழுத்தாளர் - 5

செல்வன் விஜயகுமார் சுலக்சன்



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரக் கலைப்பிரிவிற் கல்வி கற்பவர் விஜயகுமார் சுலக்சன். 08.03.1992இல் பிறந்த இவர் கந்தரோடையில் வசித்து வருகிறார். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், பட்டிமன்றம் எனப் பலதுறைகளிலே தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருபவர். போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான கவிதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றவர். அண்மையில் உடுவில் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட முதியோர் தினக் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றவர். இவரது கவிதைகள் தமிழருவியில் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். இங்கு இவரது சிறுகதை ஒன்று பிரசுரமாகிறது.

# தீக்கடல் நடுவே.....

அந்திப்பொழுது, அழகிய நிலவும் அதற்கு அழகு ஊட்டும் நட்சத்திரங்களும் கார்முகில் படிந்து சற்றுத் தெளிவற்று வானில் தோன்றின. வானிலே தெரியும் காட்சிக்கு ஒப்பான மனதை உடைய வட்ட முகமும் வடிவான தோற்றமும் கொண்ட சிறுவன் ஒருவன் வானத்தைப் பார்த்து இரசிப்பது போல யோசித்தபடி படுத்திருந்தான். அவனது சிந்தனை சில மாதங்கள் முன் நோக்கியது.

"அம்மா... அம்மா" பயத்துடன் கூடிய தயக்கத்துடன் கூப்பிட்டான் சுரேஸ். அருகில் அறைக்குள் இருந்த பாத்திமா அமைதி காத்தாள். மறுபடியும்.

"அம்மா.... அம்மா.... அம்மா' என கொஞ்சம் உரிமையுடன் கூப்பிட்டான் சுரேஸ்.

"என்ன? உனக்கு இப்ப என்ன வேணும்?" என்றவாறு வெளியே வந்தாள் பாத்திமா.

"அம்மா இண்டைக்குப் பள்ளிக்கூடத்தில சோதினை இருக்கு. என்ன சீக்கிரம் வெளிக்கிடுத்தி விடுங்கோ" எனத் தயவுடன் கேட்டான்.

"உனக்கு உது அவசரம் இல்ல. சாறி அயன் பண்ணிட்டு வரும்வரை நில்" என்று கூறிக் கொண்டே உள்ளே சென்றாள் பாத்திமா.

கண்கள் கலங்கிக் கண்ணீர்த் துளி தரையில் விழுந்தது. அதைப் பெரிதும் பொருட்படுத்தாமல் தானே தயாராகிக் கொண்டு, என்ர அம்மா இருந்திருந்தால் இப்படி என்னைக் கஷ்டப்பட விட்டிருப்பாரா? என்று மனதிற்குள் எண்ணியபடி சாப்பாட்டையும் கவனிக்காமல் புறப்பட்டுச் சென்றான்.

பாவம் சுரேஸ் அவன் 8 வயதை எட்டும் ஒரு சிறுவன். அவன் தாய் திடீரென இறந்துவிட்டாள் அவள் இறக்கும் போது சுரேசிற்கு 8 வயது தான் ஆகியது. அவன் தன் தாயை நினைத்து இரவு பகலின்றித் தனியாக இருந்து அழுவதுமுண்டு ஆனால் ஆறுதல் சொல்லவோ யாரும் இல்லை.

அன்று மாலை நேரம் 5 மணியை நெருங்கியது. 3 நாட்களுக்கு முதல் வேலைக்குச் சென்ற ராசா வீடு திரும்பினார்.

"பாத்திமா, அம்மா பாத்திமா" என அழைத்த வாறே அவர் உள்ளே வந்தார்.

"வாங்க இண்டைக்குத்தான் நேரம் கிடைச்சுதோ வீட்ட வர்றத்துக்கு?" என அன்பு கலந்த கோபத்துடன் கேட்டாள்.

"பாத்திமா சுரேஸ் எங்க?"

"அவன் உங்கினேக்க தான் நிப்பான் பாரும்" என அலட்சியமாக பதில் கூறினாள்.

"சுரேஸ்.... சுரேஸ்" என்றபடி திரும்பிய தந்தை படித்தபடி இருந்தவனைக் கண்டுவிட்டு மனைவிய ருகினில் சென்றார்.

சில நிமிடங்களில்....

"அப்பா... எனக்குப் பரீட்சை நடக்குது. பாடம் கொஞ்சம் சொல்லித்தாங்கோவன்" என்றான் சுரேஸ்

சீறியபடி பெருமூச்சு விட்ட பாத்திமா "உதோட பெரிய தொல்லை. எங்காவது கொண்டேத் தள்ளிவிட வேணும்" என்றபடி மறுபடியும் சமையலைக் கவனித்தாள்.

"சரி விடு பாத்திமா சின்னப் பிள்ளை தானே"

"ம் ம்... உது சின்னப் பிள்ளை. மாடு" எனக் கோபத்துடன் கூறினாள்.

"பிள்ளையத் திட்டாத... நீ வாப்பா நான் உனக்குப் பாடம் சொல்லித்தாறன்" என்று தந்தை அவனைக் கூட்டிக் கொண்டு சென்றார். செக்கன், நிமிடம், மணித்தியாலம், நாள், கிழமை, மாதம் என ஒரு வருடம் ஆகியது.பாத்திமாக்குக் குழந்தை பிறந்தது 2 மாதம் நிறைந்தது.

**அந்திப்பொழுது, அழகிய நிலவும் அதற்கு அழகு ஊட்டும் நட்சத்திரங்களும் கார்முகில் படிந்து சற்றுத் தெளிவற்று வானில் தோன்றின. வானிலே தெரியும் காட்சிக்கு ஒப்பான மனதை உடைய வட்ட முகமும் வடிவான தோற்றமும் கொண்ட சிறுவன் ஒருவன் வானத்தைப் பார்த்து இரசிப்பது போல யோசித்தபடி படுத்திருந்தான்.**

"என்ட உச்சுக்குட்டி சாப்பிடடா. செல்லம் சாப்பிடடா"

"ச்சா... சாப்பிடுறானே இல்ல. சுரேஸ் இஞ்ச வாப்பா"

"இந்தாப்பா பிஸ்கட் சாப்பிடு" என்று சுரேஸை ஆ... காட்ட வைத்து ஏமாற்றித் தன் குழந்தைக்கு உணவூட்டினார். எஞ்சிய பிஸ்கட்டை சுரேஸிற்குக் கொடுக்காமல் நாய்க்குப் போட்டுவிட்டு சென்றாள்.


இதனைப் பார்த்துக் கொண்டிருந்த சுரேஸின் மனம் கல்பட்ட கண்ணாடி போல நொருங்கியது. ஆயினும் அவன் ஏதும் பேசாமல் தனது இடத்துக்கு சென்றான்.

"இஞ்சாரப்பா இண்டைக்கு ஒரே வேலைக் களைப்பா இருக்கு" என்றவாறே ராசா வீட்டுக்குள் வந்தான்.

"பால் போட்டுத் தரட்டோ"

"ரீ... போட்டுத்தா" என்றவாறே உடைகளைக் கழற்றி மாற்றிக் கொண்டு கதிரையில் அமர்ந்தார்.

"இந்தாங்கோ பால்"



"சுரேஸுக்கு குடுத்தனீரே"

"இல்லை இனித் தான்" என்றபடி சமைய லறைக்குள் நுழைந்தாள். சில்வரின் ¼ பகுதிக்குள் மட்டும் பாலை ஊற்றி மிகுதிக்கு சுடுநீரை ஊற்றிச் சாட்டுக்காகச் சீனியும் போட்டு கலக்கிய படி வெளியே வந்து.

"இந்தா சுரேஸ் பால்குடி"

"தாங்கம்மா" என்று வாங்கி குடித்ததும் உண்மைச் சுவை அறிந்து பின்பும் முழுவதையும் குடித்து முடித்துவிட்டு மேசை முன் படிப்பதற்காக உட்கார்ந்தான். இதைக் கண்ட பாத்திமா.

"சுரேஸ் கொஞ்சம் இஞ்ச வாப்பா" என அழைத்தாள். ஏதோ வேலை சொல்லப் போறா என்பதை நன்குணர்ந்த அவன் அவள் அருகில் சென்று "என்னம்மா?" எனக் கேட்டான்.

"கடைக்குப் போய் 1 கிலோ சீனி வாங்கிக் கொண்டு வாறியே?" என்றபடி காசை நீட்டினாள். அவனும் மறுக்க முடியாதவனாய்க் காசை வாங்கிக் கொண்டு போய்ச் சீனி வாங்கிக் கொண்டு வந்தான். வந்தவனைக் கண்டதும் "ஐய்யய்யோ... தீப்பெட்டி வாங்க மறந்துட்டன் ஒருக்கா அதையும் வாங்கிக் கொண்டு வாறியே."

அதையும் வாங்கிக் கொண்டு வந்தான் சுரேஸ்.

"அட லாம்பு திரி வாங்க மறந்துட்டன் ஒருக்கா வாங்கியாவன்"

திரும்பவும் கால்கள் கடுக்க மனம் வலிக்க உடல் சோர சுரேஸ் அதையும் வாங்கி வந்து நின்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். இதைக் குளித்து விட்டு வந்த ராசா கண்டதும், "என்னப்பா? ஏன் இப்படி இளைக்கிறாய்? எங்க போனனி" என்றதும் "கடைக்கு போனான் அப்பா" என்றான்.

"அதுக்கு இப்படியோ?"

"இல்லையுங்கோ தீப்பெட்டி வாங்க மறந்திட்டன். அது தான் திரும்பியும் கடைக்கு விட்டனான். 2 தரம் தான் கடைக்கு போனவன். ஏன் இப்படிக் களைக் கிறானோ தெரியல" என்று சாதாரணமாக கூறினாள்.

"என்ன? தீப்பெட்டியோ?"

"ஏன் முந்தநாள் தானே ரெண்டு டசின் சங்கத்தில் வாங்கிக் கொண்டு வந்தனான். இரண்டு நாள்ள இரண்டு டசினும் முடிஞ்சுதோ?" என்று அவன் உறுக்கிக் கேட்டதும் தனது திருட்டுத் தனத்தை மறைப்பதற்காக.

"அட தீர மறந்து போனனுங்க. முந்த நாள் வாங்கியந்தனியள் என்ன?" என கூறியதும் "உனக்கு வரவர மறதி கூடிப்போச்சு என்றான் ராசா.

"இல்லயுங்க மறந்துட்டன்" என அவளின் பேச்சைக் கேட்டதும்

"படிக்கிற புள்ளய இப்படியே அலக்களிக்கிறது"

"ம்ம்ம்... நல்ல படிப்புத்தான். உது படிச்சு என்ன கலக்ரர் உத்தியோகமே பார்க்கப் போகுது" என்று முணுமுணுத்துக் கொண்டு தனது பிள்ளையின் அருகில் சென்றாள்.

சுரேஸ் கடைக்குச் சென்று வந்த களைப்பில் வெறும் தரை என்றும் பார்க்காமல் நித்திரைக்குச் சென்றான். அவன் அருகில் ராசாவும் படுத்து நல்ல நித்திரை. இதைக் கண்ட பாத்திமா.

"இஞ்சேருங்கோ இஞ்சேருங்கோ நேரம் 11.30 ஆச்சு. எழும்பிச் சாப்பிட்டுட்டு வந்து படுங்கோ" என்று அவள் எழுப்பினாள்.

"எனக்கு உடம்பெல்லாம் நோகுது. எனக்குச் சாப்பாடு வேண்டாம். சுரேஸை எழுப்பி சாப்பாடு கொடுத்திட்டு பாய் பெற்சீற் போட்டுப் படுக்கவிடு" என்று நித்திரையில் இருந்த போதும் அவன் கூறினான்.

"அது பிறகு பார்க்கலாம். நீங்கள் முதல் எழும்பி உள்ளுக்கு போய்ப் படுங்கோ. குளிர்காத்து அடிக்குது வருத்தம் வந்தாலும்" என்றபடியே அவனை எழுப்பி அறையினுள்ளே படுக்கவிட்டு அவளும் படுத்து உறங்கினாள்.

சுரேஸ் வெளிவிறாந்தையில் பாய்கூட இல்லாமல் கூனிக் குறுகியபடி கார்மேகம் சூழ்ந்த, வானத்தில் நிலா நட்சத்திரம் மறைந்த கோலத்தில் அடித்த காற்றின் குளிரில் முனங்கியபடி நடுங்கிக் கொண்டு படுத்திருந்தான்.

கல கல சலல முணுமுணு என அறையிலிருந்து வந்த சத்தத்தில் எழுந்த சுரேஸ் தந்தையும் தாயும் உரையாடிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

"இஞ்ச பாருங்கப்பா நாளைக்கு பிள்ளைக்கு சோறூட்ட வேணும்" என்றாள் பாத்திமா.

"அதுக்கு நான் என்ன செய்யுறது" என்றான் ராசா.

"எங்கட சொந்தம் எல்லாத்தையும் கூப்பிட்டுச் சாப்பாடு குடுப்பமே" எனக் கொஞ்சலாகக் கேட்டாள்.

"நீ கேட்டு எதை நான் மறுத்திருக்கிறன்? உன்ர விருப்பப்படியே செய்" என்று கூறிவிட்டு ராசா வேலைக்கு புறப்படத் தயாரானான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சுரேஸிற்கும் பேரானந்தம்.

சோறூட்டும் விழாவை நடாத்துவதற்காக ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்தன. சில கிட்டத்துச் சொந்தங்களும் அன்றே தகவலறிவித்து வரவழைக்கப் பட்டிருந்தமையால் வேலை விரைவாக முடிந்தது.

மறுநாள் விடிந்தது. காலை 8.00 மணி ஆகுவதற்கு முன்னர் சொந்தங்கள் எல்லாம் வந்து சேர்ந்து சமையலும் ஒரு புறத்தில் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. அன்று மட்டும் வழமைக்கு மாறாக நடந்தது சுரேஸிற்கும் அப்படித்தான்.

"சுரேஸ், சுரேஸ், இந்தாப்பா உனக்கு உடுப்பு" என அன்பு தழம்ப அழைத்து உடுப்பைக் கொடுத்து அன்புடன் கூறினாள். அவள் ஆணைப்படி அவன் போட்டுக் கொண்டு வந்தான்.



"ஆ... என்ன வடிவா இருக்கு" என வாயூறியபடி 'நடிகரைப் பார்த்த மாதிரி இருக்கு" என அவள் வஞ்சக மனதோடு கூறினாள் அது முற்றிலும் உண்மையே. அவள் சொன்னதைக் கேட்டதும் சுரேஸின் மனதில் தன் தாயுடன் இருப்பது போன்ற உணர்வு தோன்றியது. ஆயினும் அவன் அவளின் உள்மனதை நன்கே உணர்ந்திருந்தான்.

சோறூட்டுவதற்கு எல்லோரும் தயாரானார்கள் வந்தவர்கள் எல்லோரும் குழந்தையைப் பார்ப்பதைவிட சுரேஸையே பார்த்து

"இஞ்ச பாருடி தங்கச்சில மாதிரி இருக்கிறான் சுரேஸ்" என்று ஒருவர் சொல்ல

"ஓமடி அவன்ர உடுப்பும் என்ன வடிவா இருக்கு. இந்தியா பக்கம் இருந்தா கீரோவாத் தான் வருவான்" என்று ஒருவருக்கொருவர் கதைக்க.

"சா... அவன்ர படிப்புக்கு அவன் ஒரு டாக்குத்தரா இல்லாட்டி இஞ்சினியரா தான் வருவான்" என்று எல்லோரும் சுரேஸை வியந்தனர். பாராட்டினர், வாழ்த்தினர் இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பாத்திமாவின் மனம் எரிமலைக் குழம்பு போலக் கொதித்தது. எல்லாத்துக்கும் ஆக்கள் போகட்டும் எனச் சுரேஸைப் பார்த்து நினைத்துக் கொண்டு தனது வேலையைக் கவனித்தாள்.

சோறூட்டும் விழாவும் முடிந்தது. எல்லோரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது "பாத்திமா இஞ்சபார் இண்டைக்கு எல்லாற்ற கண்ணும் உன்ர பிள்ள சுரேஸில தான் பட்டிருக்கும். மறக்காமல் திருஷ்டி சுத்திபோடு சரியோ?" என விருந்திற்கு வந்தவர் கூற.

"ஓம் அக்கா நீங்கள் போட்டு வாங்கோ" என்று விட்டு உள்ளே சென்ற அவள் சுரேஸை அழைத்து.

"உன்ர உடுப்பை எடுத்துக் கொண்டு வா" என வஞ்சக மனதோடு அன்பாகக் கூறினாள்.

அவளின் வஞ்சகக் குணத்தை சுரேஸ் முற்றிலும் அறிந்திருந்த போதும் குழந்தை மனம் அவளின் வார்த்தைகளை நம்பி. இன்றிலிருந்து எனக்கு விடுதலையோ? என்று எண்ணியபடி.

"இந்தாங்க அம்மா" எனத் தனது புத்தம் புதிய உடுப்பைக் கொடுத்தான் அதை வாங்கியதும் அவள்.

'இஞ்ச பாருப்பா சுரேஸ். இது உனக்கு எடுத்த உடுப்பில்ல. பக்கத்து வீட்டுத் தம்பியின்ட உடுப்பு. அவனிட்டக் குடுக்கவேணும் சரியே" எனத் தந்திரமாகக் கூறிவிட்டு அவனின் உடுப்பைக் கொண்டு போய் யாருக்கும் தெரியாமல் தெருவோரம் இருந்த குப்பைத் தொட்டியினுள் போட்டுவிட்டு வந்தாள்.

இது அவனுக்கு எள்ளளவும் எதிர்பாராத ஏமாற்றமாக இருந்தபோதும் அவன் கலங்கவில்லை ஏனெனில் அவன் ஏதும் இது பற்றிய உண்மை பொய் அறிந்திருக்கவில்லை. ஆயினும் சிறிது கவலை அவனின் மனதில் படிந்தபோதும் சோராமல் தனது பாடசாலை உடுப்புக்களை தோய்ப்பதற்காக கிணத்தடிக்கு எடுத்துச் சென்றான் எங்கோ இருந்து ஒரு பாடல் ஒலித்தது. "விடுகதையா இந்த வாழ்க்கை.." எனும் பாடல் அதைக் கேட்டபடி தனது உடைகளைத் தோய்த்து உலரப் போட்டுவிட்டு வீட்டிற்குள் வந்த சுரேஸ் தந்தை அருகில் வந்தான்.

"அப்பா... அப்பா" என நித்திரையில் இருந்த வரை எழுப்பினான்.

அவரும். சீறிச்சினந்து எழும்பி உடம்பு அலுப்பை முறித்தபடி "ஏன்டா இப்ப எழுப்பினாய்" எனக் கொஞ்சம் கோபத்துடன் கேட்டார்.

"அப்பா அப்பா என்ர பிறந்த நாள் வருகுதப்பா" எனச் செல்ல மொழியால் கேட்டான்.

"எப்ப? அதுக்கு நாள் கிடக்கு தானே" என்றதும்

"இல்ல அப்பா தம்பியின்ர விழா மாதிரி என்ர பிறந்த நாளுக்கும் எல்லாரையும் கூப்பிடுவியளே?"

"பிறந்த நாள் வாரதுக்குக் கனநாள் கிடக்கு அப்ப பார்ப்பம். இப்ப போய்ப் படி" என்று விட்டு ராசா எழும்பிச் சென்று மறுபடியும் குளித்து வெளிக்கிட்டு வெளியே சென்றார். ராசாவை சுரேஸ் இமை மூடாமல் பார்த்தபடியே நின்றான்.

"கடவுள் எல்லாருக்கும் என்னென்ன எழுதி வைச்சிருக்கிறானோ அது தானே நடக்கும். நான் மட்டும் என்ன விதிவிலக்கா" என மனதிற்குள் எண்ணிக் கொண்டு திரும்பையில் பாடசாலையில் கொடுத்த வீட்டு வேலை ஞாபகத்திற்கு வந்தது. வீட்டு வேலையைச் செய்வதற்காக சென்று கதிரையில் அமர்ந்து கொப்பி எடுத்து எழுதுவதற்கத் தயாரானாள். அவ்வேளை 'சுரேஸ்... சுரேஸ்...' என்று ஒரு குரல் கேட்டது அது வேறு யாருமில்லை பாத்திமா தான்.

"என்னம்மா?" என்றான் சுரேஸ்.

"உங்க இருந்து என்ன செய்யுறா இஞ்சவா. தம்பி அழுறது காதுக்குக் கேக்கேல்லையா?" என்ற அவளின் வார்த்தையைக் கேட்ட அவன் பாத்திமா இருந்த கிணத்தடிக்கருகில் சென்றான். அவனைக் கண்டதும்.

"இந்தா இந்த உடுப்பை அலம்பிக் கொடியில போடு. தம்பிக்குச் சாப்பாடு தீத்திவிட்டு வாறன்" என்றதும்

"நான் போய் தம்பியோட விளையாடுறன். நீங்கள் உடுப்பை ஆறுதலா அலம்பி போட்டுட்டு வாங்கோவன்" என வஞ்சகமில்லாமல் சொன்னான் சுரேஸ்.

"இஞ்ச நான் உனக்கு ஒண்டு சொன்னா நீ எனக்கு ரெண்டு சொல்லாத. உனக்கு அவன் தம்பியுமில்ல. அவனுக்கு நீ அண்ணனுமில்ல. பேசாம நான் சொல்லிறத மட்டும் செய். ஏதோ கூடப் பிறந்த மாதிரி எப்ப பார்த்தாலும் தம்பி தம்பி எண்டு கொஞ்சுறது" எனக் கோபத்துடனும் வெறுப்புடனும் பேசிவிட்டுச் சென்றாள்.

அவளின் வார்த்தைகளைக் கேட்ட சுரேசின் மனம் மழை இல்லா நிலம் போல வெடித்தது. ஆயினும் அவன் ஏதும் பேசாதவனாய் இடிந்து போய் உடுப்பிற்கு அருகே சென்று உடுப்பை அழுதபடியே தோய்த்துக் கொண்டிருந்தான்.

பாவம் சுரேஸ் அவன் என்றும் இல்லாதது போல் அன்று அழுதான். மிகையாக அழுதான் என்றே கூறலாம். தோய்த்த உடுப்பிலிருந்து வடிந்த தண்ணீரை விட அவன் கண்களிலிருந்து அதிக கண்ணீர் வடிந்தது. ஏனெனின் அவள் தம்பிக்கும், தனக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்பதே அதிக கண்ணீர் வரக் காணரமாகியது.

இப்படியே நாட்கள் கடக்க சுரேசின் பிறந்த நாளும் நெருங்கியது.

பிறந்த நாளின் முதல் நாள்

"அப்பா அப்பா நாளைக்கு என்ர பிறந்த நாள் எனக்கு உடுப்பு எடுக்கல்லையா அப்பா?"

"தம்பி இந்த மாதச் சம்பளம் வரப் பிந்துது. ஏனெண்டு தெரியேல்ல. கையில காசும் இல்ல" எனக் கவலை தோய்ந்த முகத்துடன் அன்பு சிந்தக் கூறினார்.

"அப்ப நான் நாளைக்கு எந்த உடுப்பைப் போடுறது?" என கவலையுடன் கேட்டான்.

"தம்பியின்ர சோறூட்டும் விழாவுக்கு எடுத்த உடுப்புப் போடலாம் தானே? அது நீ ஒருக்கா தானே போட்டனி" என்ற தந்தையின் வார்த்தைகள் வியப்பாகவும் விந்தையாகவும் விநோதமாகவும் இருந்தது.

"அப்பா என்ன சொல்லுறீங்கள்? அது எனக்க எடுத்த உடுப்பா?" என்று ஆச்சரியத்துடன் கூடிய கவலையுடன் கேட்டான்.

"ஓம் இதில உனக்கு என்ன சந்தேகம்?" எனக் கேட்ட அவரின் வார்த்தைகள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியதைப் போல் அவன் மனம் நொந்தது. அதன் பின்னே அவனுக்கு வார்த்தைகள் ஏதும் வரவில்லை கண்களிலிருந்த கண்ணீரே வடிந்து ஓடத் தொடங்கியது. இதைக் கண்ட ராசா.

"ஏனப்பா! ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என வியப்பாகக் கேட்டார்.

"அம்மா அம்மா" என ஏதோ சொல்ல எத்தனித்த அவனால் ஏதும் பேச முடியவில்லை.

இவன் இறந்த தன்னுடைய தாயை நினைத்து அழுகிறானா? அல்லது பாத்திமாவை அழைத்து அழுகிறானா? எனப் புரியாதவனாய்

"பாத்திமா பாத்திமா பாத்திமா" என்று அவன் சத்தமாக அழைத்ததும் ஏதும் அறியாதவள்.

"என்னங்க? என்ன?" என்றபடியே வெளியே வந்தாள் எனினும் இவள் நடந்த எல்லாவற்றையும் ஊகித்து உணர்ந்து கொண்டாள் மீண்டும் "என்னப்பா? என்ன நடந்தது? என் சுரேஸ் அழுகிறான்?" என விசாரித்தாள்.


ராசா நடந்தவற்றைக் கூறிவிட்டு

"எங்க அந்த உடுப்பு" எனக் கேட்டான்.

"அந்த.... உடுப்பு... " என இழுத்தாள் பாத்திமா.

"என்ன இழுக்கிறா? பதில் சொல்லு" என உறுக்கிக் கேட்டான்.

"அதுவா? அந்த உடுப்பு நான் தான் கொண்டு போய் தெருவோரத்தில இருந்த குப்பைத் தொட்டிக் குள்ள போட்டனான்" என ஆத்திரம், வஞ்சகம், கெட்ட குணம் யாவும் கலந்த ஒரு உருவமாக நின்று கூறினாள்.



உடனே ராசாவின் முகம் கறுத்தது கண்கள் சிவந்தது "ஏன்?" என்று அதிர்ச்சி, வியப்பு, ஆத்திரம் இவை எல்லாம் கலந்து வாய் ஊடாக வந்த குரலாக அது வெளி வந்தது.

அதிர்ந்து விட்டாள். விளையாட்டாகக் கூட திட்டாதவன். இன்று இவ்வளவு கோபப்பட்டு

விட்டாரே என்று எண்ணியவள் இதை எப்படியாவது சமாளிக்க வேண்டும் என நினைத்து

"அது அங்க பெட்டிக்குள்ள கிடக்கு" எனச் சமாளிக்க முற்பட்டதும்

"எங்க அத எடுத்துக் கொண்டு வா' என உறுதியாகக் கூறினார். அப்படிக் கூறியதும் முழுசியபடி பயத்துடனும் சுரேசைப் பார்த்து சனியன் உன்னால தான் எல்லாம் வாறது. இரு உனக்கு நல்ல பாடம் படிப்பிக்கிறேன் என்று மனதிற்குள் நினைத்தபடி நின்றாள்.

"ஏன் பாத்திமா உடுப்பு எங்க? எடுத்துக் கொண்டு வாவன்" என்றான் ராசா. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுரேஸ்.

"அப்பா அந்த உடுப்பு பக்கத்து வீட்டுத் தம்பியின்ட என்று சொல்லிட்டு அம்மா கொண்டு போய் அங்க குடுத்தவா" என்ற சுரேசின் இரக்கம் சிந்தும் வார்த்தைகளைப் கேட்ட அவன். பாத்திமாவின் பேச்சையும் அவளின் கோலத்தையும் பார்த்த ராசா உண்மையை உணர்ந்து கொண்டார்.

"ஏன் பாத்திமா இவனும் உன்ர பிள்ளை தானே" எனக் கூறினான்.

"ஆருங்க எனக்குப் பிள்ள? நிமல் மட்டும் தான் எனக்கு பிள்ள. உங்களுக்கு இதுவும் பிள்ள எண்டா வச்சுக் கட்டிக்கொண்டு கிடவுங்கோ. எனக்கு நிமலத் தவிர வேற யாரும் பிள்ள இல்ல" என உறுதியோடு கோபத்துடன் கூறினாள். இதைக் கேட்டதும் மனம் சோர்ந்த ராசா.

"என்ர பிள்ளையையும் கவனிப்பாய் எண்டு தானே உன்னக் கட்டினனான்" என்றான். அவனின் குரல் ஒய்வதற்கு முதல்

"அப்படி என்னால முடியாது" என்றாள் அவள்

"அப்ப என்ர பிள்ள?" எனக் கேட்டான்

"எங்கையாவது கொஸ்ரல் வழிய கொண்டு போய் தள்ளி விடுங்கோ. என்னால உத மேய்க்க ஏலாது" என்ற அவளின் குரலில் சற்றும் இரக்கம் தெரியவில்லை.

"இப்படி நீ ஒரு கண்மூடி ஒரு கண் திறக்குறது எண்டால் வெளிய போ. இனி உனக்கும் எனக்கும் எந்த உறவும் கிடையாது" எனக் கோபத்துடன் கூறினான்.

"ஏன் இது உம்மட வீடோ? இது என்ர சீதன வீடு. பத்தேல கிடந்ததுகள மெத்தேலை வச்சா என்ன செய்யும்? அது திரும்பியும் பத்தையத் தான் நாடும்" எனக் கோபத்துடன் கூறினாள்.

'பாத்திமா இப்படி கதைக்காத என்ர பிள்ளயையும் வடிவாப்பார். அது தான் நமக்கு நல்லது" எனக் கோபத்தை மனதில் அடக்கிக் கொண்டு கெஞ்சிக் கேட்டான். அவனின் தாழ்ந்த பேச்சுக்கள் கூட அவளின் மனதில் நுழையவுமில்லை அவளின் மனம் இளகவும் இல்லை இவ்வாறே இருவருக்கு மிடையில் வாக்குவாதம் பலத்தது ஒரு கட்டத்தில்,

**ராசாவும் தனது கோபத்தை அடக்க முடியாமல் அருகிலிருந்த கண்ணாடிப் பூஞ்சாடியை எடுத்து எதிரிலிருந்த சுவரில் எறிந்துவிட்டு வெளியே சென்றார். அக்கண்ணாடி குவளை பல துண்டுகளாக உடைந்தது. அந்தப் பூஞ்சாடி உடைந்த துண்டுகளை விட அதிக கூறுகளாக இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுரேஸின் மனம் உடைந்தது.**

"என்னடி கதைக்கிறாய்" என்று கூறிக் கொண்டே கன்னத்தில் அறைந்தார். அறைந்ததும் அவளின் கன்னம் சிவத்தது. கண்கள் நெருப்பி லிருக்கும் செங்கற்கள் போல் ஆகியது. கண்ணீர் மல்கியது. ஆனால் கண்ணீர் துளி மட்டும் கீழே விழவில்லை. அவள் உடனே தனது அறைக்குள் ஓடிச்சென்று கதவுகளைப் பூட்டிக் கொண்டாள். ராசாவும் தனது கோபத்தை அடக்க முடியாமல் அருகி லிருந்த கண்ணாடிப் பூஞ்சாடியை எடுத்து எதிரிலிருந்த சுவரில் எறிந்துவிட்டு வெளியே சென்றார். அக்கண்ணாடி குவளை பல துண்டுகளாக உடைந்தது. அந்தப் பூஞ்சாடி உடைந்த துண்டுகளை விட அதிக கூறுகளாக இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுரேஸின் மனம் உடைந்தது. இதன் பின் குடும்பம் நிலை குலைந்தது கணவன் மனைவி ஒருவருக்கொருவர் முகம் கொடுத்து கதைப்ப தில்லை தாங்களும் தங்கள் பாடுமாகத் திரிந்தனர். இதனால் பாதிக்கப்பட்டது. சுரேஸும் விமலுமே. ஆயினும் அதிகம் பாதிக்கப்பட்டது சுரேஸ் தான்.

இவ்வாறான நிலமையிலே இரண்டு மாதங்கள் உருண்டோடியது. அன்றே ஒருநாள் சுரேஸ் நிலவைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். இவன் இப்படி யோசித்தபடி படுத்தி ருந்ததை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்த பாத்திமா.

அண்டைக்கு எனக்கு அவரிட்ட அடிவாங்கித் தந்திட்டு இண்டைக்கு ஒய்யாரமாப் படுத்திருந்து நிலவையோ ரசிக்கறா? என்று மனதிற்கு நினைத்துக் கொண்டு சமையல் அறைக்குள் சென்று சுடுநீரை எடுத்து வந்து படுத்திருந்த சுரேசின் மேல் ஊற்றினாள்.

ஊற்றியதும் அவன் எதையும் எதிர் பார்க்காததால் அதிர்ந்துவிட்டான். பின்பு சுடுநீரின் வெப்பம் தாங்க முடியாத அவன்.

"ஐயோ அம்மா.... கடவுளே.... ஐயோ..... ஐயய்யோ" என்று கூக்குரலிட்டு கத்தினான்.

வருடக் கணக்காக நிம்மதியாய் ஆறுதலாய் இருக்காத அவன் அன்றுதான் ஆறுதலாக இருந்தான். அதைப் பொறுக்காத பாத்திமாவின் மனம் இப்படிச் செய்தது. அவள் தான் ஊற்றியிருப்பாள் என நன்கு அறிந்த அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் ஒரு கரையில் இருந்து பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள். இந்தச் சத்தம் கேட்டதும் படுத்திருந்த ராசா வெளியே வந்தான், வந்து துடிதுடித்துக் கொண்டிருந்த சுரேஸின் அருகில் சென்றான் சென்ற அவன்.

"என்னப்பா? என்ன நடந்தது?" என விசாரிக்கும் போது அருகிலிருந்த பாத்திமாவையும் கண்டான். நடந்தி ருந்ததை ஊகித்த அவன் கடவுளை நொந்து கொண்டான். ஆயினும் ஏதும் அறியாதவன் போல்.

"ஏனப்பா அழுகிறாய்? என்ன நடந்தது?" என மறுபடியும் வினாவினார்.

கடலலை தான் தன்னுடைய வாழ்க்கை என்று நன்கே உணர்ந்த அவன்,

"தவறுதலாக சுடுதண்ணீர் ஊத்துப் பட்டிட்டுது" என்றான்.



# நதிமூலமும் ரிஷிமூலமும்

~ வடவரணி. சி. சபா ~

நிச்சயமாக ஒன்றில் இருந்துதான் இன்னொன்று உருவாகி இருக்க முடியும். "ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா?" - இது கண்ணதாசன் வரிகள். ஒன்றில் இருந்து தான் இன்னொன்று உருவாக வேண்டும் என்பதுதான் இயற்கையின் நியதியும் ஆகும். உருவாகி யுள்ள எந்த ஒரு பொருளுக்கும் எந்த ஒரு செயற்பாட் டுக்கும் ஏதோ ஒரு மூலம், அல்லது தோற்றுவாய் இருக்க வேண்டும். அதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அதை நாம் அறிந்து கொள்ள முற்படும் போது பல கசப்பான உண்மை களையும் அவற்றை உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங் களையும் அறிந்து கொள்ளலாம்.

இதை அடிப்படையாகக் கொண்டு தான் பல அறிவாளிகளும் புத்தி ஜீவிகளுக்கும் அடிக்கடி கூறுவார்கள். "எடுத்ததற்கெல்லாம், நதிமூலம் ரிஷி மூலங்கள் பார்க்கக் கூடாது" என்று. அப்படிப் பார்க்கப் போனால் உருப்படியான எந்தக்காரியத்தையும் செய்ய முடியாது என்று. அப்படியானால் இந்த நதிமூலம் ரிஷிமூலம் என்றால் என்ன? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் உருவாவதை தவிர்க்க முடியாது.

அதை ஆராய்வதற்கு முன்னர் அதன் உண்மையை உணரக்கூடிய நகைச்சுவை ஒன்று கிராமிய மட்டத்தில் உலவுவதைக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது. ஒரு சிலர் சேர்ந்து ஒரிடத்திற்கு போனார்களாம். எல்லோரு மாகச் சேர்ந்து சமைத்துச் சாப்பிட விரும்பினார்கள். ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு வேலை கொடுக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் ஒரு "நாட்டு வைத்தியர்" அவருக்கு கொடுக்கப்பட்ட பணி அண்மையில் உள்ள சந்தைக்கு சென்று மரக்கறிகள் வாங்கி வரவேண்டும் என்பது தான். அவரிடம் ஒரு சிறு கூடையும் சிறிதளவு பணமும் கொடுக்கப்பட்டது. அவர் சந்தைக்கு சென்றார். அங்கு எல்லா விதமான மரக்கறி வகைகளும் காணப்பட்டன. அவற்றில் எதை வாங்குவது என்பதில் அவருக்குப் பிரச்சினை ஏற்பட்டது.

அவர் ஒரு வைத்தியர் அல்லவா? கத்தரிக்காய் கிரந்தி, வாழைக்காய மந்தம், இதே போல் ஒவ்வொரு காய்களும் "பித்தம்" "வாய்வு" "புளிப்பு" என ஒவ்வொரு இயல்புகளைக் கொண்டிருந்தன. அவரால் எந்தக் காய்கறிகளையும் வாங்க முடியவில்லை. வெறுங் கூடையுடன் திரும்பி வந்து விட்டார்.

இதற்கான காரணம் காய்கறிகளின் மூலங்களைப் பற்றி அவர் அறிந்திருந்ததுடன் அதைப் பற்றி அவர் அளவுக்கு அதிகமாக சிந்தித்தது தான்.

ஆதி காலத்தில் சைவத் திருத்தலங்கள் புண்ணிய நதிகள் பலவற்றை கொண்டிருந்தன. மனிதனால் தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படும் பாவங்கள் இப் புண்ணிய நதிகளில் நீராடுவதன் மூலம் கழுவப்படுவதாக ஒரு நம்பிக்கை இருந்து வந்தது.

ஒன்றின் மூலத்தை ஆராய்வதை ஒரு அளவுடன் நிறுத்தி விட வேண்டும். அதை விரிவாக ஆராய்ந்த தனால் அவரால் ஒரு மரக்கறியைக் கூட வாங்கமுடிய வில்லை. இதை அடிப்படையாக் கொண்டுதான் "யதார்த்த வாதிகள்" கூறுகிறார்கள் எடுத்ததற் கெல்லாம் "நதிமூலங்கள் ரிஷிமூலங்கள்" பார்க்கக் கூடாது என்று.

இனி நதிமூலம் ரிஷிமூலம் என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்வோம்.

## நதிமூலம்

ஆதி காலத்தில் சைவத் திருத்தலங்கள் புண்ணிய நதிகள் பலவற்றை கொண்டிருந்தன. மனிதனால் தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படும் பாவங்கள் இப் புண்ணிய நதிகளில் நீராடுவதன் மூலம் கழுவப்படுவதாக ஒரு நம்பிக்கை இருந்து வந்தது. உதாரணமாகக் காசியில் நீராடுதல், கங்கையில் நீராடுதல் பாவ விமோசனத்துக்குச் சிறப்பான செயல்களாக இந்துக் களால் மதிக்கப்பட்டு வந்தது. இதன் அடிப்படையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கங்கை நதியில் நீராடிப் பாவ விமோசனம் பெற்றதாகப் பல்வேறு கதைகளும் உண்டு. இதனால் கங்கை நதியைப் "புனித கங்கை" என்றும் "புண்ணிய கங்கை" என்றும் அழைத்தனர்.

ஆனால் இந்தக் கங்கை நதியில் கலக்கும் நீர் பல மலைகளில் ஊற் றெடுத்து அந்த மலையின் அருவிகள் இறுதியில் கங்கை யில் கலந்து சங்கமிக்கின்றன. இந்த மலை அருவிகளின் சங்க மத்தின் போது இறந்துபோன பல மிருகங்கள், பறவைகள் அவற்றின் உடல்களையும் எச்சங்களையும், கழிவு களையும், குப்பை கூழங் களையும் வாரிச் சுருட்டிக் கொண்டு தான் கங்கையில் கலக்கின்றன.

இந்த மூலத்தை நாம் ஆராய்வோமானால் கங்கை நதியைப் புனித நதி என நாம் ஏற்றுக் கொள்வோமா? ஒரு போதும் ஏற்க மாட்டோம். எனவே எமது ஆராய்வு கங்கை நதியுடன் மட்டும் நின்று விட வேண்டும். நீ உனது ஆய்வினை நதியுடன் மட்டும் நிறுத்திக் கொள் என்பது தான் "நதிமூலம்" என்ற சொற்றொடரின் விளக்கமாகும்.

## ரிஷிமூலம்

இந்து சமயத்தில் ஆசைகளையும் சுக போகங் களையும் வெறுத்து ஒதுக்கி ஆன்மீக நெறிகளைப் பின்பற்றி ஆண்டவனைச் சரணாகதி அடையும் பாதையில் பயணிப்பவர்களை "ரிஷி"கள் என்று அழைப்பார். இந்த ரிஷிகள் தவ வலிமை கொண்டவர்கள். இந்த "உன்னத

நிலை" மனித குலத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கக் கூடியது.

திருப்புகழ் - திருமுருகாற்றுப்படை பதிகங்களைப் பாடிய முருக பக்தர் "அருணகிரி நாதர்" இளமையில் பல கெட்ட பழக்கவழக் கங்களைக் கொண்டிருந்தார். இவரை நல்வழிப்படுத்த இவரின் தமக்கையார் எடுத்த பல்வேறு முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. இவர் "பரத்தை" வீடு செல்லும் பழக்கத்தையும் கொண்டிருந்தார். ஒருசமயம் "பரத்தை" வீடு செல்வதற்கு இவரிடம் பணம் இல்லாது போகவே, தனது தமக்கையாரின் தங்க வளையலில் ஒரு பகுதியை வெட்டி எடுத்துக் கொண்டு பரத்தை வீடு சென்று வந்தார் அருணகிரி. இச் சம்பவத்தை அறிந்த இவரின் சகோதரி மிகவும் கோபமடைந்ததுடன் ஆத்திர மிகுதியால் அருணகிரியைப் பார்த்து "நீ எனது வளையலைக் கொடுத்து பரத்தை வீடு செல்வதை விட என்னையே பரத்தையாக வைத்திருக்கலாம்" என்று கூறினார்.

இச்சுடு சொற்களைத் தாங்க முடியாத அருணகிரி மலையின் உச்சியில் ஏறி அதிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்த போது முருகப் பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டார். அதன் பின் அவர் முருக பக்தராக மாறித் திருப்புகழ், திருமுரு காற்றுப்படை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி போன்ற பதிகங்களைப் பாடினார். ரிஷி அந்தஸ்துக்கு உயர்ந்த அவரின் ஆரம்ப வாழ்க்கை அதாவது "மூலம்" அருவருக் கத்தக்கது. அதை அடிப்படையாகக் கொண்டு அவரால் பாடப்பட்ட பதிகங்களை வெறுத்து ஒதுக்க முடியுமா?

இராமாயணத்தைப் பாடிய "வால்மீகி" யார்? ஒரு கொள்ளைக்காரன். பின் தவவலிமை கொண்ட ஒரு ரிஷியாக மாறிய உண்மை அனைவரும் அறிந்ததே.

நாம் ரிஷியுடன் மட்டும் நின்றுவிடுவது நல்லது. அவரின் மூலங்களை ஆராய்வது பொருத்தமானது அல்ல.

நதிமூலம், ரிஷிமூலம் என்பது எதனைக் குறிக்கின்றது என்பதைத் தற்போது எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

## வேதாகமத்திலிருந்து

நதிமூலம் ரிஷிமூலம் இரண்டுக்கும் மேலதிகமாக வேதாகமம் (பைபிள்) சொல்லும் சூத்திரத்தையும் மேலோட்டமாக ஆராயலாம்.

மனித இனம் குரங்கிலிருந்து தோன்றியதாக "டார்வின்" தத்துவங்கள் கூறிய போதும் விஞ்ஞானி களின் ஆராய்சி வேறுபல கோணங்களிலும் விரிந்து செல்கிறது. ஆண்டவன் உலகத்தைப் படைத்த போது முதலில் "ஆதாம், ஏவாள்" இருவரையும் படைத்ததாகவே "பைபிள்" கூறுகிறது.

ஆதாம் ஏவாள் இருவரும் தான் முதலில் தோன்றிய ஆணும் பெண்ணும் ஆவர். இவர்கள் இருவர் மூலந்தான் மனித குலம் தோன்றியது. அப்படியானால் இங்கு ஒரு பிரதான கேள்வி எழுவது தவிர்க்க முடியாதுள்ளது.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இருபது பிள்ளைகள் பிறந்திருந்தால் அவர்களுடன் சேர்ந்து இருபத்திரண்டு பேர் மட்டுமே உருவாகி இருக்க முடியும். இருபத்தி மூன்றாவது ஆள் உருவாக சாத்தியமில்லை. அப்படி யில்லாது விடின் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த பிள்ளைகள் குடும்பங்களாக இணைந்திருக்க வேண்டும். அப்படியில்லாது விடின் புதிய மனிதன் ஒருவன் மேலதிகமாக உருவாகியிருக்க முடியாதல்லவா?

இதை ஏன் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது என்றால் பைபிளுடன் மட்டும் நின்று விடு என்பதற்காகத் தான் பைபிளின் மூலத்தை ஆராய வேண்டாம்.

அந்த மூலங்களை நாம் ஆராயப்புகுந்தால் "சகோதரங்கள் - உடன் பிறப்புக்கள்" திருமணம் செய்வது தவறில்லை என்பதை நியாயப்படுத்த ஆதாரங் களைச் சேகரிப்பது போல் ஆகிவிடும். எனவே தான் மூலங்களை ஆராய்வதை அளவுடன் நிறுத்திவிடுங்கள்.

இவற்றை நன்றாக உணர்ந்த அறிவாளி களால் உருவாக்கப்பட்ட சொற்தொடர் தான் "எடுத்ததெற்கலாம் நதிமூலம் ரிஷிமூலம் பார்க்க கூடாது" என்ற உண்மை வெளிப்பாடாகும்.

## தமிழருவி சஞ்சிகையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவரிடையேயான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் (03)

**கவிதைப் போட்டி**

- 1ஆம் பரிசு (இருவர்) 400/- வீதம்
  1) ஜெ. அஜந்தன், தரம் 10A
     யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம், மானிப்பாய்.
  2) அ. ஸயந்தினி, தரம் 11
     யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம், மானிப்பாய்.
- 3ஆம் பரிசு 200/- வீதம்
  விதுசா கிருபாகரன், தரம் 11A
  யா/ சங்கானை சிவப்பிரகாச ம. வித்தியாலயம்

**கட்டுரைப் போட்டி**

- 1ஆம் பரிசு 1000/-
  2013 கலைப்பிரிவு
  யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
- 2ஆம் பரிசு 750/-
  லக்ஷனா ஸ்ரீரங்கநாதன், தரம் 11
  யா/வயாவிளான் ம.வித்தியாலயம், வயாவிளான்
- 3ஆம் பரிசு 500/-
  வி. கோபிகா, 2013 கலைப்பிரிவு
  யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

பரிசில் பெற்ற மாணவர்களைத் தமிழருவி வாழ்த்துகின்றது. பரிசில்கள் விரைவில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

# வங்கக் கடலில் வல்லிபுரத்தான் கண்ட வண்ணமிகு நீராட்டம்

"அடடா - இராவணா, விடடா- சீதையை, கோவிந்தா – கோபாலா, சக்கரம் சக்கரம் - சங்கு சக்கரம்" என்று வானதிரக் குரலெழுப்பியவாறு இளந் தொண்டர்கள் வல்லிபுர ஆழ்வாரையும் வல்லிபுர நாச்சியாரையும் தும்பிக்கையாழ்வாராக அமைந்த விநாயகப் பெருமானையும் சுமந்தவாறு கற்கோவளம் கடற்கரையை நோக்கி விரைந்தோடி வந்தனர். வானதிர அவர்கள் எழுப்பிய ஒலியும் அந்தச் சந்தமும் அவர்களின் பாதவடி வைப்புக்களுக்கு வாய்ப்பாக அமைந்திருந்தது.

ஓங்கி உலகளந்த பெருமாளின் உன்னதத்தைக் காணக் கண்ணாயிரம் வேண்டும். சுதர்சனச் சக்கரத்தின் அழகே தனியழகு. இது வல்லிபுரத்திற்கு உள்ள சிறப்பு.

வல்லிபுர மாயவனின் கடல்தீர்த்தம் கற்கோவளம் கடற்றுறையில் கடந்த 11.10.2011 பௌர்ணமி நாளன்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. இவ்வாண்டு கடலைக் காண ஒரு பெருங்கடலே திரண்டு வந்திருந்தது. எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகளையே காண முடிந்தது.

அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது வங்கக் கடல். இந்தக் கடலுக்கு மட்டும் பேச முடிந்தால் எங்கள் வரலாற்றில் எத்தனை பக்கங்களை அது பேசியிருக்கும்? மனதிற்குள் நினைப்பு மேலிடக் கடலை வெறித்துப் பார்த்தேன். மறுபுறம் தீர்த்தமாடலுக்கான ஆயத்தங்கள் தடபுடலாக இடம்பெற்றன.


வல்லிபுர நாதரின் நீராட்டத்திற்காக எத்தனை ஆயத்தங்கள்?

பெரியாழ்வார் தன்னைத் தாயாகவும் கண்ணனைச் சேயாகவும் கருதிப் பல்லவர் காலத்தில் பாடிய பாடல்கள் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் எழ அடிகோலின. ஒரு கட்டத்தில் கண்ணனை நீராட வருமாறு அழைப்பார் பெரியாழ்வார்.

*"எண்ணெய் புளிப்பழம் கொண்டு எத்தனை போதும் இருந்தேன்*
*நண்ணல் அரிய பிரானே நாரணா நீராட வாராய்"* எனக் கண்ணனின் வளர்ப்புத்தாயான யசோதை வேண்டுவதாக அவர் பாடினார்.

கற்கோவளத்தில் வங்கக் கடற்றுறையில் காத்திருந்தவர்களும் எத்தனை பொருட்களுடன் இருந்தார்கள்? பால், தயிர், பஞ்சாமிர்தம் அப்பப்பா. அத்தனையும் தயார் செய்வதில் கூட ஒரு பக்திப் பணிவைத் தொண்டர்கள் வெளிக்காட்டினர்.

கடற்றரையை நோக்கிய மணல் வெளியில் கால் புதைய நடப்பதே ஒரு தனிச் சுகம். வழிவழியே இராவணன் மீசை, அடம்பன்கொடி என மணல் மேடுகளில் காட்சி தந்தன. மணல் மேடுகளில் அவற்றின் ஆட்சி தான் போலிருக்கிறது.



வடபுல வரலாற்றில் வல்லிபுரக் கோவில் திருவிழாவிற்குச் சிறப்பிடம் உண்டு. கோவில் திருவிழாவிற்கு வண்டில்கட்டிப் போகும் கலாசாரம் யாழ்ப்பாணத்தவர்களின் சொத்து. இதனை வைத்தே சிறுகதைகள் நாவல்கள் பிறந்துள்ளன. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான இலங்கையர் கோனின் வெள்ளிப் பாதசரம் என்ற சிறுகதைகூட வல்லிபுரக் கோவில் திருவிழாவையே கதைக் களமாகக் கொண்டிருக்கிறது. அந்தக் கதையில் வரும் நல்லம்மா வல்லிபுரத்தில் உள்ள மணல் வெளிக்குள் கால்புதைந்து காற்சதங்கையைத் தொலைத்துவிடுவாள். அட மணலுக்குள் காற் சதங்கை புதைந்து விட்டால் இலகுவில் எடுத்து விட முடியாதா? என்று தான் நினைத்திருந்தேன். கடல் தீர்த்த நாளில் மணலுக்குள் புதைந்து நின்ற வாகனங்களைக் கண்டபின் நான் கொண்டிருந்த எண்ணம் தவறென்று புரிந்தேன்.

ஹையேஸ், லொறி முதலிய வாகனங்களில் மணல் வெளிக்குள் வந்தவர்கள் இடைவழியில் சிக்கித் தவித்தனர். ஆயினும் பக்த கோ(ா)டிகள் இவற்றைப் பலங்கொண்ட மட்டும் தள்ளிக் கரைசேர்த்து விட்டனர்.

முந்திய காலங்களில் வண்டில் கட்டி வந்தவர்கள் என்ன பாடுபட்டிருப்பரோ? என எண்ணத் தோன்றியது. கடல் தீர்த்தம் காணக் கடற்கரைக்குச் செல்ல டிராக்டரே ஏற்ற வாகனம். தண்ணீர்ப் போத்தல் விற்பனை முதல் தின்பண்டங்கள் பலவற்றையும் விற்பனை செய்யும் டிராக்டர் கடைகள் கடற்கரையில் முளைத்திருந்தன. அவர்களின் வியாபாரத்திற்கும் குறைவிருக்கவில்லை.

பிற்பகல் 3 மணி தொடக்கம் திரண்டிருந்த மக்களுக்காகச் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன. இதற்கென அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், விரிவுரையாளர் ச.லலீசன், ஆசிரியர் கு.பாலசண்முகன், பண்டிதர் பொன். சுகந்தன் ஆகியோர் வல்லிபுர மாயவனின் பெருமைகளைத் தொடர்பு படுத்திச் சொற்பெருக்காற்றினர்.

மறுபுறத்தில் கடலில் படகுகள் பல சாகசச் செயல்களில் ஈடுபட்ட வண்ணம் இருந்தன. குறுக்கும் மறுக்கும் ஓடித் தங்கள் அந்தரத்தை வெளிக் காட்டியபடி இருந்தன. படகு உரிமையாளர்கள் தமது மனைவி மற்றும் குடும்பத்தினரையும் படகில் ஏற்றிக் 'கலர்' காட்டிக் கொண்டிருந்தனர். நீரில் நீச்சலடிப்பவர்கள் கரையில் நிற்பவர்கள் தங்களையே பார்க்கின்றனர் என்ற

நினைப்பில் தாமறிந்த நீச்சல் நுட்பங்களை வெளிப்படுத்திய வண்ணம் மிதந்தனர்.

இவையெல்லாவற்றிற்கும் இடையே பக்தி பூர்வமாகக் கோவிந்த நாம சங்கீர்த்தனம் பாடி ஆடிய பக்தர்களையும் காண முடிந்தது. கடல் தீர்த்த நாளில் வானில் கருடன் காட்சி தரும் என்ற நம்பிக்கை காலாதிகாலமாகக் காணப்படுகின்றது. சொல்லி வைத்தாற்போல் நீராட்ட நிறைவில் வானில் கருடனின் பிரவேசம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

> **மறுபுறத்தில் கடலில் படகுகள் பல சாகசச் செயல்களில் ஈடுபட்ட வண்ணம் இருந்தன. குறுக்கும் மறுக்கும் ஓடித் தங்கள் அந்தரத்தை வெளிக் காட்டியபடி இருந்தன. படகு உரிமையாளர்கள் தமது மனைவி மற்றும் குடும்பத்தினரையும் படகில் ஏற்றிக் 'கலர்' காட்டிக் கொண்டிருந்தனர். நீரில் நீச்சலடிப்பவர்கள் கரையில் நிற்பவர்கள் தங்களையே பார்க்கின்றனர் என்ற நினைப்பில் தாமறிந்த நீச்சல் நுட்பங்களை வெளிப்படுத்திய வண்ணம் மிதந்தனர்.**

வானம் கூடக் குடை பிடிக்கின்றதோ என நினைத்துக் கொண்டேன். வெயிலும் இல்லை, மழையும் இல்லை, வான் கறுத்திருந்தது. கரு வண்ணக் கண்ணனின் நிறத்தைத் தனதாக்கியிருந்தது. சூழவுள்ள பிரதேசங்கள் பலவற்றில் பெருமழை பெய்திருந்தும் கற்கோவளம் துறையில் மட்டும் மழை பெய்ய வில்லை எல்லாம் மாயவனின் திருவருள்.

பிற்பகல் 5 மணிக்கு அஸ்திர தேவரும் ஆஞ்சநேயரும் கடலாடினார். இந்நேரத்தில் வந்திருந்த அடியவர்கள் பலரும் நீராடிப் பிணி போக்கினர். வந்திருந்தவர்கள் கால்நனைக்க வேனும் தவறவில்லை. புரட்டாதி மாதப் பௌர்ணமி நாளில் இடம்பெறும் இந்நீராட்டம் சந்திரனுடைய எழுகையுடன் நிறைவு கண்டது. இரவு ஏழு மணியளவில் மீண்டும் அதே கோஷம். "அடடா - இராவணா, விடடா- சீதையை," இப்போது கடல் வண்ணன் வல்லிபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.



**நீர்வைக்கிழார், ச. லலீசன்**
(கோப்பாய் சர்வகலாசாலை விரிவுரையாளர்)

# பயணங்கள் முடிவதில்லை

ஒரு பிஸ்கட் விளம்பரம் ('விசுக்கோத்து' என்று சொன்னால் தவறாய் நினைக்க மாட்டீர்களா?) Munche Super craker பிஸ்கட். அவ் விளம்பரத்தில் பிஸ்கட்டின் சுவை பற்றிக் கூறப்பட்ட தொடர், "உண்ணதமான சுவை" ணகரம் தேவையற்று வந்து னகரத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. "உன்னதமான சுவை" என்று அமைய வேண்டிய தொடர் அது. அந்த விளம்பரத்தை நான் பலவிடங்களில் பார்த்திருக்கிறேன்.

சில்லென்ற காற்று கன்னங்களை வருடக் கண்கள் அந்தச் சுகத்தினை முழுமையாக ஏற்றுக் கொள்ளவென்று இலேசாய் மூடிக் கொண்டன. எங்கே? முழுமையாக அந்தச் சுகத்தை அனுபவிக்க முடிந்தால் தானே? மொழிச் சிந்தனை வந்து முன்னே நின்று இடை மறித்தது.

மொழி என்பது, இயற்கையின் அதிசயங்களில் ஒன்று. "மொழியின் காரணமாகவே மனிதன் மனிதனாக இருக்கிறான்" என்றார் வில்ஹெல்ம் வான் ஹம்போல்ட் என்ற அறிஞர். "மொழி என்பது ஆன்மாவின் இரத்தம். அதில் அவை இயங்குகின்றன. அவற்றிலிருந்தே அவை வளர்கின்றன" என்றார் ஓ.டபிள்யூ. ஹோம்ஸ் என்ற அறிஞர். (Language is blood of the soul, into which our thoughts run and out of which they grow – o.w Homes)


> **விழித்திருக்கும் போது மொழி, மனிதனுக்கு உதவுகிறது. அவன் உறங்கும் போதும் அவனை அது ஆள்கின்றது. அவன் காணும் கனவில், அவன் தன் மொழியில் பேசுகிறான். ஒருவன் பல மொழிகளில் புலமை பெற்றிருந்தாலும் கனவில் தன் தாய்மொழியில் பேசுகின்றான். தாய்மொழியில் உள்ள சொற்கள் உணர்வைச் சுமந்து கொண்டு வெளிப்படுகின்றன. 'அம்மா' என்று சொல்லும் போது ஏற்படும் மனமகிழ்ச்சியும், உளநெகிழ்ச்சியும் அதே பொருள் கொண்ட வேற்று மொழிச் சொல்லைச் (மம்மி) சொல்லும் போது ஏற்படுவ தில்லை.**

விழித்திருக்கும் போது மொழி, மனிதனுக்கு உதவுகிறது. அவன் உறங்கும் போதும் அவனை அது ஆள்கின்றது. அவன் காணும் கனவில், அவன் தன் மொழியில் பேசுகிறான். ஒருவன் பல மொழிகளில் புலமை பெற்றிருந்தாலும் கனவில் தன் தாய்மொழியில் பேசுகின்றான். தாய்மொழியில் உள்ள சொற்கள் உணர்வைச் சுமந்து கொண்டு வெளிப்படுகின்றன. 'அம்மா' என்று சொல்லும் போது ஏற்படும் மனமகிழ்ச்சியும், உளநெகிழ்ச்சியும் அதே பொருள் கொண்ட வேற்று மொழிச் சொல்லைச் (மம்மி) சொல்லும் போது ஏற்படுவதில்லை.

தொட்டில் முதல் சுடுகாடு வரை மனிதனோடு வாழும் தாய்மொழியின் தரம் வீழ்ச்சியடையும் வகையில் மனித செயற்பாடுகள் அமைவது சரியானதுதானா? சிந்தனைப் பாரத்தால் இமைகள் விழிகளை அழுத்தும் வலி தாங்காது கண் விழித்தேன். விழித்த விழிகள் சந்தித்த இடம் ஒரு புத்தகசாலை. புத்தகசாலை வாசலில் பல படங்கள் மாட்டப்பட்டிருந்தன பல செய்திகளோடு. அதில் ஒன்று. உலகின் பெரும் கண்டுபிடிப்புகள், அவற்றைக் கண்டு பிடித்தவர்களின் புகைப்படங்கள், பெயர்கள். படத்தில் தலைப்பிடப்பட்டிருந்தது. "உலகின் மாபெரும் கண்டுப்பிடிப்புகளும் கண்டுபிடித்தவர்களும்" 'கண்டுப் பிடிப்பு' என்ற சொல்லில் "ப்" வல்லொற்று எதற்காக,

'கண்டு பிடிப்பு' என்பது தானே சரியான வடிவம். இந்த வல்லொற்றுக்கள் ஏன் வீணே வந்து வம்பிழுக்கின்றன? 'சொல்வாக்கைப் காப்பாற்றி' இது 26.09.2011 'ஒரு' பத்திரிகைச் செய்தி. அதே நாள், அதே பத்திரிகை. 'வழமைக்கு மாறாத புறப்பட்டது'. "மாறாத" என்பது மாறாக என்று வரவேண்டும். இன்னொரு செய்தி 'பின்னணிப் பாடகர் டி.எம் சௌந்தரராஜன் கடந்த சில நாள்களாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த சௌந்தரராஜனுக்கு ....." இங்கு பெயர் மீண்டும் வர வேண்டிய தேவை இல்லை. அல்லது முதலில் வந்திருக்கக் கூடாது. இவை பார்வைக்குச் சாதாரண மானவையாகத் தோன்றலாம். இதைப் போய் எழுதுகிறேனே என்று கூட நீங்கள் கேலி பண்ணலாம். ஆனால், மொழியைப் பொறுத்தவரை வாக்கிய இயைபு என்பது இன்றியமையாத ஒன்று. இன்றைய மாணவர் மத்தியில் வாக்கிய இயைபுடன் எழுதும் தன்மை அருகி வருகின்றது. இவ்வாறிருக்க ஊடகங்களும் இவ்வாறிருந்தால் மொழியின் நிலைதான் என்ன?

20.10.2011 'ஒரு யாழ்ப்பாணப்' பத்திரிகையின் முன் பக்கச் செய்தி 'நாட்டில் துப்பாக்கி காலாச்சாரம்...' 'கலாசாரம்' என்ற சொல் 'காலாச்சாரம் என எழுதப் பட்டிருப்பதைப் பார்க்கும் போது பெரும் வேதனையாக இருக்கின்றது. அதைத் தொடர்ந்து, மற்றுமொரு செய்தி 'காங்கிரஸ் தோல்வி எழுதபட்ட முடிவு' தேவையற்ற இடத்தில் வந்தமரும் பகர வல்லொற்று தேவையான இடத்தில் ஏன் ஒழிந்து கொள்ள வேண்டும்? எழுதப்பட்ட அன்றைய முடிவு என்று வரவேண்டும் செய்தி. 'கட்டுரை யாவும் சொந்த ஆக்கங்கள் என்பதை பாடசாலை அதிபர்களால் உறுதி செய்யப்பட்டு' இவ்வாக்கியத்தில் ஒருமை, பன்மையில் வாக்கிய இயைபின்றித் தவறு உள்ளது. 'கட்டுரை ஒவ்வொன்றும் என்று அமைய வேண்டும். அவ்வாறு அமையின், ஆக்கங்கள் என்பதும் ஆக்கம் என்றே அமையும். 'சொந்த ஆக்கங்கள் என்பதை பாடசாலை அதிபர்களால் உறுதி செய்யப்பட்டு...' இத்தொடர் எவ்வாறு அமைய வேண்டும்? 'சொந்த ஆக்கங்கள் என்பது பாடசாலை அதிபர்களால் உறுதி செய்யப்பட்டு...' என்று அமையலாம். அல்லது




'சொந்த ஆக்கங்கள் என்பதைப் பாடசாலை அதிபர்கள் உறுதி செய்து என்றும் அமையலாம். இத்தகைய தவறுகள் திருத்தப்பட வேண்டியது சமூக நன்மைக்கு அவசியமாகின்றது. இங்கே குறிப்பிட வேண்டியதொரு செய்தி உளது. கவிஞர் பா.விஜய் அவர்களின் "ஒவ்வொரு பூக்களுமே" என்ற பாடலில் இலக்கணத் தவறு உள்ளது. "ஒவ்வொரு பூவுமே" என்று வரவேண்டும். அல்லது "எல்லாப் பூக்களுமே" என்று அமைய வேண்டும். ஓசைக்காக வேண்டி இவ்வாறு அமைக்கப்பட்டது. இந்தக் கருத்தை விஜய் அவர்கள் தாம் இயக்கி நடித்த 'ஞாபகங்கள்' என்ற திரைப்படத்தில் கவிஞராக வந்து கூறுகின்றார். "இலக்கணத்தில் எண்வழுவிற்கு எண்வழுவமைதி, இடவழுவிற்கு இடவழுவமைதி, பால்வழுவமைதி என்பவை போல, இசைக்காக அமைக்கப்பட்டது. இசை வழுவமைதியாக எடுக்கலாம்" என்று. இக்கருத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது வேறு விடயம். ஆயின், 'ஒவ்வொரு பூக்களுமே' என்பதில் இலக்கணத்தவறு உள்ளது என்பதை அவர் ஏற்றுக் கூறிய விதம் பாராட்டுதற்குரியது.

'தம்பி ...தம்பி... இறங்கிற இடம் வந்திட்டுது மோன. உந்தக் கயிறு எட்டாதாம். ஒருக்கா மணிய அடிச்சுவிடு மோன' தாத்தாவின் பொக்கை வாய்த் தமிழ் என்னை மீண்டும் பேரூந்துச் சூழலுக்குள் அழைத்து வந்தது.

சிந்தனையை வேறெங்கும் சிதறவிடாமல் ஓய்வு கொடுக்க வேண்டி, ஏதாவது புத்தகம் வாசிக்கலாம் என்று எனது கைப்பையைத் திறந்தேன். எங்கு சென்றாலும், என்னுடன் ஏதாவது ஒரு புத்தகத்தையும் கொண்டு செல்வது என் வழக்கம். இத்தகைய தேடல் என்பது என் அப்பாவிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட பல நல்ல விடயங்களில் ஒன்று. சரி இந்த எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழைகள் பற்றிய எண்ணத்தைச் சற்றே தூர நிறுத்தி விட்டு புத்தகத்தை எடுத்துப் பக்கத்தைப் புரட்டத் தொடங்கினேன். அது வடமாகணத் தமிழ் மொழித் தினச் சிறப்பு மலராய் வெளிவந்த "கவின் தமிழ் 2011" என்ற நூல். அதில் பக்கம் iv இல் தமிழ்த் தாய் வாழ்த்து இடம் பெற்றிருந்தது. மனோன்மணீயம் பெ.சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்டது. தெரிந்த பாடல் தான் என்றாலும் தமிழ்த் தாயை வணங்கும் ஆர்வத்தில் ஆசையாய் அதை வாசிக்கத் தொடங்கினேன். ஆ....! எந்தச் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்து புத்தகத்துள் மூழ்க முயற்சித்தேனோ, அந்தப் புத்தகத்திலேயே எழுத்துப் பிழை அதுவும் தமிழ் மொழித் தினச் சிறப்பு மலரில், தமிழ்த் தாய் வாழ்த்தில் எழுத்துப் பிழை. மேற்கொண்டு வாசிப்பது சிரமமாக இருந்தது. அந்தத் தவறு..........

(பயணங்கள் தொடரும்)

**கைதடியூர் பாரதி**

# சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு



## கட்டுரைத் தொடர் - 5

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*

### திரு. பொ. கைலாசபதி (1902 - 1961)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கலையும் சைவமும், தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமங்களில் ஒன்றாகிய அளவெட்டிப் பதியில் கி.பி 1902 இல் வீரகத்தி பொன்னம்பலம் பார்ப்பதி தம்பதிகளின் புத்திரராய் (09.06.1902) இல் கைலாசபதி என்ற நாமத்தைச் சூட்டினர். இளமையில் செல்லமாகச் செல்லப்பா எனவும் இவர் அழைக்கப்பட்டார்.

கைலாசபதி அவர்கள் பிறந்த வீட்டுக்கு அருகில் வேதாரணியச் சைவக்குருமார் வசிக்கும் மடம் என்று இருந்தது. அம்மடத்தில் வசித்து வந்தவர்கள் பிரசித்தி பெற்ற தேவாரக் கணபதிக்குருக்கள் பரம் பரையில் வந்தவர்கள். எப் பொழுதும் இம்மடம் பண் மயமாகவே இருக்கும். இவர் சிறு வயதில் வேதாரணியக் குருக்கள்மாரின் மடத்திற்கு அடிக்கடி சென்று வந்ததால் பண்ணிசையில் ஈடுபாடு இவருக்கு ஏற்பட்டது. தேவாரப் பண்ணின் சிறப்பினைப் பற்றித் "தச நாடிகளையும் சுத்தம் செய்து நாட்டங்களைப் பண் படுத்துவது பண்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த பண்டித மணியை ஆத்மீக சிந்தனைக்குத் திருப்பி விட்ட பெருமை பொ. கைலாசபதி அவர்களையே சாரும். பண்டிதமணி கைலாசபதி அவர்களைத் தெய்வப் பிறவி, மனித தெய்வம், மகாத்மா, மகான், நெற்றிக் கண்ணர் எனப் பல பெயர்களால் குறிப்பிட் டுள்ளார். மௌன தவமுனி எனக் கைலாசபதி அவர்களைப் பண்டிதமணி போற்றி வணங்குகின்றார். கைலாசபதியின் சந்நிதி தன் சிந்தனைக்கு ஊற்றாயிருந்தது எனக் கூறுகின்றார்.**

இவர் தனது இளமைக் கல்வியை அளவெட்டியில் அமைந்த அமெரிக்க மிஷன் பாடசாலை, ஞானோதய வித்தியசாலை, அருணோதயாக் கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்தார். ஆங்கிலக் கல்வியை மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் கற்றார். அங்கு கணித மேதையும் சிவஞானசித்தியாரில் துறை போன அறிஞரும் ஆகிய இரத்தினசபாபதி இவருக்கு ஆசிரியராகப் பணியாற்றினார். பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற இன்ரமீடியற் விஞ்ஞான வகுப்பில் கல்வி கற்று 1924இல் அப் பரீட்சையில் தேறினார். 1927இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். தூய கணிதம், பிரயோக கணிதம், அளவையியல் ஆகியவற்றைப் பாடமாக எடுத்து 1930இல் இலண்டன் விஞ்ஞான மாணிப்பரீட்சையில் சித்தியடைந்தார். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராக (1930 – 1957) வரை பணியாற்றினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நாவலர் வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி அவர்களைத் திருநெல்வேலி ஈரப்பலாத் தோட்டத்தில் சந்தித்தார். திருநெல்வேலி சிவன் கோயிலுக்குத் தெற்கே உள்ள ஈரப்பலாத் தோட்டம் அறிஞர்கள் சங்கமிக்கும் இடமாக அக் காலத்தில் இருந்தது. பண்டிதமணி 1929இல் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரை யாளராக நியமனம் பெற்றார். இருவரும் ஒரே இல்லத்தில் வாழ்ந்தனர். அக்காலத்தில் உபஅதிபர் நிறைய நூல்களைப் படிப்பார். தான் படித்த நூல்களின் உயிரான பகுதியைப் பண்டிதமணிக்கு எடுத்துக் கூறுவார்.

இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த பண்டிதமணியை ஆத்மீக சிந்தனைக்குத் திருப்பி விட்ட பெருமை பொ. கைலாச பதி அவர்களையே சாரும். பண்டிதமணி கைலாசபதி அவர்களைத் தெய்வப் பிறவி, மனித தெய்வம், மகாத்மா, மகான், நெற்றிக் கண்ணர் எனப் பல பெயர்களால் குறிப்பிட் டுள்ளார். மௌன தவமுனி எனக் கைலாசபதி அவர்களைப் பண்டிதமணி போற்றி வணங்குகின்றார். கைலாசபதியின் சந்நிதி தன் சிந்தனைக்கு ஊற்றாயிருந்தது எனக் கூறுகின்றார். ஆன்மீகச் செல்வரான பொ.கைலாசபதியிடம் தான் பெற்ற ஞான விளக்கத்தின் சிறப்பினைப் பற்றித் தனது நூலாகிய சிந்தனைக் களஞ்சியத்தில் பண்டிதமணி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு நாள் (15.10.1940) இல் மிக்க அச்சத்துடன் பேனையும் கையுமாய்க் குறிப்புப் புத்தகத்துடன் அந்த மகானை அணுகினேன். பாஷையிரண்டு என்று தொடங்கி ஆரியமும் தமிழும் என்ற பாடம் அன்று நடந்தது. அவர் எனக்கு நடாத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா. உபஅதிபர் ஆயிரம் என்று ஒருவாறு புத்தகம் தொகுக்கலாம் போலும்"

தமது சிந்தனைகளில் உதித்தவற்றைக் கேட்போரின் தகுதி கருதியே கூறுவார்.

"விந்துவை வீணாக்கக் கூடாது. அது கருக் கொள்ளக் கூடிய இடத்தில் தான் விட வேணும். சொல் விந்தின் அம்சமானது. அதை வீண் செய்யக் கூடாது. பயன் செய்யக் கூடிய இடத்தில் தான் சொல்ல வேண்டும். முத்துக்களை வீணே சிந்தலாமா?"

பண்டிதமணி, பரநிருபசிங்கம் போன்ற நெருக்க மானவர்களுக்கு இவ்வாறு கைலாசபதி கூறியுள்ளார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பொ. கைலாசபதி அவர்கள்பாற் கேட்டு எழுதிப் பொக்கிஷம் போல் காத்த 700 பக்கப் பிரதியைப் பாற் சமுத்திரத்தைக் கடைந்தது போல ஆராய்ந்து "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற ஆய்வு நூலினைப் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் வெளியிட்டார். இந்நூலின் முடிவுரையில் வித்துவான் கந்தையா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கைலாசபதி ஸ்மிருதி ஈழமென்ன, தென்னக மென்ன பாரதமே நாளிது வரையிற் காணாத பாரிய சிந்தனைக் கருவூலமாகக் காணப்படுகின்றது என்பதை அதனை ஆழ்ந்து கற்ற எவரும் மறுத்தற்கிலர். சமய கலாசார நோக்கை அகில பாரதக் கண்ணோட்டத்தில் புலப்படுத்தியிருப்பது இதன் சிறப்பெனலாம். சைவ வேதாந்த சித்தாந்தப் பொருளம்சங்கள் கைலாசபதி சிந்தனைகள் என்னும் தொகுப்பு நூல் முழுவதிலும் விரவிக் காணப்படுகின்றன."

திரு. பொ. கைலாசபதி அவர்கள் உரை ஆசிரியர்களின் வலைகளிற் சிக்காமல் தனித்து நின்று சிந்தித்துப் பிரம்ம சூத்திரம், தொல்காப்பியம், திருக் குறள், திருக்கோவையார், திருமந்திரம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சங்க இலக்கியங்கள் ஆகிய நூல்களின் நுண் பொருள்களை அறியக் கூடியவராய் இருந்தமையே அவரிடமிருந்த தனித்துவமான சிறப்பு அம்சமாகும்.

தமது பேச்சு, மூச்சு, வாழ்வு அனைத்திலும் தீர்க்க தரிசியாக விளங்கிய கைலாசபதி அவர்கள் இந்துப்பண்பாட்டின் பல்வேறு துறைகளையும் வளம் படுத்துவதற்கு வழி கோலினார். சமகாலக் கல்விமான்கள் மத்தியில் நடமாடும் கலைக்களஞ்சியமாக மிளிர்ந்தார்.

## சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் (1886 - 1971)

வேதாகமம், பன்னிரு திருமுறை மெய்கண்ட சாஸ்திரம் முதலாம் சைவ சித்தாந்த நூல்களுக்கு விளக்கமும் உரையும் தந்தவர்களில் அச்சுவேலியைச் சேர்ந்த குமாரசுவாமிக் குருக்கள் சிறப்பிடம் பெறுகிறார். அச்சுவேலியில் ஆதி சைவ அந்தண குலத்தில் சபாபதிக் குருக்கள் தங்கம்மா அம்மையார் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வராக (16.11.1886)இல் அவதரித்தார். நீர்வேலி சிவசங்கர பண்டிதரிடமும் மகன் சிவப்பிரகாச பண்டிதரிடமும் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கற்றறிந்தார். ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையிடமும் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடமும் தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் கற்றுக் கொண்டார். புலோலி ம. குமாரசுவாமிக் குருக்களிடம் சைவாகமங்களைக் கற்றுக் கொண்டார்.

குருக்கள் அவர்கள் வடமொழியையும் தமிழையும் முறையாக நன்கு பயின்றவர். இவர் சைவ சமய உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் சைவப்பிரகாசிகை என்ற ஐந்து தொடர் நூல்களை வெளியிட்டுள்ளார். சைவ சமயத்தின் முதல் நூல்களாகிய வேதங்கள், சிவாகமங்கள் என்பவற்றை நன்கு ஆராய்ந்து வேதாகம நிருபணம் என்னும் நூலினை வெளியிட்டார். சைவ சித்தாந்த தத்துவம் கூறும் முப் பொருள் கோட்பாடாகிய பதி, பசு, பாச உண்மைகளை நன்கு ஆராய்ந்து முப்பொருள் விளக்கம் என்ற நூலினையும் தந்துள்ளார். சிவாகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திர நூல்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு முப்பொருள் உண்மைகளை விளக்கியுள்ளார். ஆலயங்களிலே நடைபெறுகின்ற மகோற்சவக் கிரியை களுக்கும் சைவ சித்தாந்த தத்துவத்திற்கும் உண்மைத் தொடர்பினை ஆராய்ந்து மகோற்சவ விளக்கம் என்ற சிறந்த நூலினை எழுதியுள்ளார். சைவர்கள் செய்ய வேண்டிய ஆத்மார்த்த பூசையாகிய சிவபூசையின் சிறப்பினைப் பற்றிச் சிவபூசாவிதி என்ற நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். தனது குருவாகிய சங்கர பண்டிதரின் வரலாற்றினைச் சங்கர பண்டிதர் சரித்திரம் என்ற நூலாக எழுதி வெளியிட்டார். இவ்வாறு தமிழ்மொழியில் பதினெட்டு நூல்களை எழுதி வெளியிட்ட குருக்கள் அவர்கள் வடமொழியிலும் சிவப் பிரதிஷ்டா விதி. சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார்.

இவர் சிவானந்த குருகுலம், வேதாகம சைவ சித்தாந்தசபை, சைவபரிபாலனசபை ஆகியவற்றுடன் இணைந்து சிவப்பணிகள் பல ஆற்றியுள்ளார். இவரிட மிருந்த சிறப்பாற்றல்களை எல்லாம் விளக்கி வித்துவ சிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையா அவர்கள் பாடிய பின்வரும் பாடல் குமாரசுவாமி ஐயரின் தகைமைகளை வெளிப்படுத்திக் காட்டும் பாடலாக அமைந்துள்ளது.

விளம்புமவன் யாவனெனில் வேதமுடனாகமங்கள்
மிகவும் கற்றோன்
வளம் பெறுநற் புராணங்கள் பலவுமுணரறிவுரை யோன்
மதியின் மிக்கோன்.
விளங்குறுமென் சிவஞானபோத முதல் ஞான நூல்
விரும்பி யாய்ந்தோன்
உளங்கொளமுப் பொருள் விளக்க முதலாய
பலநூல்கட் கொளிரு மாக்கியோன்.

## இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899 - 1986)

மட்டுவில் சின்னத்தம்பி தனங்கிளப்பு வள்ளி யம்மை தம்பதிகளின் மகனாக 27.06.1899இல் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தோன்றினார். மட்டுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பத்தொன்பது வயதில் நாவலர் காவிய பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்தார். காவிய பாடசாலையின் அதிபராகச் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் பணியாற்றினார். மட்டக்களப்பைச்

சேர்ந்த புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை காவிய பாடசாலையில் இவருடன் உடன் மாணாக்கராயிருந்தார். 1926இல் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி விசேட சித்தியினைப் பெற்றார். நாவலர் காவிய பாடசாலையின் மனேஜராக இருந்த திரு. த. கைலாச பிள்ளை இவர் பண்டிதர் பரீட்சையில் விசேட சித்தியினைப் பெற்றதைப் பாராட்டித் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றார். 1929ஆம் ஆண்டில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ்த் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். மயிலிட்டி சி. சுவாமி நாதன் கலாசாலையின் அதிபராகத் திகழ்ந்தார். உப அதிபராக மௌன தவமுனி கைலாசபதி அவர்கள் பணியாற்றினார். இம் மூவரும் மும்மணிகள் எனப் பாராட்டப்பட்டார்கள். 1937இல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை வளாகத்தில் இயங்கிய காவிய பாடசாலையின் தமிழ்த்துறைக்குப் பொறுப்பாக இருந்தார். தினகரன் பத்திரிகையில் நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதினார். பண்டிதமணி என்ற நாமத்தை முதல் முதலாக உபயோகித்த பெருமை தின கரனையே சாரும். தினகரன் உபயோகித்த பண்டிதமணி என்ற சொல் உலகளாவிய முறையில் நிலைத்து விட்டது.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் (1929 – 1959) காலப்பகுதியில் விரிவுரையாளராகப் பணியாற்றித் தலைசிறந்த சைவத்தமிழ் ஆசிரியர்களை உருவாக்கினார். சமயக்கட்டுரைகள், சைவ நற் சிந்தனைகள், கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, கோயில், அத்வைத சிந்தனை, நாவலர் பெருமான் முதலிய 27 நூல்களையும் 1000க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிச் சைவத்தமிழ் உலகிற்கு அளப்பெரும் பணியாற்றினார். இவர் எழுதிய நூல்களிலே மகாமேரு மலைபோல உயர்ந்திருப்பது கந்தபுராணம் தட்சகாண்டத்திற்கு இவர் எழுதிய உரை நூலாகும். இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப்பெற்றது. உரைநூலின் பிரதி யானை மீது ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

1978ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

மட்டுவிலில் பிறந்து நாவலர் காவிய பாடசாலையில் பயின்று, திருநெல்வேலியிற் கல்வி மழை பொழிந்து, தமது ஆச்சிரமத்திற் சைவசமயம் வளர்த்து வாழ்ந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் பெருமான் இட்ட விதையின் ஒரு பெருவிருட்ச மாகவே இருந்தார். இவர் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும், சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சிக்கும் அரும்பணிகள் பல புரிந்து உள்ளார். சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் கருவூலமாக அமைந்துள்ள கந்தபுராணத்தின் தட்ச காண்டத்திற்கு இவர் எழுதிய உரை மிகச் சிறந்த ஆய்வு நூலாகத் தமிழ்நாட்டு அறிஞர்களாலும் பாராட்டப்பட்டது.

**"இந்தக் கந்தபுராண கலாசாரம் தான் நம்மிடையே அந்நிய கலாசாரங்கள், மிலேச்ச கலாசாரங்கள் புகுந்து கொள்ளாமல் தடுத்தது. தமிழ் மக்களை மனிதர்களாக வாழ வைத்து கந்தபுராண கலாசாரம் நம்மால் கைவிடத் தொடங்கிய ஒன்று. நம் வாழ்வில் கலி புகுந்து விட்டது. இன்னல்களும் இழப்புக்களும் தொடர்கின்றன. இது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலம் இது"**

கந்தபுராண கலாசாரமே யாழ்ப்பாண மக்களின் கலாசாரமாக மிளிர்ந்தது. ஆனால் இக் கலாசாரப் பண்பினை நம்மவர்கள் கைவிடத் தொடங்கியதால் கலி (துன்பம்) நம்மிடம் புகுந்தவிட்டது. துன்பமும் துயரமும் தொடர் கதையாக நம்மை வாட்டுகின்றன. கந்த புராணத்தைப் பேணுவதே இதிலிருந்து மீள்வதற்கான ஒரேவழி எனக் கந்தபுராண கலாசாரம் என்ற நூலில் பண்டிதமணி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தக் கந்தபுராண கலாசாரம் தான் நம்மிடையே அந்நிய கலாசாரங்கள், மிலேச்ச கலாசாரங்கள் புகுந்து கொள்ளாமல் தடுத்தது; தமிழ் மக்களை மனிதர்களாக வாழ வைத்தது. கந்தபுராண கலாசாரம் நம்மால் கைவிடத் தொடங்கிய ஒன்று. நம் வாழ்வில் கலி புகுந்து விட்டது. இன்னல்களும் இழப்புக்களும் தொடர்கின்றன. இது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலம் இது"

## சிந்தனைச் சுடர்

- **துணிச்சலான கருத்துக்கள் முன்னேறிச் செல்லும் சதுரங்கச் சிப்பாய்களைப் போன்றவை. அவை தோற்கடிக்கப்படலாம் – ஆனால் அவைதாம் வெற்றி பெறும் ஆட்டத்தைத் தொடங்கி வைப்பது.**
- **பணம் சம்பாதிக்கிற உபாயமாய் தன்னுடைய பணியைக் கருதுகிறவன் அதன் மதிப்பைக் குறைத்துவிடுகிறான். ஆனால், மனித குலத்துக்கான சேவையாய் அதனைக் கருதுகிறவன் தன்னையும், தனது பணியையும் உயர்வுபடுத்தியவனாவான்.**
- **ஆயத்தப்படுதற்கான மனத்திட்பம் இல்லாவிடில் வெற்றிக்கான ஆசை அர்த்தமற்றதுதான்.**
- **தேடிய அறிவை வளர்த்துக்கொள்ளாமல், செயற்படுத்தாமல் விட்டவன், தான் உழுத நிலத்தில் விதைக்காமல் உதறியவனைப் போலாவான்.**
- **வெற்றிகொள்ள விரும்புகிறவர்கள் பெற்றிருக்க வேண்டிய பண்பு – நோக்கத்தில் உறுதி, தான் விரும்புகிற ஒன்று பற்றிய அறிவு, அதை முயன்று அடைதற்கான தணியாத வேட்கை.**
- **அடுத்தவர் குறைபாடுகளை அளவின்றிப் பேசுவதன் மூலம் யாரும் மகிழ்ச்சியடைவதற்கில்லை. ஆனால், தவறான வழியில் செல்கிறவரிடம் சரியான வழியில்தான் செல்கிறாய் என்று சொல்வதன் மூலம் ஒருவனைத் தோல்வியுறச் செய்ய முடியும். அந்த அனுகூலமற்ற பணியில் அவர் குரூர மகிழ்ச்சி காணக் கூடும்.**

# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

## 3. முப்பொருள் விளக்கிய காதை

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேர் பாடசாலையில் தமிழ் தான் படிப்பிக்கிறவர். எண்டாலும் அதிபர் எதைச் சொன்னாலும் கோபத்தோடை காலாலை நிலத்திலை விறாண்டாமை, மாணவருக்கு வெளுத்து வாங்காமை, ஹீ ஹீ எண்டு சிரிச்சுப் போட்டு ஏற்றுக் கொள்வார். இதனால் அதிபர் மேலதிகமாகவும் சில பாடங்களை எடுக்கும் படி கேட்டுக் கொள்வதுண்டு. அப்பேர்க்கொத்த பாடங்களில் விஞ்ஞானமும் சமயமும் அடக்கம்.

அவர் விஞ்ஞானத்தைத் தனது சூழலில் நடக்கிற சம்பவங்களோடை இணைச்சுப் படிக்கிறதிலை மகா விண்ணன். முதலிலை பாடத்தைப் படிப்பிப்பார் பிறகு இயற்கையோடு இணைச்சுக் கேள்வி கேட்பார்.

ஒரு நாள் நியூட்டனின் மூண்டு விதியினையும் படிப்பிச்சுக் கொண்டிருந்தார். யாரோ மீன் குழம்போடை சாப்பாடு கட்டிக் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். அந்த வாசத்தாலை கவரப்பட்ட நாயொண்டு வாசலிலை வந்து படுத்திருந்தது. ஒரு மாணவன் அவர் படிப்பிக்கிறதைக் கவனிக்காமல் கதைச்சுக் கொண்டே இருந்தான். அவனையே முதற் கேள்வி கேட்டார்.

"நாய்க்கு எத்தனை கால்?"

"நாலு சேர்"

"அப்ப ஏன் உனக்கு இரண்டு கால்?"

பெடியன் முளிசத் தொடங்கினான். அவன் கவலைப்படாமல் இருக்க அவரே ஆறுதலைச் சொன்னார்.

"அது, கடவுள் நினைச்சார். இரண்டு காலோடை படைச்சார். நீ கவலைப் படாதே உனக்கு நாலு கால் இருந்திருந்தா அந்த நாய் மாதிரி நீயும் வெளியிலை தான் படுத்திருக்க வேணும். நான் படிப்பிக்கேக்கை உள்ளுக்கை வந்து கதைச்சுக் கொண்டு இருக்கேலாமப் போயிருக்கும் சரியே?"

அது, கடவுள் நினைச்சார். இரண்டு காலோடை படைச்சார். நீ கவலைப் படாதே உனக்கு நாலு கால் இருந்திருந்தா அந்த நாய் மாதிரி நீயும் வெளியிலை தான் படுத்திருக்க வேணும். நான் படிப்பிக்கேக்கை உள்ளுக்கை வந்து கதைச்சுக் கொண்டு இருக்கேலாமப் போயிருக்கும் சரியே?"


"சொறி சேர். தெரியாமைக் கதைச்சுப் போட்டேன்."

"சரி இந்தக் கேள்விக்காவது பதிலைச் சொல்லு? அந்த நாயைப் பார். அது அப்போதை தொடக்கம் வாசலிலை படுத்திருக்கு. அதை ஆரும் கலைக்கும் மட்டும் அது அந்த இடத்தை விட்டு அசையாது. இது நியூட்டனின் எத்தனையாம் விதியைக் குறிக்கிறது?"

"1ஆம் விதி சேர்"

"சரி கெட்டிக்காரன். அந்த விதியைச் சொல்லு பார்ப்போம்"

"அசைஞ்சு கொண்டிருக்கிற பொருள் புறக் காரணிகள் எதுவும் தாக்காதவரை தொடர்ந்து அசைஞ்சு கொண்டிருக்கும். ஓய்விலை இருக்கிற பொருளும் அப்படியே ஓய்விலை இருக்கும்."



"சரி இரு மற்ற ஆள் எழும்பு பார்ப்பம். அந்த நாயைப் போய் நீ கடிக்கிறாய். உடனை அது திருப்பி உன்னைக் கடிக்கிறது. இது நியூட்டனின் எத்தனையாம் விதியைக் குறிக்கிறது?"

"3ஆம் விதி சேர்",

"எங்கை விதியைச் சொல்லு பார்ப்போம்

"எந்த ஒரு தாக்கத்துக்கும் சமமும் எதிருமான மறுதாக்கம் உண்டு"

விஞ்ஞானக் கற்பித்தல் சரி. ஆனால் மெய்ஞ் ஞானத்தில் நாட்ட மில்லாத பனையோலை ராமன் சேரின் சமயக் கற்பித்தல் காரணமாகச் சில சமயங்களில் மாணவனிடம் இருந்த அற்ப சொற்ப சமய நம்பிக்கையும் இல்லாமற் போய்விடும் என்பது சக ஆசிரியர்களின் புறுபுறுப்பு ஆகும். அவர் அந்தப் பாடசாலையில் எந்தச் சமயத்திலும் சமயம் கற்பிக்கக் கூடாதெனத் தடை விதிக்கப் பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை ஒன்றும் உண்டு. எண்டாலும் அவர் படிப்பித்த காலங்களில் விட்ட பல பகிடிகள் மறக்க முடியாதவை. அவற்றிலே சஞ்சிகையில் வெளியிடக் கூடிய பகிடிகள் இரண்டை மாத்திரம் தருகிறேன்.

ஒருநாள் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கண்ணப்பநாயனாரின் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார். தாய் பெயர் தத்தை, தகப்பன் நாகன். அவர் பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரிலே பிறந்தார். அவர் பிறந்த உடனை தகப்பன் அவரைத் தூக்கிப் பாக்கேக்கை திண்மையா இருந்தபடியால் திண்ணனார் எண்டு பெயர் வைச்சினம்.....

பனையோலை ராமன் சேர் பக்தியோடை கதை சொல்லிக் கொண்டு போறார். பேந்தேன் நீர் சமயம் படிப்பிக்கிறது. பிழையெண்டு பொய் சொல்லுறீர்? எண்டு நீங்கள் கேட்கிறது விளங்குது. கதையை இந்த இடத்திலை நிப்பாட்டிப் போட்டு ஒரு பொம்பிளைப் பிள்ளையை எழுப்பி ஒரு கேள்வி கேட்டார். சொல்லக்



கூடாது தான் ஆனா என்ரை கருத்தைச் சரியெண்டு நிருபிக்கச் சொல்லித் தான் ஆகவேணும்.

"பிள்ளை கண்ணப்ப நாயனாருக்குத் தகப்பன் திண்ணனார் எண்டு ஏன் பெயர் வைச்சார்?"

"அவர் பிறந்த போது தூக்கிப் பார்க்கப் பாரமா இருந்த படியால்...."

"சரியம்மா கெட்டிக்காரி என்ரை பக்கத்து வீட்டுப் பொடியனுக்குப் பேர் சீனிவாசன். அவனுக்கு அவன்ரை தகப்பன் ஏன்? அந்தப் பெயரை வச்சிருப்பார்."

அந்தப் பிள்ளை சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வெக்கப்பட்டுக் கொண்டே இருந்திட்டுதாம்.

இது மாதிரித் தான் ஒரு நாள் ஏ.எல் வகுப்புக்கு இந்து நாகரிகம் படிப்பிச்சுக் கொண்டு இருந்தாராம். முப்பொருள் விளக்கம் தான் படிப்பிச்சவர். பதி, பசு, பாசத்தின்ரை இயல்புகளைச் சொல்லிப் போட்டுப் பதி ஐந்தொழில்களையும் செய்வதைப் பற்றி விளங்கப் படுத்திக் கொண்டிருந்தார்.

ஒரு மாணவன் படிப்பிக்கிறதைக் கவனிக்காமல் வகுப்படியாலை போற பொம்பிளைப் பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்தான் இவருக்குக் கோபம் எகிறியது.

"எழும்படா பதி என்ன செய்யுமெண்டு சொன்னனான்?"

அவன் பாடத்தை கவனிக்கவே இல்லை. பொம் பிளைப்பிள்ளையின் அழகைப் பார்த்துப் பரவசமாகிப் போன அவனுக்குப் பதி என்ன செய்தாத்தான் என்ன? ஆசிரியரின் கேள்வியால் திடுக்கிட்டு முளிசத் தொடங்கினான்.

அங்குமிங்கும் திரும்பிச் சக மாணவரிடம் ஆயுத உதவியை எதிர்பார்த்தான்.

"ஒருதரும் சொல்லிக்குடுக்க கூடாது" பிரம்பை உயர்த்தியபடி கிட்ட நெருங்கி விட்டார்.

"சொல்லடா பதி என்ன செய்யும்?"

அவனுக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டது. பயத்தில் வார்த்தை தடுமாறியது.

"பதி சேர்....பதி சேர்....."

முதுகில் சுளீர் எண்டு அடி விழத் துடிச்சுப் பதைச்சுக் கொண்டு கத்தினான்.

"பசுவின்ரை பாலைக் குடிக்கும் சேர்."

**(தொடரும்)**

**"தோசை மாவு"ன்ற தலைப்பிலே கதை எழுதி வச்சிருந்தேனே. எங்கே அதைக் காணோம்?"**
**"புளிச்சுப் போகாமல் இருக்கட்டு மேன்னு நான்தான் ஃபிரிட்ஜ்"க்குள் எடுத்து வச்சிருக்கேன்."**




## படித்ததிற் பிடித்தவை

**சிரிப்பு**

சிரிப்பு அதை சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு
இப்படிப் பாடி வைத்தார் எங்கள் நகைச்சுவை மன்னன்
கலைவாணர் என் - எஸ் கிருஸ்ணன் அவர்கள்
சிரிக்க வைத்தார், சிந்திக்க வைத்தார் ஆனால்
யாரையும் அழ வைக்கவில்லை.
ஒரு நாள் அவரும் அவரின் நண்பரும் பேசிக்
கொண்டிருந்தார்களாம்.
அப்போது ஒருவர் அவலமாக ஓடி வந்து
அண்ணே ... என்று தயங்கி நின்றாராம்
அப்போது கலைவாணர் எழுந்து போய் ஒரு
நூறு ரூபா நோட்டைக் கொடுத்து
யாருக்கு சுகயீனம் என்று கேட்டாராம்.
அவர் போன பின்
அந்த நண்பர் கேட்டாராம் - அண்ணே
அவர் சொல்லாமலே உங்களுக்கு
அவர் வீட்டில் சுகயீனம் என்று எப்படித் தெரியும்
என்று கேட்டாராம் - அதற்கு கலைவாணர்
சிரித்துக் கொண்டே சொன்னாராம்.
அவருக்கு அவசர தேவை என்றால் இங்கு
ஓடி வருவார், வந்தால் தனது வீட்டில்
யாருக்காவது சுகயீனம் என்று சொல்லி
கவலைப்படுவார். ஆவர் கவலைக்கு
நூறு ரூபா கொடுத்தால்
கவலையைப் போக்கப் போய் விடுவார்
அது தான் அவர் வந்தவுடன்
அவரைச் சுணக்காமல்
நூறு ரூபாவைக் கொடுத்து விட்டேன்
அவரும் உடனே போய் விட்டார்.
நாங்கள் இடைஞ்சல் இல்லாமல்
கதைக்கலாம் அல்லவா? – என்றாராம்
மனிதனிடம் பணம் இருந்தால் மட்டும் போதாது
அதை தருமம் செய்யும் மனம் வேண்டுமே
அது கலைவாணரிடம் நிறைய இருந்தது
மையில் பல விதங்கள் - தொட்டு எழுதும் மை
நங்கையர் வைக்கும் கண் மை
இப்படிப் பல வகை மை உண் டு
கலைவாணர் சொல்லும் மை உண்டு
ஒரு சமயம் எழுத்தாளர் மகா நாட்டில் பேசும்
போது – கலைவாணர் இப்படிக் குறிப்பிட்டார்
எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை
எப்படிப் பட்ட மையைத் தொட்டு
எழுதுகிறார்கள் தெரியுமா?
சிலர் பெருமையில் தொட்டு எழுதுகிறார்கள்.
சிலர் தற்பெருமையில் தொட்டு எழுதுகிறார்கள்.
சிலர் பழமையினால் தொட்டு எழுதுகிறார்கள் ஆனால்
தொடக் கூடாத மைகள்
மடமை - கயமை - பொய்ம்மை - வேற்றுமை
நன்மை தரக் கூடிய
செம்மை - நேர்மை - புதுமை ஆகியவற்றை தொட்டு
வாசகர்களின் நெஞ்சைத்
தொடும் படியாக எழுத வேண்டும்
அவர்கள் நீக்க வேண்டிய மைகள்
வறுமை - ஏழ்மை - கல்லாமை - மடமை - அறியாமை
இந்த நோக்கத்தையே எழுத்தாளர்கள்
கடமையாகவும் உரிமையாகவும்
கொள்ள வேண்டும்.

பற்குணம்

# நாவலரின் சாமர்த்தியம்



நாவலர் பெருமான் அவர்களைப் பற்றிய செவி வழிவந்த செய்திகள் பல உண்டு. இதோ ஒன்று உதாரணத்திற்காக. ஒரு சமயம் யாழ்ப்பாணம் நீதிமன்றம் ஒன்றில் நாவலர் அவர்கள் முக்கிய சாட்சி. அக்காலத்தில் நீதிமன்ற விசாரணைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெறுவதுண்டு. எவராவது தமிழில் சாட்சியம் அளிந்தால் அதை நீதிவானிடம் மொழிபெயர்த்துக் கூற நீதிமன்றப் பேச்சு மொழி பெயர்ப்பாளர் உதவுவார். நாவலர் அவர்கள் சாட்சியம் கூற வேண்டிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நாவலரைச் சாட்சியம் கூறுமாறு அழைத்தனர். சாட்சிக் கூண்டில் ஏறிய நாவலர் அவர்களுக்கு ஆங்கிலம் நன்கு தெரியு மாதலால் அவர் தமது சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பித்தார். இது நீதிமன்ற தொலுக்க ரிப்பாளருக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு நாவலரது தோற்றமும், வீபூதிப் பூச்சுக்களும் இவரெங்கே ஆங்கிலத்தில் சாட்சியமளிக்கப் போகிறார் என்ற நினைப்பும் நாவலர் அவர்கள் தனது முக்கியத்து வத்திற்கு சவால் விடுவது போன்று செயற்படுகிறாரே என்ற கொதிப்பும்.

தொலுக்கு முதலியார் அவர்கள் நாவலர் அவர்களைப் பார்த்து, சொல்லுங்காணும் உமது சாட்சியத்தைத் தமிழில் என்றும், யான் இங்கு எதற்காக இருக்கிறேன்? எனவும் தெரிவித்தார்.

நாவலர் அவர்கள் மறு பேச்சோ வாதப்பிரதி வாதமோ இன்றித் தமது சாட்சியத்தைத் தமிழில் முன்மொழிய ஆரம்பித்தார்.

அவர் கூறிய சாட்சியம் "கனம் நீதிபதி அவர்களே, யான் கரதண்டம் மார்க்கம் சம்புகுண்டம் ஏகையில் கோக்களும் சிசுக்களும் பைங்கூழ் கொறிக்கக் கண்டனம்" என்றவாறு ஆரம்பமாயிற்று.

நாவலர் அவர்கள் கூறியது எதுவுமே தொலுக்கு முதலியாருக்குப் புரியவில்லை. அவர் தேள் கொட்டிய திருடனைப் போலத் திருதிருவென முழிக்கலானார். நாவலர் அவர்களது கூற்றின் பொருள் புரியாது திகைத்து நிற்கலானார் முதலியார். நீதவான் முதலியாரின் முகத்தைப் பார்க்க முதலியாருக்கு என்ன சொல்வ தென்றே தெரியவில்லை.

நீதவான் அவர்கள் முதலியாரைப் பார்த்து தமிழில் தானே சாட்சியம் அளிக்கிறார். பிறகென்ன உமக்குத் தயக்கம் அவரது சாட்சியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப் பதற்கு? என வினாவுகிறார்.

முதலியாருக்கு வியர்த்துக் கொட்டுகிறது. தடி எடுத்துக் கொடுத்து அடிவாங்கியவன் நிலையாகி விட்டது இப்பொழுது அவர் நிலை. முதலியார் நிலை மையை நீதவானிடம் விளக்கி நாவலர் அவர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரை ஆங்கிலத்தில் சாட்சியம் அளிக்குமாறு மிகவும் பௌவியமாக வேண்டிக் கொண்டார்.

நாவலர் பெருமான் தமிழில் ஆரம்பித்த சாட்சியத்தின் பொருள் இது தான். அதாவது கர தண்டம் (கைதடி) மார்க்கம் (வழியாக) சம்புகுண்டம் (நாவற்குழி) ஏகையில்(செல்லும் போது) கோக்களும் (பசுக்களும்) சிசுக்களும் (கன்றுகளும்) பைங்கூழ் (இளம் நெற்பயிரை) கொறிக்கக் (மேய) கண்டனம் (கண்டேன்) என்பதாகும்.

> **"கனம் நீதிபதி அவர்களே, யான் கரதண்டம் மார்க்கம் சம்புகுண்டம் ஏகையில் கோக்களும் சிசுக்களும் பைங்கூழ் கொறிக்கக் கண்டனம்"**

ஒரு விவசாயியின் நெற்பயிரை இன்னொருவருடைய பசுக்களும், கன்றுகளும் அழித்தன என்பதே நீதிமன்றின் முன்னுக்கு வந்த வழக்காகும். வழக்காளியின் முக்கிய சாட்சி நாவலர் அவர்கள். நாவலர் அவர்களின் ஆங்கிலப் புலமையைப் பற்றியோ அல்லது அவருடைய தமிழ்ப் பாண்டித்துவத்தைப் பற்றியோ எதுவும் தெரியாத தொலுக்கரிப்பாளர் அவரது சிவ வேடத்தைக் கண்டு அவரைக் குறைவாக எண்ணித்தரம் போட்டதே அவர் நீதிமன்றில் அடைந்த அவமானத்திற்கெல்லாம் காரணமாகும்.

குறிப்பு : தமிழருவி ஆசிரியர் அவர்கள் இளங்கலைஞர் மன்றத்தில் 01.10.2011ல் சந்தித்த போது நாவலர் ஐயா அவர்களைப் பற்றி உரையாட நேர்ந்தது. அவர் அதை எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

**செல்லப்பா நடராஜா**
**மூத்த ஊடகவியலாளர்**

---

கனம், ஆசிரியர் அவர்கள்,

பேரன்புடையீர் வணக்கம் வாழ்த்துக்கள்!

தங்களால் வெளியிடப்பட்டு வருகின்ற 4வது தமிழருவி வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. வாசித்தேன். மிக மிக நன்றாக இருந்தது. மாணவர் முதல் முதியோர் வரை வாசிக்கத்தூண்டும் செய்திகளையே தமிழருவி கொண்டு வருகின்றது, இல்லை தமிழருவியில் நீந்தி வருகின்றதென்றும் கூறலாம் அவற்றைப் பயன்படுத்தும் பயன்பாடுகளால் தமிழருவி தமிழ் ஒளியாகும் என்பதில் சந்தேகமில்லை. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று கட்டியம் கூறிவரும் தமிழருவி, தெவிட்டாத தேனாக மாணவப் பிஞ்சு உள்ளங்களில் கன்னித்தமிழை வளர்க்க உறுதுணையாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இத்துடன் வரும் சிறுகட்டுரைக்குத் தமிழருவி ஆதரவு தந்தால் சக்தியருளே எனலாம். தமிழருவி தொடர்ந்து எடுக்கவும் வாசிக்கவும் ஆவலுடையேன். அதற்கான ஒழுங்கு முறையும் செய்துவர எழுதுங்கள்.

அன்புடன்

மாதாஜி, குப்பிளான்

# மரணமில்லாப் பெருவாழ்வு

இப்போது இருக்கும் சூழலிலும் அன்றாட செயற்பாட்டிலும் நாங்கள் உடல் மனம், உணர்வு, சக்தி நிலையில் நொருங்கியவர்களாக கலக்கங்களோடு வாழ நினைத்து நித்தம் செத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரிய மானிடப் பிறவி எடுத்த நோக்கம் புரிந்து கொள்ளமுடியாமல் இன்பத்தை அனுபவிக்க போய் எல்லாம் துன்பமாகவே முடிகிறது. எனவே இந்த நிகழ்வுகள் விழிப்பு நிலையை மாறி எது உண்மையோ எது போரானந்தமோ அது தானாக உள்ளுணர் வாய் உணர்ந்து போக வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி ஒரு ஏக்கத்தை ஏற்படுத்தி தேடலைத் தீவிரபடுத்தி எட்ட இந்த தொடர் நோக்கியாக இமைய குரு அருளை சரண் அடைகின்றேன்.

இதில் வரும் எல்லாக் கருத்துக்கும் தன்னை உணர்ந்து எல்லை கடந்த பேரானந்தமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களின் கருத்துக்கள் இவற்றை ஆராய்வோம்.

மரணமில்லாப் பெருவாழ்வு என்றால் என்ன? அது எப்படி சாத்தியம்? எதற்காக அப்படி வாழ்ந்து வழிகாட்டி சாதாரண மனிதரும் அந்த பாதையை அடையக் கருவிகளைக் கொடுத்து கருணையாய் நடந்தார்கள் என்று பார்த்தோமானால் மரணம் என்றால் இறப்பு. இந்த இறப்பு இருக்கிற போது பிறப்பு இருக்கத் தான் செய்யும். அதாவது அன்னையின் கருவிலே குழந்தை வளரும் நிகழ்வை வேதாந்த மகரிஷி அற்புதமாக விளக்குவார்.

குழந்தை வளர்ச்சி கருவறையில் எதுவோ அதுதான் இப்பொழுது உலகம் முழுவதும் 1,2,3,4,5,6,7,8,9,10 என்ற குறிப்பில் உள்ள அடையாளங்கள்.

உருத்தரு முதற் திங்கள் கம்பமாம். கம்பமாக இருப்பதைக் கொண்டு '1' என்ற சுட்டி வைத்தார்கள்.

இரண்டாவது மாதம் தலை உருவாகிறது என்பதைக் குறிக்க மேலே ஒரு சுழி போட்டார்கள் அதுவே – 2

மூன்றாம் மாதம் கால் உண்டாகிறது என்பதைக் குறிக்க கீழ் சுழியும் போட்டார்கள் - 3

4வது மாதம் உருவாவது மூக்கு என்பதைக் காண்பிப்பதற்காக 4 என்பதற்கு மூக்கு போன்ற உருவத்தை வரைந்தார்கள். ஐந்தாவது மாதம் உருவாகும் செவியைக் காட்டுவதற்காக 5 என்று போட்டு அங்கே மேலே ஒரு கோடு கிழித்தார்கள்.

ஆறாவது மாதம் நகம் உருவாகிறது என்று நகங்களைக் காண்பிப்பதற்கு 7 என்று இரண்டு கோடுகளாக போட்டார்கள்.

எட்டாவது மாதம் இந்த உலகம் முழுமையாக கீழும் மேலும் இரண்டு பக்கமும் பூர்த்தியாகிறது என்பதைப் போட்டுக் காட்டினார்கள்.

ஒன்பதாம் மாதம் தாயின் உடலை விட்டு வெளியேறத் தயாராகிறது என்ற திருப்பத்தைக் காட்ட 9 என்ற ஒரு எண்ணைப் போட்டார்கள். பத்தாம் மாதம் கருப்பை வேறு பிண்டம் வேறாகப் பிரிவதைக் காட்டவதற்கு 10 என்று போட்டார்கள். விளக்கியுள்ள உருவக் குறிப்புகளும் கரு வளர்ச்சியின் சரித்திரத்தை ஒருவாறு விளக்குகிறது. இந்த சரித்திரம் தான் நாம் உபயோகிக்கும் 1 – 10 வரையான எண்கள்.

இயற்கைக்கு ஒத்ததாக இருப்பதால் இது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சரியாகப் பார்த்தால் இங்கு உயிர் இல்லாது ஏதாவது வளர முடியுமா? கருமூலம் என்று சொல்லக் கூடிய மரபணு அது உற்பத்தியாகிய நாளிலே உயிருடன் தான் உற்பத்தியாகிறது. அந்தக் கருமூலம் என்ற நிலையில் உயிரும் அதிலிருந்து எழும் காந்த ஆற்றலும் அதில் சுருங்கியுள்ள பதிவுகளும் இல்லை என்றால் அது வளர முடியாது. வாழ முடியாது. பெருக முடியாது. முழு உருவாகக் கருவாக உரு எடுக்க முடியாது.

அது தாய், தந்தை, இருவர் கரு மையங்களில் பதிவாக சீவகாந்த நுண் திவலைகளாக இருந்த நன்மைகள் அனைத்தும் சேர்ந்த கூட்டு ஆகும். கருமையத்தில் தான் தாய், தந்தையரின் வினைப்பதிவுகள் எல்லாம் பதிந்து அதுவே ஒரு காந்த ஆற்றல் வரைபடமாக ஆகிறது. அதை வைத்துக் கொண்டு அந்த உயிரே தனது வினைப் பதிவுகளுக்கேற்றவாறு இந்த உலகில் வாழ்வதற்கு வசதியாக இந்த உடலைக் கட்டிக் கொள்கிறது.

அங்கேயே வந்து விட்ட உயிரை உணர முடியாததினால் மூச்சு ஓடும் போது தான் உயிர் வந்தது என்ற தவறான எண்ணம் உடையவர்கள் 7வது மாதம் தான் உயிர் உண்டாகிறது என்றார்கள். அப்படியன்று தாய் - தந்தை இருவருடைய உயிர் என்று சொல்லக் கூடிய கரு முட்டை இரண்டும் உயிர்களும் அவரவர் வினைக்கு ஏற்ப ஒன்றுபட்டு ஓர் உயிராகி உடலாகிறது.

அப்பொழுது உருவாகி, அந்த உயிர் வளர்ந்த பிறகும் வெளியே வந்த பிறகும் இன்னும் பிறந்தது முதல் இன்று வரை அந்த உயிர் தாய் தந்தையாருக்கு எங்கு இருந்து வந்தது? கருத் தொடராகத் தொடர்ந்து கொண்டே பின்னோக்கிப் போனால் எண்ணிறந்த பிறவிகள் தாண்ட வேண்டியிருக்கும். ஒரே ஒரு ஆதி மனித உருவம் விலங்கினத் தொடராக இயல்பூக்கம் எனும் திருச் செயலால் சந்தர்ப்பவசமாக உலகில் தோன்றியதே அந்த இடம் வரையில் நாம் போய் நிற்போம்.

அங்கிருந்து தாய், தந்தையர் வரையில் இலட்சக்கணக்கான தலைமுறைகளில் ஆற்றிய செயல்கள் அந்தக் காலத்தில் பழக்கத்திற்கு ஏற்ப தொழிலுக்கு ஏற்ப உணவுக்கு ஏற்ப கட்டப்பட்ட உடல் அமைப்புகள் அவ்வளவும் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்.

உயிர் எவ்வாறு இருந்தது என்று அறிந்தோம். இந்தப் பிறவிக்கு முன்னதாக இந்த உயிர் எங்கு எப்படி இருந்தது. இன்றிருக்கும் உடலுக்கு எப்படி வந்தது என்று அறிந்தோம். கருவின் மூலம் தான் உயிர் வளர முடியும். என்ற முடிவை வள்ளுவப் பெருந்தகை.

தம் பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
தம்தம் வினையான் வரும் என

விளக்கியுள்ளார்.

ஒருவர் பிறக்கும் போதும் உடலை விட்டு உயிர் பிரிந்து போகும் நிகழ்ச்சியான மரணத்தின் போதும், மனம் எனும் அறிவின் படர்க்கையாற்றல் செயல்படுவ தில்லை. சீவகாந்தம் உடலியக்கத்தில் செயல்புரியும் போது நரம்பு மண்டலத் தொடர்பில் இரண்டு நிலைகள் உள்ளன.

தானியங்கி இயக்கம்

மனம் விரும்பி இயக்கம்

ஆழ்ந்த தூக்கத்தின் போதும் கோமா என்ற மயக்க நிலையின் போதும் மனம் விரும்பி இயக்கம் நின்று விடுகிறது.

தானியங்கி இயக்கத்திலிருந்து மன விரும்பி இயக்கம் ஆரம்பமாகும் முன்னர் பிறப்பு ஏற்படுகிறது. இந்த நிலையில் பிறப்பின் அனுபவம் எவருக்கும் கிட்டாது.

மரணத்திலோ,முதலில் மனம் விரும்பி இயக்கம் நின்று விடும். பிறகு பின் குறுக்கு ஏற்பட்டு கருமையம் உடைந்த பின்னர் தானியங்கி இயக்கமும் நின்று விடும். இதனால் மரணம் என்பதும் அனுபவமாக உணரமுடியாத ஒன்றாகி விடுகிறது.

பிறப்பும், இறப்பும் தெய்வீக இருட்டறையில் நடைபெறும். இறைநிலையின் திருவிளை யாட்டாகும். எனினும் அகத்தவப் பயிற்சியினால் மன அலைச்சுழல் விரைவைக் குறைத்துக் கொண்டு நொடிக்கு 1 – 3 வரையான சுழல்களான அலையிலும் விழிப்போடு இறப்புக்குப் பின்னும் உயிரின் நிலையை வான் காந்த களத்தோடு உளன்றி நன்கு உணர முடியும்.

எனவே பிறப்பும், இறப்பும் தெய்வீக இருட்டறையில் நடைபெறும். இறைநிலையின் திருவிளை யாட்டாகும். எனினும் அகத்தவப் பயிற்சியினால் மன அலைச்சுழல் விரைவைக் குறைத்துக் கொண்டு நொடிக்கு 1 - 3 வரையான சுழல்களான அலையிலும் விழிப்போடு இறப்புக்குப் பின்னும் உயிரின் நிலையை வான் காந்த களத்தோடு உளன்றி நன்கு உணர முடியும்.

இந்த அறிவு நிலை மறைபொருள் உணர் நிலையாகும். அப்படி என்றால் தெய்வம், உயிர், காந்தம் என்ற மூன்று மறை பொருட்களைப் பற்றிய அறிவு இந்நிலையில் தான் மனித அறிவுக்குக் கிடைக்கிறது. இந்த நுண்ணறிவு நிலையில் உணர்ந்து எழுதப்பட்டவை தான் இறைநிலையை உணர்த்திய வேதங்கள், மகாகாசம், பூதகாசம், சதாகாசம் என்ற மூன்றையும் பற்றிய உயிர் விளக்க நூல்கள், ஓங்காரம், பிரணவம் என்ற பெயர்களில் பேரியக்க மண்டல உயிரின் இயக்க நியதிகள். இவற்றைப் பற்றி எழுதப்பட்ட விரிவான உண்மையான வாழ்க்கை விளக்க நூல்கள் இவை யெல்லாம் அறிவின் முழுமை நிலை பெற்றவர்களிடம் இயற்கையாக மலரும். அறிதுயிலின் உள்ளொலி விளக்கத்தில் அகக்காட்சியாக விளங்கும் உண்மைகள் இத்தகைய உயர்ந்த அறிவின் நிலை மனித இனமாக பிறந்த எல்லோரிடமும் அமைந்திருக்கிறது. பழக்கம், ஆராய்ச்சி, அதைத் தொடர்ந்து கிடைக்கும் விளக்கம் விளக்கத்தின் வழியே வாழும் உயிர் நெறி இவை யுடையோருக்கே இத்தகைய அறிவு மலரும். அகத்தவம் அறநெறி என்ற பயிற்சிகளில் தோய்ந்து தெளிவு பெற்று வினைத்தூய்மை, மனித தூய்மை, கருமைத்தூய்மை பெற்றோருக்கு இயல்பாக இவ்வறிவு நிலை மலரும்.

இராமலிங்க வள்ளற் பெருமான் மகாகவி பாரதி மேலும் இவர்களைப் போன்ற பெருமக்கள் ஒரு தலைபட்ச சார்பற்ற மெஞ்ஞானிகள், அருளுரைகளில் இந்த சிறந்த தெய்வீகப் பேறிலை காணமுடிகிறது. காலம், இடம், தேவை, விருப்பம் இவற்றைக் கொண்டு தொடர் முயற்சியால் இந்த அறிவை எவரும் பெறமுடியும். முயற்சியும் பயிற்சியும் இன்றி தானாகவே – தக்கவரிடம் உரிய காலத்தில் இவ்வறிவு மலர்ந்து ஒளிவிட்டு உணர்த்துவதும் உண்டு.... (தொடரும்)

இணுவில் யோகாநீ

# நாய்க்குட்டி

பப்பி நல்ல நாய்க்குட்டி
பாய்ந்தே ஓடும் நாய்க்குட்டி
எப்போதும் என் பக்கத்தில்
வந்தே நிற்கும் நாய்க்குட்டி.

மாலை நேரம் என்னுடன்
மகிழ்ச்சியாக விளையாடிடும்
வாலை வாலை ஆட்டியே
வளைந்து நிற்கும் நாய்க்குட்டி

சல சலப்புக் கேட்டதும்
தாவித் தாவி குரைத்திடும்
கல கலப்புக் காட்டியே
கவலை போக்கும் நாய்க்குட்டி.

பள்ளிக்கூடம் விடும் வேளை
வாசலைப் பார்த்து நிற்குமாம்
பிள்ளை போல என்னைத் தழுவி
துள்ளிக் குதிக்கும் நாய்க்குட்டி

கு. தயாளினி, 2013 A/L
யா/ இணுவில் மத்திய கல்லூரி



சைவப்பாடசாலை ஒழுங்கை
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பிரதம ஆசிரியர் அவர்களுக்கு,

பெரும் மதிப்பிற்கும் கௌரவத்திற்குமுரியீர்!

தங்கள் தமிழருவியின் இதழ் அருவி நான்கு மனதைப் பெரிதும் கொள்ளை கொண்ட. படிப்படியாக சஞ்சிகை முன்னேற்றம் கண்டு வருகிறது. இதற்கு எனது பாராட்டுதல்கள்.

அருவி நான்கு எனது மனதைக் கொள்ளை கொண்டமைக்கு விசேட காரணமும் ஒன்றுண்டு. பேராசிரியர் சிவத்தம்பியும் அடியேனும் ஒன்றாகப் பாராளுமன்றத்தில் சேர்ந்து கடமையாற்றியவர்கள். எனது இனிய நண்பர். எப்பொழுதும் நகைச் சுவையாகப் பேசுவார். சமகால உரை பெயர்ப்பாளர்களது அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று ஓய்வு வேளைகளைக் கழிப்பது எனது வழமை. அங்கு எல்லா உரைபெயர்ப்பாளர்களுடனும் உரையாடி மகிழ்வதுமுண்டு. இந்த உரையாடல்களில் சிவத்தம்பி முக்கிய இடம்வகிப்பார். அந்நாட்களை என்றும் மறக்க முடியாது.

தமிழருவியில் பேராசிரியரின் படத்தை அட்டைப் படமாகப் போட்டுக் கனதியான முறையில் அவருக்கு அஞ்சலி செலுத்தி இருக்கிறீர்கள். அவரைப் பற்றிய சங்கதிகள் அனைத்தும் அபாரம் மனதை மிகவும் இன்புற வைத்தன. அட்டைப் படம் மிகமிகக் கவர்ச்சியானது. இதற்கும் எனது பாராட்டுதல்கள்.

பேராசிரியரைப் பற்றிய தகவல்களைப் படிக்க ஆரம்பித்து அருவி நான்கு முழுவதையுமே படித்து முடிக்க நேர்ந்தது. பதக்கஞ் சங்கிலியில் கருத்துமுண்டு. கற்பனையுமுண்டு. சுவையாக நயந்து படித்தேன்.

உணவுச் சங்கிலியோடு உருவாகிய சமூக மாற்றங்கள் எனும் கட்டுரையும் நல்லதோர் படைப்பு. பனையோலை இராமன் வழமைபோல நகைச்சுவை மிகுந்ததாக உள்ளது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் கட்டுரை பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது எனது கணிப்பு. சிற்பக் கலைஞர் கலாபூஷணம் சு. பாஸ்கரன் ஆச்சாரியாரின் செவ்வியும் இன்றைய காலத்தின் தேவைக்குரியதுதான். மிகப் பயனுள்ளதோர் செவ்வி இது. புதிய வேதம் மிகச் சுவாரசியமாகத் தொடர்கிறது. இணுவில் மத்திய கல்லூரி மாணவி செல்வி வானதி விஸ்வநாதனுக்கு இளைஞர்களுக்கான விருது வழங்கற் போட்டியில் தாங்கள் முதலிடம் கொடுத்தது சரியானதே. "இல்லை இனித் துன்பங்கள்" இதற்கும் யான் ஒரு சபாஷ் போட விரும்புகிறேன். பொதுவில் இளைஞர்களது படைப்புக்கள் அனைத்துமே சிறப்பானவை. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஐயா அவர்களின் கட்டுரையைப் பற்றி யான் சொல்ல என்ன இருக்கிறது. இன்றைய தலைமுறையினருக்கு அவரது கட்டுரைகள் காலத்தின் தேவை என்பேன். ச. வே. பஞ்சாட்சரம் ஐயா கனடாவிலிருந்து எழுதி இருப்பது தமிழருவியின் சிறப்பைக் காட்டுகிறது. அருவி நான்கில் வெளிவந்துள்ள எல்லா அம்சங்களுமே ஒவ்வொரு வகையில் தனித்தனியாக முத்திரை பதித்து நிற்கின்றன. அச்சு மிகமிகக் கவர்ச்சியானது. அச்சுப்பிழைகள் தென்படவில்லை. ஆசிரியர்களுக்கும், இயக்குனர் திரு. த. கணேசமூர்த்தி அவர்களுக்கும் எனது பாராட்டுகள் உரியதாகுக. காலப்போக்கில் ஈழத்துச் சஞ்சிகைகளின் வரலாற்றில் தமிழருவி தனக்கெனத் தனியானதொரு இடத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் என்பது எனது திடமான நம்பிக்கை. திரு. கணேசமூர்த்தி அவர்கள் விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் உள்ள ஒரு மூர்த்தி என்பது எனது கணிப்பில். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். வாழ்க. வளர்க. தமிழருவி என்றென்றும் சலசலத்துப் பாய்ந்து ஓடிக்கொண்டே இருக்கும். ஒரு பொல்லாப்பும் வராது.

செல்லப்பா நடராசா
மூத்த பத்திரிகையாளர்

---

மதிப்பிற்குரிய 'தமிழருவி' ஆசிரியர்கட்கு!

'தமிழ்' அருவி இடைவிடாமல் தொடர்ந்து பாய வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன். 'எமது தங்கத் தமிழ்த் தந்தையை' ஒருபுறம் நினைத்துப் பார்க்க வைத்தமைக்கு நன்றி. அவரை ஒரு தடவைகூட நேரில் பார்க்காத துரதிஸ்டசாலி நான். ஆனாலும் பெரும்பாலான அவருடைய 'நாடகம்' சார் நூல்களை (மட்டும்) படித்த அதிஸ்டசாலி. பேணிக் காக்க வேண்டிய பொக்கிஷங்கள் அவை.

அடுத்து அற்புதமான ஆய்வுகளை எமக்காக தேடித் தேடித் தரும் அம்மா மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் பெண்மையின் நிலை பற்றிய தமிழிலக்கிய தகவல்களும் பயனுடையதாகவே இருந்தன. மேலும் தமிழருவியின் 4ஆம் பாகம் சிறப்பான தரத்துடனும் என் போன்ற சஞ்சிகை ஆர்வலர்கள் பயன்பெறுமாறும் இருக்கிறது. மேலும் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் தங்களது உயர் சிந்தனைக்கு மீண்டும், மீண்டும் நன்றிகள். இக்கடிதத்துடன் எனது துறை சார்ந்த சிறு கட்டுரையை அனுப்புகிறேன். இதன் தரமும், பயனும் கருதிப் (தகுதி) பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றி

அ. உமாமகேஸ்வரி
பிள்ளையார் கோவிலடி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

## எழுதுங்கள்! வெல்லுங்கள்!

### மாதாந்த கவிதைப் போட்டி இல - 5

மாணவர்களின் கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் இப் போட்டிகள் நடத்தப்படுகின்றது. போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவருக்கு முறையே 500/-, 300/-, 200/- வழங்கப்படும். தரப்பட்ட கவிதைகளைத் தொடர்ந்து அந்த சந்தத்தில் நான்கு அடிகள் வீதம் கொண்ட மூன்று பாடல்கள் எழுத வேண்டும். இடைவெளி கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

## எழுதுங்கள்! வெல்லுங்கள்!

### பாடசாலை மாணவர்களுக்கான மாதாந்த கட்டுரைப் போட்டி இல - 5

இன்றைய மாணவர்களின் எழுத்தாற்றல் குறைவாக இருப்பதற்குக் காரணம் அவர்களிடம் போதிய வாசிப்புப்பழக்கம் இல்லாமையே எனக் கட்டுரை அமைய வேண்டும். 500 சொற்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும். முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கு முறையே 1000/-, 750/-, 500/- வழங்கப்படும். இந்த ஆக்கம் குறித்த மாணவருடையது என்பதை அதிபர் உறுதிப் படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி 30.01.2012.

## இம்மாத கவிதைப் போட்டி

### ஆசிரியர்

கல்விக் கண்ணைத் திறப்பதையே
கடமை ஆகக் கொண்டவராம்
பள்ளிக் கூடம் செல்வோர்க்கு
பாடம் சொல்லித் தருபவராம்

* * *

.................................
.................................
.................................
.................................

* * *

.................................
.................................
.................................
.................................

* * *

.................................
.................................
.................................
.................................



## அரச இலக்கிய விருதுபெற்ற தமிழ்ப் படைப்பாளிகளை தமிழருவி வாழ்த்துகிறது!

- சாஹித்திய ரத்னா உயர் விருது – பேராசிரியர் சபா ஜெயராசா
- சிறந்த ஓவியம், வடிவமைப்பு சிறுவர் நூல்- "பறக்கும் பெற்றவர் - ஓ. கே. குணநாதன்
- சிறந்த இளையோர் இலக்கியம் - "நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்" – விருது பெறுபவர் - திருமலை ச. அருளானந்தம்
- சிறந்த நாடக நூல் - "மனித தர்மம்" விருது பெறுபவர் - கலைஞர் கலைச்செல்வன்
- சிறந்த கவிதை நூல் - "தழலாடி வதி" விருது பெறுபவர் - கந்தையா கணேசமூர்த்தி
- சிறந்த சிறுகதை நூலுக்கான விருதினை இருவர் பெற்றுள்ளார்கள்

1. முக்கூடல் - க. சட்டநாதன்
2. ஒப்பாரிக் கோச்சி – மு. சிவலிங்கம்

- சிறந்த நாவல் - "வாசாப்பு" – விருது பெறுபவர் - எஸ். ஏ. உதயன்
- சிறந்த மொழிபெயர்ப்பு நாவல் - "கசந்த கோப்பி" – விருது பெறுபவர் - ரா. சடகோபன்
- சிறந்த நானாவித இலக்கியம் - "ஈழத்து கலை இலக்கிய உலகு" – விருது பெறுபவர் - கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
- சிறப்பு விருது – "ஒரு குடம் கண்ணீர்" பாராட்டுப் பத்திரம் பெறுபவர் - அஷ்ரப் சிஹாப்தீன்
- சிறந்த காவியம் - "தீரன் திப்பு சுல்தான் காவியம்" – விருது பெறுபவர் - காப்பியகோ ஜின்னா ஹரிபுத்தீன்
- ஓ. கே. குணநாதனின் "பறக்கும் ஆமை" என்ற அவரது சிறுவர் இலக்கிய நூல் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

### சிந்தனைச் சுடர்

- விழி! சோர்வைக் கிழி! உன்னைப் பிழி! தெரியும் ஒளி!
- கைக்குட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டது கண்ணீர் துடைக்க அல்ல. வேர்வை துடைக்க.
- நதி நகர்ந்துகொண்டே இருக்கிறது. பூ முளைத்துக் கொண்டே இருக்கிறது. நீ தேடிக்கொண்டே இரு.
- அடங்கிவிடாதே அச்சமும், தாமதமும் உன்னை அடைக்கும் இரு அடைப்புக்குறிகள்.

## முதுமையைக் காப்போம்



மரணத்தின் வாசற்படி முதுமை
- அங்கு
இங்கிதமாய் ஓய்வைக் கழித்திடும்
காலத்திலே
ஈரைந்து மாதங்கள் சுமந்த தாயையும்
- உனை
ஏணியாய் நின்று உயர்த்திவிட்ட தந்தையையும்
வீட்டுச் சுமையென வெளியே ஒதுக்குகிறாய்.

அறிவுரைகள் கொண்ட அனுபவத் தொகுப்பு
அவர்கள்
வாழ்க்கையின் நியதிகளை ஆழ அறிந்தவர்கள்
மனதளவில் வல்லமை மிக்க மகான்கள்
அனுபவத்தில் இளமை மிக்கவர்கள் - அவர்களைப்
பழமை என்று எண்ணாதே பண்பட்டவர்கள்!

மனிதா! வளமனைத்தையும் பயன்படுத்த எண்ணும்
- நீ
முதுமை வளத்தைப் பராமரிக்கத் தவறுகிறாய்
நரைமுது சமுதாயம் உனது புதிய சக்தியென்ற
நல்லறிவு நீ பெறவேண்டும் - ஏனெனில்
அவர்கள் ஓர் இலவச மரம்

விமலாம்பிகைபாகன் திவாகரன்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## விடுகதைகள்


1. ஊரைக் கண்டால் பாயும் கொள்ளி, நீரைக் கண்டால் பயந்தாங்கொள்ளி - அவன் யார்?
2. பச்சைப் பெட்டகத்துக்கு சிவப்புக் கதவு - அது என்ன?
3. ஓட்டு வீட்டைத் தாண்டி ஓட முடியாச் சோம்பேறி - அவன் யார்?
4. வல்லவன் வாலும் வாளாக மாறும் - அது என்ன?
5. அன்றாடம் தீப்பிடித்தும் அழியாத வீடு - அது என்ன?
6. குதிரையோ கறுப்பு, குளிப்பாட்ட வெளுப்பு - அது என்ன?
7. வெள்ளைக் கிணத்தில் கறுப்புக் கோலிக்காய் - அது என்ன?

விடைகள்
1. நெருப்பு 2. கிளி 3. ஆமை
4. தேள் 5. அடுப்பு 6. உழுந்து
7. கண்


மிலேனியம் பெஷன்
&
பொம்பே பாஸர்
T.P : 021 222 9399
Fax : 021 222 2967
No: 10, Power House Road,
Grand Bazaar, Jaffna.

கிளைகள்



ஜீவல் பிளாசா
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.
Jewel Plaza
91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
91, Power House Road,
Jaffna.
T. P : 021 222 3124


Topaz
Specialist in
Wedding Sarees
and
Party Sarees
Wedding Frocks
and
Party Frocks
and
All Kinds Items
No: 70, Grand Bazaar Road,
Jaffna.
T.P : 021 222 4743










றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டைச் சந்தி, யாழ்ப்பாணம். 0776624386